

# பொருளியல் நோக்கு


ஜன. / பெப்.
1979



















## இலங்கையின் பொருளாதாரம் 1978

மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொத்த தேசிய உற்பத்தியில் வெவ்வேறு துறைகளினதும் பங்கு (1959) காரணிச்செலவு விலைகளில்

| துறைகள் | 1959 | | 1975 | | 1976 | | 1977 | | 1978 | | சதவீத அதி கரிப்பு 1977 1978 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா பத்து இலட்சம் | சத வீதம் | ரூபா பத்து இலட்சம் | சத வீதம் | ரூபா பத்து இலட்சம் | சத வீதம் | ரூபா பத்து இலட்சம் | சத வீதம் | ரூபா பத்து இலட்சம் | சத வீதம் | |
| 1. விவசாயம், காட்டுத்தொழில், வேட்டையாடுதல், மீன்பிடி .. | **2,302** | **39.1** | **3,956** | **32.2** | **3,568** | **31.0** | **3,828** | **31.9** | **3,991** | **30.7** | **4.2** |
| 1.1 விவசாயம் .. | 2,148 | 36.5 | 3,352 | 30.0 | 3,308 | 28.8 | 3,568 | 9.7 | 3,690 | 28.4 | 3.4 |
| 1.1.1 தேயிலை .. | (642) | (10.9) | (733) | (6.6 | (674) | (5.9) | (715) | (6.0) | (682) | (5.2) | (4.6) |
| 1.1.2 இறப்பர் .. | (183) | (3.1) | (295) | (2.6) | (299) | (2.6) | (296) | (2.5) | (315) | (2.4) | (6.4) |
| 1.1.3 தென்னை .. | (404) | (6.9) | (419) | (3.7) | (365) | (3.2) | (332) | (2.7) | (385) | (3.0) | (16.0) |
| 1.1.4 நெல் .. | (312) | (5.3) | (479) | (4.3) | (513) | (4.4 | (687) | (5.7) | (775) | (6.0) | (12.8) |
| 1.1.5 ஏனையன .. | (453) | (7.7) | (1,426) | (12.8) | (1,457) | (12.7) | (1,538) | (12.8) | (4,533) | (11.8) | (0.3) |
| 1.2 காட்டுத்தொழில் .. | 93 | 1.6 | 114 | 1.0 | 120 | 1.0 | 112 | 0.9 | 133 | 1.0 | 18.8 |
| 1.3 மீன்பிடி .. | 61 | 1.0 | 137 | 1.2 | 140 | 1.2 | 148 | 1.2 | 167 | 1.3 | 12.8 |
| 2. சுரங்கமகழ்தல் .. | **31** | **0.5** | **248** | **2.2** | **354** | **3.1** | **311** | **2.6** | **414** | **3.2** | **32.2** |
| 3. உற்பத்தி .. | **682** | **11.6** | **1,462** | **13.1** | **1,489** | **12.9** | **1,505** | **12.5** | **1,632** | **12.6** | **8.4** |
| 3.1 ஏற்றுமதிப் பதப்படுத்துதல் .. | 373 | 6.3 | 460 | 4.1 | 432 | 3.7 | 435 | 3.6 | 446 | 3.4 | 2.5 |
| 3.2 தொழிற்சாலை உற்பத்தி .. | 263 | 4.5 | 832 | 7.4 | 871 | 7.6 | 881 | 7.3 | 987 | 7.6 | 12.0 |
| 3.3 சிறு கைத்தொழில் .. | 46 | 7.8 | 171 | 1.5 | 185 | 1.6 | 189 | 1.6 | 200 | 1.5 | 5.8 |
| 4. நிர்மாணம் .. | **283** | **4.8** | **503** | **4.5** | **531** | **4.6** | **480** | **4.0** | **629** | **4.8** | **31.0** |
| 5. மின்சாரம், வாயு, நீர் சௌக்கிய சேவைகள் .. | **9** | **0.1** | **91** | **0.8** | **99** | **0.9** | **109** | **0.8** | **123** | **0.9** | **20.6** |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்துதல் தொடர்பு சாதனங்கள் .. | **541** | **9.2** | **1,100** | **9.8** | **1,143** | **9.9** | **1,198** | **10.0** | **1,182** | **9.9** | **7.3** |
| 7. மொத்த சில்லறை வியாபாரம் .. | **801** | **13.6** | **501** | **13.4** | **1,545** | **13.4** | **1,623** | **13.5** | **1,780** | **13.6** | **9.7** |
| 7.1 இறக்குமதிகள் .. | 139 | 2.3 | 125 | 1.1 | 146 | 1.3 | 147 | 1.2 | 261 | 2.0 | 77.5 |
| 7.2 ஏற்றுமதிகள் .. | 104 | 1.8 | 171 | 1.5 | 126 | 1.1 | 243 | 2.0 | 277 | 2.1 | 14.0 |
| 7.3 உள்ளூர் .. | 558 | 9.5 | 1,205 | 10.8 | 1,273 | 11.0 | 1,233 | 10.3 | 1,242 | 9.5 | 0.7 |
| 8. வங்கி, காப்புறுதி அசையா சொத்துக்கள் .. | **51** | **0.9** | **184** | **1.6** | **191** | **1.7** | **229** | **1.9** | **263** | **2.0** | **14.8** |
| 9. வதிவிட உரிமை .. | **201** | **3.4** | **350** | **3.1** | **353** | **3.1** | **360** | **3.0** | **377** | **2.9** | **3.9** |
| 10. பொது நிர்வாகமும் பாதுகாப்பும் .. | **301** | **5.1** | **646** | **5.8** | **676** | **59** | **703** | **5.8** | **760** | **5.8** | **8.1** |
| 11. ஏனைய சேவைகள் .. | **728** | **12.3** | **1,513** | **13.5** | **1,593** | **13.8** | **1,704** | **14.2** | **1,797** | **13.8** | **5.5** |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி .. | **5,930** | **100.6** | **11,194** | **100.2** | **11,543** | **100.3** | **12,042** | **100.2** | **13,043** | **100.3** | **8.3** |
| 13. தேறிய வெளிநாட்டுக் காரணி வரு... | **37** | **0.6** | **27** | **0.2** | **37** | **0.3** | **25** | **.2** | **41** | **0 3** | — |
| 14. மொத்த தேசிய உற்பத்தி .. | **5,893** | **100.0** | **1,167** | **100.0** | **11,506** | **100.0** | **12,016** | **100.0** | **13,001.9** | **100.0** | **8.2** |

## தேசிய உற்பத்தியும் வருமானமும்

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் 1978 ல மொத்த தேசிய உற்பத்தி 3613.9 கோடி ரூபாவாக இருக்குமென மத்திய வங்கி (உத்தேசமாக) மதிப்பீடு செய்துள்ளது. இது முன்னைய வருடத்தை விடவும் 23.5 சதவீதம் அதிகமானதாகும். விலையதிகரிப்புகளுக்கான கழிவுகளின் பின்னர், 1978 ல் மொத்த தேசிய உற்பத்தி (1959 ன்) நிலையான விலைகளி 1300.2 கோடி ரூபாவாக இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது. இது 8.2 சதவீத அதிகரிப்பாகும். எனவே, கடந்த தசாப்தத்தில் பதிவு செய்யப்பட்ட சராசரி மட்டங்களை விடவும் இவ்வாண்டில் இலங்கை இரட்டிப்பான வளர்ச்சி வீதத்தை எய்தியிருக்கின்றது. ஆயினும், அபிவிருத்தியானது மொ.தே.உ. அதிகரிப்பினுலோ, தலா நபர் வருமான அதிகரிப்பினுலோ ஏற்பட்டு விடுவதில்லை. நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படுவதையும், வாழ்க்கைத்தர நிலைமைகளில் ஒட்டுமொத்தமாக ஏற்படும் விருத்தியையுமே அபிவிருத்தி என்று நாம் சுட்டுவோம்.

மத்திய வங்கியின் கூற்றுப்படி, முன்னைய வருடங்களைப் போலன்றி இவ்வாண்டில் பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் துரிதமான இயக்கம் ஏற்பட்டிருக்கின்றது. மொத்த தேசிய உற்பத்தியிற் விவசாயத்துறையின் பங்கு 32 சதவீதத்திலிருந்து 31 சதவீதமாகக் குறைந்திருப்பதும், நிர்மாணத்துறையின் பங்கு 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக அதிகரித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சுரழ்கமகழ்தல், நிர்மாணம், மின்சாரம், நிதி, உற்பத்தி, வர்த்தகம் ஆகிய துறைகளில குறிப்பிடத்தக்க அதிகரிப்பு தென்பட்டிருக்கின்றது. வர்த்தகம், கைத்தொழில் என்பவற்றின் வளர்ச்சிக்கு இறக்குமதிகள் தாராளமயப்படுத்தப்பட்டமையே பிரதான காரணம் என்று மத்திய வங்கி கூறுகின்றது. விவசாயத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு புதிய செலாவணி வீதங்கள் காரணமாக உற்பத்தியாளர் கூடிய இலாபமுழைத்தமையும், அதிகரித்த நெல் விலைகளும் காரணமாயிருந்தன. முதலீட்டுச் சூழல் சாதகமாக மாறியமை, வர்த்தகத்தின் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை என்பவற்றின் விளைவாக நிர்மாணம் போன்ற துறைகளில் விஸ்தரிப்பு ஏற்பட்டது.

1978 நடுப்பகுதியில் நாட்டின் சனத்தொகை 1 கோடியே 42 லட்சம் என உத்தேசமாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இது 1.7 சதவீத அதிகரிப்பாகும். எனவே, மெய் அளவுகளில் தலா நபருக்கான மொத்த தேசிய உற்பத்தி 917/- ரூபாவாகும். இவ்வதிகரிப்பு 6.4 சதவீதமானதாகும்; இதில் முன்னைய வருடத்தில் 2.6 சதவீத அதிகரிப்பே பதிவு செய்யப்பட்டிருந்தது. ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட தீவிர அதிகரிப்பு காரணமாக 1976 ல் 35 சதவீதமாகவும், 1977 ல் 31 சதவீதமாகவும் அதிகரித்த வர்த்தக மாற்றுவீதம் இவ்வாண்டில் எல்லை அதிகரிப்பினையே காட்டியது. இதன் காரணமாக, மெய் மொத்த தேசிய உற்பத்தியை வர்த்தக மாற்றுவீத மாற்றங்களுடன் பொருத்திப் பெறப்படும் மெய் தேசிய வருமானம் இவ்வாண்டில் 9.8 சதவீதமாக மட்டுமே அதிகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருளியல் நோக்கு**

மலர் 4 இதழ் 10 / 11 ஜன./பெப். 1979

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா.

## சிறப்புக்கட்டுரைகள்

டிரேஸி லேட்டென் 21 விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்றால் என்ன?

ஜோன் கூரியன் 27 இந்தியாவின் கடற்றொழில் பொருளாதாரம்

சுசான் லிம் 31 மூளைசாலிகள் வெளியேற்றம் - மலேசிய அனுபவம்

## விசேஷ அறிக்கை

3 1978 ல் இலங்கையின் பொருளாதாரம் பிரதான போக்குகள் குறித்த ஓர் ஆய்வு

## நிரல்கள்

2 நிகழ்ச்சிக் குறிப்பேடு

13 நகராக்கம்

16 வெளிநாட்டுச் செய்தித் தொகுப்பு

17 விவசாயம்

20 வியாபாரப் பொருட்கள்

**நன்றி**

இந்த இதழுக்கான இலங்கையின் பொருளாதாரம் குறித்த விசேஷ அறிக்கையைத் தயார் செய்வதில் மத்திய வங்கியின் ஆராய்ச்சிப்பகுதி பல்வேறு வகைகளிலும் உதவியுள்ளது.

**சந்தாதாரர்கள் கவனிக்கவும்:**

எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சில சூழ்நிலைகளால் அச்சடிப்பதில் ஏற்பட்டிருக்கும் தாமதங்களைத் தவிர்க்கும் பொருட்டு நாம் இரு இதழ்களை (ஜனவரி/பெப்ரவரி 1979) ஒருங்கிணைத்துள்ளோம். எவ்வாறிருப்பினும், எமது சந்தாதாரர்கள் 12 தனித்தனி இதழ்களைப்பெற உரித்துடையவர்கள் என்பதைத்தெரிவித்து கொள்கிறோம்.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

**அடுத்த இதழில்**

- சிறுவரும் அபிவிருத்தியும்
- இலங்கையில் மூளைசாலிகள் வெளியேற்றம்
- பண்ட உடன்படிக்கைகள்

**அட்டைப்படம்**

தேசத்தின் பொருளாதாரத்தின் பல்வேறு கூறுகளையும் உள்ளடக்கிய ஒரு பார்வை.
வடிவமைப்பு: [illegible] கன்னங்கரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

ஜனவரி:

1 1979 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து 1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் அமுலுக்கு வந்தது. அது, உள்ளூர் வியாபாரத்துக்கான சட்ட திட்டங்கள், நுகர்வோர் தொடர்பை அதிகரித்தல், சந்தை வியாபாரப் பழக்கத்தை உருவாக்குதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

1979-1981 காலப்பிரிவுக்கான எஸ். டீ. ஆர். ஒதுக்கின் கீழ் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 1.24 கோடி எஸ். டீ. ஆர். களை (24.15 கோடி ரூபா) வழங்கியுள்ளது. இது நிதியின் இலங்கைக்கான ஒதுக்கீட்டில் 10.4 சத வீதமாகும்.

இலங்கைக்கும் மக்கள் சீனக் குடியரசுக்குமிடையிலான ஐந்தாண்டு வியாபாரக் கொடுக்கல் வாங்கல் உடன் படிக்கையின் கீழ் இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக ஒப்பந்த வரைவு அமுலுக்கு வந்தது. சீனவிடமிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டிய பொருட்களில் அரிசி தவிர்க்கப்பட்டுள்ளமை இந்த உடன்படிக்கையின் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். 1952 இல் சீனவுடனான வியாபாரத் தொடர்பு ஆரம்பமாகியது. அன்றிலிருந்து இன்றுவரை அரிசி மிக முக்கிய வர்த்தகப் பண்டமொன்ருக இருந்து வந்துள்ளது.

6 வங்கிகளில் நடைபெற்றுவரும் மெதுவாக வேலைசெய்தல் (GO SLOW) தொடருமேயாயின் இந்தியா பெரிய நிதி நெருக்கடிகளை எதிர்நோக்க வண்டி நேரிடுமென்று பம்பாய் 'இக்கனமிக்ஸ் டைம்ஸ்' குறிப்பிட்டுள்ளது. கைத்தொழில் உற்பத்தி, வர்த்தக நடவடிக்கைகள், பொருட்களின் சந்தை இருப்பு, பரிமாற்றம் என்பவையும் இந்நிலைமையினுல் பாதிப்படையும்.

6 'ஆசியன் வோல் ஸ்ட்ரீட் ஜர்னல்' செய்திப்படி, இயற்கை இறப்பர் உற்பத்தி அதிகரித்துவரும் உலகலாவிய தேவையை நிறைவு செய்ய முடியாதிருப்பதனுல் உற்பத்தியாளர்கள் ஆபத்தான ஒரு நிலையில் இருக்கின்றனர். 1980 ஆம் ஆண்டின் இயற்கை இறப்பர் உற்பத்தி கேள்வியை விட 25 இலட்சம் தொன்களால் குறைவாக இருக்குமென்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. கேள்வியைப் பூர்த்தி செய்ய முடியாமையினுலும், உயர் விலையினுலும் செயற்கை இறப்பர் கூடிய அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும்.

8 இலங்கை வர்த்தக வங்கிகளில் வெளிநாட்டார் வைத்திருக்கும் தடை செய்யப்பட்ட கணக்குகளில் பற்று வரவுகளை மேற்கொள்வதற்கு இனிமேல் செலவாணிக் கட்டுப்பாட்டாளரின் முன்னனுமதி தேவைப்படாது. இப்பற்றுக்கள் உள்ளூர் கொடுப்பனவுகளுக்காக இருத்தல் வேண்டும்; அத்துடன் வரவுகள் மீளளிப்பு இலாபப் பங்கீடு என்பவை தொடர்பானவையாக இருத்தல் அவசியமாகும்.

இலங்கையின் புதிய விமானச் சேவையான 'எயா லங்கா லிமிட்டட்' ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது சட்ட பூர்வமான, 100/- ரூபா வீதம் 5,000,000 பங்குகளின் மூலம் 50 கோடி ரூபாய் பங்கு மூலதனத்தைக் கொண்ட ஒரு பொதுக் கம்பனியாகும். இலங்கை அரசாங்கம் இதன் மூலதன இருப்பில் 60% ஐப் பெற்றிருக்கும். இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம் என்பன மீதிப் பங்குகளை வைத்திருக்கும்.

13 அம்பாந்தோட்டை மாவட்ட ஒழுங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டத்திற்கென 55 கோடி ரூபா உடனடி உதவியை வழங்க நோர்வே இணங்கி இருப்பதாக பத்திரிகைச் செய்தியொன்று குறிப்பிட்டது.

17 சிகரட், புகைக்குழாய் புகையிலை போன்ற உற்பத்திகளுக்கான தீர்வை வரியை கிலோ ஒன்றுக்கு ரூ. 17.17 சதத்திலிருந்து ரூ. 205.69 சதத்துக்கு உயர்த்த அரசு தீர்மானித்துள்ளது. சாராயம், பியர் போன்றவற்றுக்கான தீர்வை வரியையும் அரசாங்கம் அதிகரித்துள்ளது.

தங்காலை - முல்கிரிகலைப் பிரதேச கிரமஓயாத்திட்டம் தொடக்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் மூன்று கட்டங்களாக முடிக்கப்படவுள்ளது. முதலாம் கட்டத்தில் கிரம ஓயாச் சுரங்கத்தைப் புதுப்பித்தல், லியனதெனிய, வாவுவ என்னுமிடங்களில் இரண்டு அணைகளைக் கட்டுதல் என்பன அடங்கும். இத்திட்டத்துக்குச் செலவாகுமென்று உத்தேசிக்கப்பட்டுள்ள 45 இலட்சம் ரூபாவை நோர்வே அபிவிருத்தி உதவி நிருவனமான 'நோராட்' வழங்கும்.

16 கைத்தொழில் மூலப் பொருட்கள், கட்டடப் பொருட்கள், ஏனைய உற்பத்திகள் என்பவற்றை உள்ளடக்கிய 84 நுகர் பொருட்கள், ''சமூக வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை'' யாக இருப்பதனுல் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் அவற்றுக்கும் செல்லுபடியாக்கப்படுமென அரசாங்கத்தின் அதி விஷேட வர்த்தமானியொன்று அறிவித்தது.

18 அடிப்படை விஞ்ஞான ஆய்வுக்கான மத்திய நிலையமொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் ஒரு கோடி ரூபாவை அனுமதித்துள்ளது. வானியல் ஒழுங்குமுறை, விண்வெளி விஞ்ஞானம், பௌதீகம், இரசாயனம், உயிரியல், வாழ்க்கை மூலகம், தொற்று நோய்க்கான காரணங்கள் என்பவை இந்நிறுவனத்தின் ஆராய்ச்சி முயற்சிகளாக இருக்கும்.

18 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மசோதா குறித்த அறிவித்தலை பிரதம மந்திரியும் வீடமைப்பு அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

20 'ஏசியன் வோல் ஸ்ட்ரீஸ ஜர்னல்' அறிக்கையின்படி, மலேசிய வர்த்தக வங்கிகள் அரசாங்கத்தினுல் கொண்டு வரப்படும் புதிய சட்ட விதிகளின் பிரகாரம் நாட்டின் பிரதான நிதி அமைப்புடன் ஒருங்கிணைக்கப்படும். வங்கிகளுக்கு முதன் முதல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருப்பதுடன், அவற்றின் நடவடிக்கை மீது சில கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. அதே வேளையில் இவ்வங்கிகளின் கொடுகடன் தளம் விஸ்தரிக்கப்படுவதுடன், மத்திய வங்கியுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருக்கவும் வழிசமைக்கப்படும்.


26 அவுஸ்திரேலியா கொண்டுவர இருக்கும் புதிய வங்கிச் சட்டம் பல சிறப்பம்சங்களைக் கொண்டதாக இருக்கும். சர்வதேச வங்கி அமைப்புடன் ஒத்துப்போகக்கூடியதாக நெகிழ்ச்சித்தன்மையுடன் கூடிய மாற்றங்கள், வங்கி இரகசியம் என்பன இவற்றுள் முக்கியமானவையாகும். பெயர் குறிப்பிடப்படாத சேமிப்புக் கணக்குகளுக்கும், இரகசியப் பேணுவுக்கும் இச்சட்டம் இடமளிக்குமென 'லண்டன் பினன்சியல் டைம்ஸ்' செய்தியொன்று கூறியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1978 ல் இலங்கையின் பொருளாதாரம் - பிரதான போக்குகள் குறித்த ஓர் ஆய்வு


மொத்த தேசிய உற்பத்தி




செலாவணி வீதங்கள்




செலவும் வருமானமும்




பொருளாதாரக் குறிகாட்டிகள்

கடந்த ஒரு தசாப்த காலதித்ல் பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 1978 ல் இலங்கை எய்தியது. உத்தேச மதிப்பீடுகளின் பிரகாரம் (1959 ன் நிலையான விலைகளில்) நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியின் மெய்ப்பெறுமானம் 1270 கோடி ரூபாவாக இருந்தது. இவ்வளர்ச்சி 1977 ம் ஆண்டை விடவும் 6 சதவீதம் அதிகமானதாகும். தற்போதைய (1978) விலைகளின் பிரகாரம், மொத்த தேசிய உற்பத்தி 19 சதவீதம் வளர்ச்சியடைந்திருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. வீக்க அமுக்க நிலைமைகள் பொருளாதாரத்தின் மீது கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்தியிருப்பதனை இது காட்டுகின்றது. 1978 ம் ஆண்டின் நடுப்பகுதியில் நாட்டின் சனத்தொகை 1 கோடியே 42 லட்சம் என மதிப்பிடப்பட்டிருந்தது; இது இதற்கு முன்னைய வருடத்தைவிட 1.7 சதவீத அதிகரிப்பாகும். எனவே, (1959ன் நிலையான விலைகளில்) தலா நபர் தேசிய உற்பத்தி 900 ரூபாவாக இருந்திருக்கின்றது; 1977ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதில் 4.4 சதவீத வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. தற்போதைய விலைகளில் தலா நபர் வருமானம் ரூ. 2,440 ஆக இருந்திருக்கின்றது; 1977 ல் இது ரூ. 2,084 ஆக இருந்தது. பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் வீக்க நிலைமைகளையே இதுவும் பிரதிபலிக்கின்றது. (அட்டவணை 1 ல் காட்டப்பட்டுள்ளது போன்று) 1978ல் பதிவு செய்யப்பட்டிருக்கும் பொருளாதார வளர்ச்சி வீதம், எழுபதுக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க ஒரு விருத்தி நிலைமையாகத் தென்படுகின்றது.

நெல்லுற்பத்தியில் ஏற்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பு, கூடிய றப்பர் உற்பத்தி, 1977 ம் ஆண்டில் ஏற்பட்ட மந்தத்தின் பின்னர் தெங்கு உற்பத்தி மீட்சி அடைந்தமை, நிர்மாணத்துறை நடவடிக்கைகளின் விஸ்தரிப்பு, இறக்குமதிகள் தாராளமயப்படுத்தப்பட்டதை யடுத்து வர்த்தகம், போக்குவரத்து போன்ற துறைகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, (குறிப்பாக அரச துறைக் கைத்தொழில்களின்) வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பவற்றின் விளைவாகவே 1978 ம் ஆண்டில் பொருளாதாரம் சாதகமான விருத்தி நிலைமைகளைக் காட்டியது. எவ்வாறிருப்பினும், மறுபுறத்தில் ஏற்பட்ட சில பாதகமான நிலைமைகள் இவ்வளர்ச்சிகளை ஈடுகட்டுவதாக இருந்தன. இறக்குமதிப் பொருட்களின் கடுமையான போட்டி காரணமாக கைத்தறி, செயற்கைப்பட்டு போன்ற ஜவுளிக் கைத்தொழில்கள் பாதிப்படைந்ததுடன், தேயிலை, உப உணவுப் பயிர்கள் என்பவற்றில் உற்பத்தி வீழ்ச்சி காணப்பட்டது. மேலும், நாட்டின் ஏற்றுமதி வளர்ச்சியும் மந்த கதியிலேயே இருந்தது.

(தற்போதைய விலைகளில்) நாட்டின் மொத்த நிலையான தேசிய மூலதனவாக்கம் ரூ. 680 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய வருடத்தைவிட 31 சதவீத அதிகரிப்பாகும். மொத்த தேசிய உற்பத்தியில் மூலதனவாக்கத்தின் பங்கு 1977 ல் 16 சதவீதமாகவும், 1978 ல் 19 சதவீதமாகவும் இருந்து வந்துள்ளது. முதலீட்டுச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பில் ஒரு பகுதி உண்மையான அதிகரிப்பாக இருந்ததுடன், மறு பகுதி முதலீட்டுப் பொருட்களின் விலைகளின் அதிகரிப்பினால் ஏற்பட்டதாக இருந்தது. முதலீட்டுப் பொருட்களின் மொத்த விலைச் சுட்டெண் 1977 ம் ஆண்டின் அளவை விடவும் 30 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டது. முதலீட்டுச் செலவுகளில் பெரும் பகுதி இறக்குமதி செய்யப்பட்ட இயந்திர உபகரணங்கள், ஏனைய இறக்குமதிப் பொருட்கள் என்பவற்றுக்காகச் செலவிடப்பட்டது. இவ்வருடத்தில் தேசிய சேமிப்

பில் கணிசமான அளவு அதிகரிப்பு காணப்பட்டது. 1978 ல் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மொத்த சேமிப்பு 633 கோடி ரூபாவென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இது முன்னைய வருடத்தை விடவும் (ரூ. 230 கோடி) 56 சதவீத அதிகரிப்பாகும். உயர் வட்டி வீதங்களினதும், கூடிய பொருளாதார நடவடிக்கைகளினதும் கூட்டுவிளைவொன்றாகவே சேமிப்பு அதிகரிப்பு ஏற்பட்டதெனலாம். மொத்த தேசிய செலவீட்டில் சேமிப்புகளின் பங்கு 1972-76 காலத்தில் 9 சதவீதமாகவும், 1977 ல் 13 சதவீதமாகவும், 1978 ல் 17 சதவீதமாகவும் இருந்து வந்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தின் மீது வீக்க அமுக்கங்களின் தாக்கம் இவ்வருடத்திலும் தொடர்ந்து நீடித்தது. இறக்குமதி செய்ப்பட்ட பொருட்களினதும், முதலீட்டு நடுத்தரப் பொருட்களினதும் விலைகள் மிக உயர்ந்து காணப்பட்டன. (நுகர்வோர் விலை மட்டத்திலான) வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டி முன்னைய வருடத்தை விடவும் 12 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டது. ஆய்வுக்குட்படுத்தப்படும் இவ்வருடத்தில் சார்புரீதியாக பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் வீக்கம் சுமார் 15 சதவீதமாக இருந்திருப்பதனை இவை காட்டுகின்றன.

(நாணயம், கேள்வி வைப்புக்கள் என்பவற்றையுள்ளடக்கிய) நாட்டின் பண நிரம்பல் இவ்வாண்டில் 11 சதவீதமாக மட்டுமே அதிகரித்தது. பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு 1976ல் 35 சதவீதமாகவும், 1977 ல் 29 சதவீதமாகவும் இருந்து வந்துள்ளது. எவ்வாறிருப்பினும், சேமிப்புக்கள், நிலையான வைப்புக்கள் என்பவற்றை யுள்ளடக்கிய (இரண்டாந்தர) பண நிரம்பல் 48 சதவீதமாக அதிகரித்ததுடன், பண நிரம்பலில் இத்தகைய இரண்டாந்தரத் திரவச் சொத்துக்களின் முக்கியத்துவம் கூடிச் சென்றது. தனியார் துறையினருக்கான வர்த்தக வங்கிக் கடன்களிலும் விஸ்தரிப்பு காணப்பட்டது.

**அட்டவணை 1**

**இலங்கையின் பொருளாதார வளர்ச்சி**

| வருடம் | மொ. தே. உ. (1959) நிலையான விலைகளில் கோடி ரூபா | வளர்ச்சி வீதம் | தலா நபர் மொ. தே. உ. நிலையான விலைகளில் ரூபா | வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|
| 1970 | 968.6 | 4.1 | 774 | 2.0 |
| 1971 | 972.5 | 0.4 | 766 | —1.0 |
| 1972 | 1003.8 | 3.2 | 775 | 1.2 |
| 1973 | 1041.9 | 3.8 | 796 | 2.7 |
| 1974 | 1081.5 | 3.8 | 814 | 2.3 |
| 1975 | 1111.4 | 2.8 | 822 | 0.9 |
| 1976 | 1144.3 | 3.0 | 833 | 1.3 |
| 1977 | 1195.2 | 4.4 | 855 | 2.6 |
| 1978* | 1267.3 | 6.0 | 894 | 4.4 |

* உத்தேசம்.

இறக்குமதிகள் தாராள மயப்படுத்தப்பட்டதையடுத்து (எஸ். டீ. ஆர். அளவுகளில் மதிப்பிடப்படும்) இறக்குமதிச் செலவினங்கள் 29 சதவீதத்தால் அதிகரித்தன. பல வருடங்கள் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்டிருந்த கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக, இறக்குமதிப் பொருட்களின் ஒன்று குவிந்திருந்த தேவையின் பின்னணியிலேயே இவ்வதிகரிப்பு நிகழ்ந்தது. (எஸ். டி. ஆர். அளவுகளில் கணிப்பீடு செய்யப்படும்) ஏற்றுமதி வருமானத்தில் மிகச் சிறிதளவிலான — அதாவது 6 சதவீதம் — அதிகரிப்பே ஏற்பட்டது. இதன் விளைவாக ஏற்பட்ட வர்த்தகக் குறை ரூ. 127.8 கோடி ரூபாவாக (அல்லது 6.6 கோடி எஸ். டி. ஆர். ஆக) இருந்தது. ஆயினும், கடன்கள், உதவிகள் என்ற உருவில் வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையாக நடைபெற்ற வள மாற்றீடுகள் காரணமாக வர்த்தக, சென்மதி நிலுவைக் குறைபாடுகள் ஈடு செய்யப்பட்டது மட்டுமன்றி, நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களில் கணிசமான அளவு அதிகரிப்பும் ஏற்பட்டது. இவ்வருடத்தில் எமது வெளிநாட்டுச் சொத்துக்கள் 7.5 கோடி எஸ். டீ. ஆர். ஆக (25 % ஆல்) கூடிச்சென்றன. இதே வேளையில், நாட்டின் வெளிநாட்டுப் படுகடனும் கணிசமான அளவு அதிகரித்தது. வெளிநாட்டுப் பொதுக் கடனில் ஏற்பட்ட அதிகரிப்பு 15.9 கோடி எஸ். டி. ஆர். ஆக இருந்தது. செலாவணி மாற்று நிலைமைகளில் ஏற்பட்டு வந்த தளம்பல்கள் காரணமாக யென், டொயிஷ் மார்க் ஆகிய நாணயங்களுடனான எமது ரூபாவின் பெறுமதி சீர்குலைவுற்று வந்தது. அமெரிக்க டொலருடனான எமது ரூபாவின் செலாவணி வீதம் அடிக்கடி தளம்பிச் சென்ற போதிலும், ஏனைய நாணயங்களுடனான மாற்றுவீதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ரூபா நிலையானதாகவே இருந்தது.

அரசாங்க நிதியில் முன்னெப்போதுமிராத அளவுக்கு (70 சதவீதத்துக்கும் மேலாக) வருமானம் பெறப்பட்டதுடன், மூலதன அபிவிருத்திக்காக செய்யப்பட்டிருந்த பெருந்தொகையான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்படவில்லை. இதன் விளைவாக, இவ்வருடத்திய அரச நடவடிக்கைகள் பொருளாதாரநிதின் மீது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தின.

பல்வேறு துறைகளிலும் அதிகரித்து வந்த நடவடிக்கைகள் காரணமாக கூடிய வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன. (முற்றிலும் சரியானவை எனக் கருத முடியாத) எமக்குக் கிடைக்கும் தரவுகளின் பிரகாரம், வருட இறுதியில் வேலையற்றோரின் தொகை 900,000 ஆகக் குறைந்திருந்தது. 1977ல் வேலையற்றோரின் தொகை 12 லட்சம் என்று உத்தியோகபூர்வமாக மதிப்பிடப்பட்டிருந்தது. இவ்வருடத்தில் வேலையற்றோருக்கான மானிய உதவித் திட்டம் அமுல் செய்யப்பட்டதுடன், வருட இறுதியில் 373,000 பேர் இவ்வுதவியைப் பெற்றனர். மத்திய கிழக்கு நாடுகளை நோக்கிய குடியகல்வு இவ்வருடத்தில் அதிதீவிரமாக நிகழ்ந்ததையடுத்து, சுமார் 25,000 பேர் இங்ஙனம் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிகின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இங்ஙனம் தொழில் புரிவோர் 1978 ம் ஆண்டில் மட்டும் சுமார் 30 கோடி ரூபாவை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளனர் என்றும் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. உள்நாட்டுப் பொருளாதாரத்தில் வேலையற்றிருந்த பெருந்தொகையானோர், நாட்டை விட்டு வெளியேறியவர்கள் ஏற்படுத்திய வெற்

றிடங்களினுல் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்டனர்.

நவம்பர் இறுதியில் வீசிய கடுமையான புயல் காரணமாக கீழ் மாகாணத்தின் பொருளாதாரம் நிலைகுலைந்து போயிற்று. இது பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தின் அளவு, உற்பத்தி ஆற்றலில் ஏற்பட்டிருக்கும் இழப்பு, புனருத்தாரன வேலைகளுக்காகத் தேவைப்படும் மேலதிக மூலவளங்களின் அளவு என்பன 1979 ம் ஆண்டிலேயே கடுமையாக உணரப்படும்.

### அட்டவணை 2

**விவசாய உற்பத்திச் சுட்டெண்கள்***

| | பயிர்கள் | 1975-76 | 1977 | 1978 |
|---|---|---|---|---|
| 1. | தேயிலை | 100 | 101.8 | 97.0 |
| 2. | இறப்பர் | 100 | 97.2 | 102.4 |
| 3. | தென்னை | 100 | 74.1 | 89.8 |
| 4. | பெருந்தோட்டப்பயிர்கள் (1-3) | 100 | 94.4 | 96.5 |
| 5. | நெல் | 100 | 140 | 157.2 |
| 6. | பிரதான பயிர்கள் (1, 3, 5) | 100 | 110 | 117.3 |

* பொருளியல் நோக்கினுல் தொகுக்கப்பட்டது.

### விவசாய வெளியீடு

பொருளியல் நோக்கு சஞ்சிகையினுல் தொகுக்கப்பட்ட உத்தேச மதிப்பீடுகளின் பிரகாரம், தேயிலை, றப்பர், தென்னை, நெல் என்பவற்றையுள்ளடக்கிய விவசாயப் பயிர்களின் உற்பத்தி 1978 ல் சுமார் 7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. 1975-76 சராசரி மட்டங்களை விடவும் இப் பயிர்களின் வெளியீடு 17 சதவீதம் கூடுதலாக இருந்தது. உப உணவுப்பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் என்பவற்றின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவும் காணப்படவில்லை.

### பெருந்தோட்ட உற்பத்தி

ஒட்டு மொத்தமான பெருந்தோட்ட உற்பத்திகள் 2 சதவீதத்துக்கும் குறைவான எல்லை அதிகரிப்பினையே காட்டின. தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்குப் பிரதான காரணமாயிருந்தது.

ஆய்வுக்குட்படுத்தப்படும் இவ்வாண்டில் தேயிலை உற்பத்தி 19.9 கோடி கிலோ கிராம்களாக இருந்தது; 1977 ம் ஆண்டின் உற்பத்தி மட்டங்களுடன் ஒப்பிடுகையில் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி 95 லட்சம் கிலோகிராம்கள் (அல்லது சுமார் 5 சதவீதம்) ஆகும். மேலும், இது 1966-70 கால வருடாந்தச் சராசரி உற்பத்தியிலும் 10 சதவீதம் குறைவானதாகும். உயர், மத்திய நிலத் தேயிலை உற்பத்தியில் முறையே 8,9 சதவீத வீழ்ச்சி காணப்பட்டமையே இதற்கான பிரதான காரணமாகும். தாழ் நிலத் தேயிலையின் பிரதான கொள்வனவாளர்களான மத்திய கிழக்கு நாடுகளில் காணப்பட்ட சாதகமான சந்தை நிலைமைகள் காரணமாக, இதன் உற்பத்தி முன்னைய வருடத்தை விடவும் சுமார் 5 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டது. உயர், மத்திய நிலத் தேயிலையின் உற்பத்தி வீழ்ச்சிக்கு வழிகோலிய காரணங்கள் பல; தொடர்ந்து பல வருடங்களாகக் காட்டப்பட்டு வந்த அக்கறையின்மை, குறைவான முதலீட்டுச் செலவுகள், அரசதுறைத் தோட்டங்களில் நிலவிய திறமையீனமான முகாமை, குறைந்த ஏற்றுமதி விலைகள், கூடிய உற்பத்திச் செலவு என்பவற்றை அடியொற்றி உற்பத்தியாளரின் எல்லை இலாபங்களில் ஏற்பட்ட சீர்குலைவு என்பன இவற்றுட் பிரதானமானவையாகும். மேலும், இவ்வருடத்தின் மழைவீழ்ச்சிப் பரம்பல் போதியதாயிராத காரணத்தினுல் உயர்நிலத் தேயிலை உற்பத்தி பாதிப்புற்றது. சர்வதேச கோப்பி நெருக்கடியை அடியொற்றி 1977ல் உச்ச மட்டத்தை யடைந்திருந்த தேயிலை விலைகள் 1978 ல் மீண்டும் வீழ்ச்சியடையத் தொடங்கின. கொழும்பு ஏல விற்பனைகளில் கிலோ ஒன்றுக்கான தேறிய சராசரி விலை 1977 ல் ரூ. 13.50 ஆக இருந்தது; இது 1978 ல் ரூ. 11.59 ஆக (14%) வீழ்ச்சி கண்டது. மறு புறத்தில், (பொதுத்துறை, தனியார் துறைகளை உள்ளடக்கிய) தேசிய ரீதியிலான கிலோ ஒன்றுக்கான சராசரி உற்பத்திச் செலவு 1977 ம் வருட இறுதியில் ரூ. 9.35 ஆக இருந்து, 1978 செப்டம்பரில் ரூ. 10.50 ஆக (12%) அதிகரித்தது. குறிப்பாக, மத்திய நிலத் தேயிலை இவ்வருடத்தில் மிகக் குறைவான விலைகளைப் பெற்றுக்கொண்டது.

### இறப்பர்

இவ்வருடத்தில் இறப்பர் உற்பத்தி 15.4 கோடி கிலோகிராம்களாக இருந்தது; இதற்கு முன்னைய வருடத்தை விடவும் இது 80 லட்சம் கிலோ (6%) அதிகமானதாகும்; மேலும், 1975-76 சராசரி மட்டங்களை விடவும் சுமார் 2.5 சதவீத அதிகரிப்பு இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்டுள்ளது. கடந்த 5 வருட காலத்தில் பதிவு செய்யப்பட்ட மிகக் கூடிய உற்பத்தி மட்டம் இது வாகும். சாதகமான காலநிலை, அனுகூலமான இலாப எல்லைகள், கூடிய பசளைப் பிரயோகம் என்பன இவ்வுற்பத்தி அதிகரிப்புக்கு உந்துதல் அளித்த காரணிகளாகும். இவ்வருடத்தில் இறப்பர் விலைகளில் கணிசமான அளவு அதிகரிப்பு காணப்பட்டது. ஆர். எஸ். எஸ். தரம் 1 ன் கொழும்புச் சந்தை விலை 1977 ல் கிலோ ஒன்றுக்கு ரூ. 4.53 ஆக இருந்து 1978 ல் ரூ. 6.93 ஆக (53 சதவீதமாக) அதிகரித்தது. 1977 ல் ரூ. 3.75 ஆக இருந்த கிலோ ஒன்றுக்கான சராசரி உற்பத்திச் செலவு 1978 ல் ரூ. 4.50 ஆக அதிகரித்தது.

### தென்னை

1978 ல் தெங்கு உற்பத்தி சுமார் 22 கோடி காய்கள் என மதிப்பிடப்பட்டிருக்கின்றது. முன்னைய வருடத்தின் மிகப் பெரிய வீழ்ச்சியினின்றும் உற்பத்தி அளவு மீட்சி பெற்றதெனினும், வரலாற்று ரீதியான சராசரி உற்பத்தி மட்டத்தை விடவும் (சுமார் 25 கோடி காய்கள்) அது குறைவாகவே இருந்தது. 1977 ம் வருடத்துடன் ஒப்பிடுகையில் உற்பத்தியில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு சுமார் 38.5 கோடி காய்கள் — அதாவது 21 சதவீதம் — ஆகும். இந்த மீட்சியை அடுத்து தேங்காய் எண்ணெய், தேங்காய்த்துருவல் என்பவற்றின் உற்பத்தியில் முறையே 63, 37 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது. காலநிலை சாதகமாயமைந்தமையே தெங்குப் பயிர் உற்பத்தியில் மீட்சி ஏற்படுவதற்கான பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 3

### பெருந்தோட்ட உற்பத்தியும் ஏற்றுமதியும்

| | | 1976 | 1977 | 1978 | சதவீ மாற்றம் 1978 |
|---|---|---|---|---|---|
| 1. | தேயிலை | | | | |
| | உற்பத்தி (பத்து லட்சம் கிலோக்களில்) .. .. .. .. .. | 197 | 209 | 199 | — 4.6 |
| (ஆ) | ஏற்றுமதி ( ,, ) .. .. .. .. | 201 | 185 | 194 | — 4.9 |
| (இ) | கொழும்பு ஏல விற்பனைகளில் கிலோ ஒன்றுக்கான மொத்தச் சராசரி விலைகள் | 9.25 | 16.05 | 14.19 | —11.6 |
| (ஈ) | பசளைப் பிரயோகம் (1000 தொன்களில்) .. .. .. .. | 95.3 | 80.1 | 115.5 | —69.4 |
| 2. | இறப்பர் | | | | |
| (அ) | உற்பத்தி (பத்து லட்சம் கிலோக்களில்) .. .. .. .. | 152 | 146 | 154 | — 5.5 |
| (ஆ) | ஏற்றுமதி ( ,, ) .. .. .. .. | 137 | 135 | 150 | —11.1 |
| (இ) | ஆர்.எஸ்.எஸ். 1 கிலோ ஒன்றுக்கான உள்ளூர் விலை .. .. .. | 4.34 | 12.40 | 21.0 | —69.4 |
| 3. | தென்னை | | | | |
| (அ) | உற்பத்தி (10 லட்சம் காய்கள்) .. .. .. .. .. | 2330 | 1821 | 2207 | —21.2 |
| (ஆ) | ஏற்றுமதி (10 லட்சம் காய்களுக்கு சமனாக) .. .. .. | 803 | 281 | 515 | —83.3 |
| (இ) | ஒரு மெட்ரிக் தொன் தேங்காய் எண்ணெய்க்கான உள்ளூர் விலை .. | 2910 | 5640 | 5250 | — 6.9 |
| (ஈ) | பசளைப்பிரயோகம் (தொன்) .. .. .. .. .. | 30.7 | 29.1 | 42.5 | —46. |

காரணமாகும். அதிகரித்த உற்பத்தியை அடுத்து உள்ளூர் சந்தை சந்தைச் சராசரி விலைகள் ஓரளவுக்குக் குறைவடைந்தன. எனினும், உற்பத்தியாளர்களுக்கு அனுகூலமான எல்லை இலாபங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அமுல் செய்யப்பட்ட நிர்வாக ஒழுங்குகள், கட்டுப்பாடுகள் என்பன காரணமாக வருடம் முழுவதிலும் உயர் விலை மட்டங்கள் பேணப்பட்டு வந்தன. நவம்பரில் வீசிய சூறாவளியினால் பெருமளவு சேதத்துக்குள்ளாகிய ஒரே ஒரு பெருந்தோட்டப்பயிர் தென்னையாகும். கீழ் மாகாணத்தில் சுமார் 30,000 ஏக்கர் தென்னந் தோட்டங்கள் பெரு நாசத்துக்குள்ளானதுடன், இதன் தாக்கம் 1979 ல் கடுமையாக உணரப்படும்.

மூன்று பிரதான பெருந்தோட்டப் பயிர்களினதும் மீள் நடுகை நடவடிக்கைகள் மிக மெதுவாக நடைபெற்றதுடன், அவை இலக்குகளை எய்தவுமில்லை. 1978 ல் தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய பயிர்கள் மீள் நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பின் அளவு முறையே 6,000, 9,000, 2,000 ஏக்கர்களாக இருந்தது. மறுபுறத்தில், பெருந் தோட்டங்களில் பாவனை செய்யப்பட்ட பசளையின் அளவில் கணிசமான அதிகரிப்பு காணப்பட்டது. இதனால், அடுத்து வரும் வருடங்களில் உற்பத்தி மட்டங்கள் உயர்ந்து செல்லும் வாய்ப்புண்டு. இவ்வருடத்தில் பெருந்தோட்டத்துறைக்கு 175,000 தொன் பசளை விநியோகிக்கப்பட்டது. இது இதற்கு முன்னைய வருடத்தை விடவும் 47 சதவீத அதிகரிப்பாகும்.

### நெல்

நெல் உற்பத்தியைப் பொறுத்த வரையில் இது இரண்டாவது வெற்றிகர வருடமாகும். முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 1978 ன் உற்பத்தி (9 கோடியே 60 லட்சம் புசல்) 1 கோடி புசலால் (13%) அதிகரித்துக் காணப்பட்டது. சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பளவில் ஏற்பட்ட அதிகரிப்பு (9 ), ஏக்கருக்கான விளைச்சலில் ஏற்பட்ட அதிகரிப்பு (4%) என்பன நெல்லுற்பத்தி அதிகரிப்புக்கு உந்துதலளித்த காரணிகளாகும். மேலும், சாதகமான காலநிலை, கூடிய பசளைப் பிரயோகம், கூடிய உத்தரவாத விலை, 1977-78 மகா போகத்தில் நெகிழ்ச்சியுடன் கூடிய கடன் வழங்கல் என்பனவும் உற்பத்தியதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன. நெற் சாகுபடிக்கென இவ்வாண்டில் 113,300 மெட்ரிக் தொன் பசளை விநியோகிக்கப்பட்டது. இதற்கு முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 39 சதவீத அதிகரிப்பாகும். 1974 ம் ஆண்டின் பின்னர் ஒரு தனி வருடத்தில் உபயோகிக்கப்பட்ட மிகக் கூடியளவு பசளை இதுவாகும். அத்துடன் விவசாயிகளுக்கான கடன் வசதிகள் மிகத் தாராளமாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டன. வழங்கப்பட்ட மொத்த விவசாயக் கடன் தொகை ரூ. 45.1 கோடியாகும். விவசாயக் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், ஒரு தனி வருடத்தில் வழங்கப்பட்ட மிகக் கூடுதலான கடன் தொகை இது என்பது குறிப்பிடத்தக்கது. எவ்வாறிருப்பினும், வழங்கப்பட்ட கடன்களில் சுமார் 19 சதவீதம் மட்டுமே இவ்வருடத்தில் மீள அறவிடப்பட்டன; இதுவரை காலத்திலும் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த மீள் அறவிடல் வீதமும் இதுவாகும். இவ்வுற்பத்தியில் 3.2 கோடி புசல் நெல்லினை (சுமார் 35%) நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்தது. இது, 1977 ம் ஆண்டின் கொள்வனவை விடவும் 70 லட்சம் புசல் (30%) அதிகமானதாகும். எனினும், களஞ்சியப்படுத்துதல், நெல் குத்துதல் என்பவற்றில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக வருடம் முழுவதும் கூடிய கொள்வனவை மேற்கொள்ள முடியவில்லை. கூடிய உற்பத்தி, அரிசியின் சந்தை விலைகளை நிலையாக வைத்திருக்க உதவியதுடன், தீவின பல பாகங்களிலும் ஒரு கொத்து அரிசியின் விலை ரூ. 3-3.50 வரையிலிருந்தது. மேலும், அரிசி இறக்குமதி பெருமளவில் குறைவடைந்தது. இவ்வாண்டில் 166,000 தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது; முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி 69 சதவீதமாகும். எனினும், இவ் வருடத்தில் கோதுமை மா இறக்குமதி 79,000 தொன்களினால் அதிகரித்தமை, அரிசி இறக்குமதியில் ஏற்பட்ட குறைவினை ஈடுசெய்வதாக இருந்தது. எனவே அரிசி, கோதுமை மா என்ற இரு உணவுப் பண்டங்களையும் ஒன்றிணைத்துப் பார்க்கும் போது, முன்னைய வருடத்திலும் சுமார் 22 சதவீத இறக்குமதி வீழ்ச்சியே ஏற்பட்டிருக்கின்றது. (அட்டவணை 4ஐப் பார்க்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 4

### நெல், அரிசி, கோதுமை மா

| | | 1976 | 1977 | 1978 | சதவீத மாற்றம் 1978 |
|---|---|---|---|---|---|
| 1. | நெல் உற்பத்தி (10 லட்சம் புசல்கள்) | 60.0 | 80.4 | 90.6 | —12.7 |
| 2. | சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பளவு ('000 ஏக்கர்களில்) | 1337 | 1645 | 1787 | — 8.6 |
| 3. | சராசரி விளைச்சல் (ஏக்கருக்கான புசல்கள்) | 44.13 | 48.92 | 50.7 | — 3.6 |
| 4. | உர வினியோகம் ('000 தொன்கள்) | 72.5 | 81.3 | 113.3 | 39.4 |
| 5. | (அ) விவசாயக் கடன்கள் (ரூ பத்து லட்சங்களில்) | 74.3 | 99.2 | 451.4 | —355.0 |
| | (ஆ) மீள அறவிடப்பட்ட வீதம் | 55.2 | 34.6 | 18.7 | —46.0 |
| 6. | நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்த வீதம் | 21.4 | 30.4 | 35.3 | —16.1 |
| 7. | அரிசி இறக்குமதி ('000 தொன்களில்) | 419 | 534 | 166 | —68.9 |
| 8. | கோதுமை மா இறக்குமதி ('000 தொன்கள்) | 380 | 524 | 603 | —15.0 |

### உப உணவுப் பயிர்கள்

இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் நிர்ப்பந்தங்கள் காரணமாக எழுபதுக்களை யடுத்து உப உணவுப் பயிர்களின் உற்பத்தியில் கணிசமானளவு அதிகரிப்பு தென்பட்டது. ஆயினும், இறக்குமதிப் பொருடகளின் கடுமையான போட்டி, விலை மட்டங்களில் ஏற்பட்ட சரிவு என்பவற்றின் விளைவாக 1978 ல் உப உணவுப் பொருள் உற்பத்தி வீழ்ச்சி கண்டது. பிரதியீட்டுப் பொருளான கோதுமை மா போதியளவில் கிடைத்தமையாலும், வெளிச் சந்தையில் அதிகரித்த அரிசி வினியோகம் காரணமாகவும் மரவெள்ளி, சோளம் போன்ற பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. உற்பத்தியாளர்களதும், அதே வேளையில் பாவனையாளர்களதும் நலன்களைப் பேணும் நோக்கில், அரசாங்கம் மிளகாய், வெங்காயம் போன்ற பண்டங்களில் பெருமளவு கையிருப்புக்களை வைத்திருந்து நிலையான விலை மட்டங்களை உறுதி செய்தது. விலைகள் உறுதியாக இருந்தும் கூட உற்பத்திகளைக் சேகரிக்கும் விஷயத்தில் அத்துணை வெற்றி கிட்டியிருப்பதாகக் கூற முடியாது. முன்னைய வருடங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சேகரிப்பு மட்டங்கள் வீழ்ச்சியடைந்து வந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. உப உணவுப்பயிர்களின் ஒட்டுமொத்தமான உற்பத்தி அதிகரிப்பு குறிப்பிடக் கூடிய அளவில் இல்லை. தரவுகள் கிடைக்காது விடினும் மரக்கறி, பழவகைகள் உற்பத்தியில் நியாயமான அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

### சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

கோப்பி, மிளகு, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலக்காய் என்பவற்றின் உற்பத்தியில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பினை கொழும்பு ஏல நிலையங்களை வந்தடைந்திருக்கும் தொகையைக் கொண்டும், ஏற்றுமதித் தொகையைக் கொண்டும் அவதானிக்க முடிகின்றது. அதே வேளையில் கறுவா, கராம்பு, கொக்கோ, சிட்ரனெல்லா என்பவற்றில் உற்பத்தி வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சுங்கத்தரவுகளின் பிரகாரம் 1978 ல் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மூலம் கிடைத்த ஏற்றுமதி வருமானம் ரூ. 77.2 கோடி (எஸ். டீ. ஆர். 3.96 கோடி) யாகும். இதற்கு முன்னைய வருடத்தில் கிடைத்த வருமான ரூ. 37.5 கோடியாகும். இப்பயிர்களின் ஏற்றுமதிக்கான உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் ஏற்றுமதித் தீர்வைகள் குறைக்கப்பட்டதுடன், மீள் நடுகைக்கான மானியங்கள் கணிசமான அளவு அதிகரிக்கப்பட்டன.

### மீன் பிடி

இவ்வருடத்தில் மீன்பிடியின் மொத்த அளவு 154,121 தொன்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இது முன்னைய வருடத்தை விடவும் 13 சதவீதம் அதிகரிப்பாகும். கரையோர மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடி, உள்ளூர் மீன்பிடி என்ற மூன்று துறைகளிலும் பொதுவான அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. 1977 ம் ஆண்டில் 300 தொன்களாக மட்டுமே இருந்த ஆழ்கடல் மீன்பிடி, 1978 ல் பிரமிக்கத்தக்க வகையில் 3,000 தொன்களாக அதிகரித்தது. ஆசிய அபிவிருத்தித்திட்ட நிதியுதவியின் கீழ் 36 இயந்திரப் படகுகள் பெற்றுக்கொள்ளப்பட்டமை இதற்கான பிரதான காரணமாகும். உற்பத்தியில் அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் பல்வேறு வகை மீன்களினதும் உள்ளூர் விலைகள் உயர்ந்தே காணப்பட்டன. 1974-75 காலப்பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, மீனின் சராசரி உள்ளூர் விலை மட்டங்கள் 1978 ல் 50-60 சதவீதம் அதிகரித்திருந்தன. மேலும், மீன்பிடி இயந்திரங்கள், வள்ளங்கள், உதிரிப்பாகங்கள் என்பவற்றின் பற்றுக்குறை, போதிய பழுதுபார்க்கும் வசதிகளின்மை, இறக்குமதி உள்ளீடுகளின் விலையதிகரிப்பு போன்ற பிரச்சினைகளை மீன்பிடிக் கைத்தொழில் எதிர் நோக்கியது.

கால்நடை உற்பத்திகளில் தேக்கம் (அல்லது) வீழ்ச்சி காணப்பட்டது. இவ்வருடத்தில் தேசிய பால் சபையின் பால், பாற்பொருள் என்பவற்றின் உற்பத்தியில் ஓரளவு அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், பொதுவாக பால் உற்பத்தியில் வீழ்ச்சி காணப்பட்டது. 1975 ல் 5.95 கோடி லிட்டராக இருந்த பால் உற்பத்தி 1978 ல் 4.91 கோடி லிட்டராக வீழ்ச்சியடைந்தது. விலங்குணவுகளின் அதிகரித்த விலைகளின் பின்னணியில் உற்பத்தியாளர் குறைந்த இலாபங்களைப் பெற்றமையே உற்பத்தி வீழ்ச்சிக்கான காரணம் என்று கூறப்படுகின்றது. உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் 1978 நவம்பரில் பால் விலைகள் 34 சதவீதமாக உயர்த்தப்பட்டதுடன், விலங்குணவு விலைகளில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டது.

### சுரங்கமகழ்தல்

சுரங்கமகழ்தல் துறையில் இவ்வருடத்தில் 2 சதவீத அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இரத்தினக்கல் ஏற்றுமதி மூலம் பெறப்பட்ட வருமானம் ரூ. 53.1 கோடியாகும். முன்னைய வருடத்தைக் காட்டிலும் ஏற்றுமதித் தொகை 5 சதவீதமாக வீழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்துள்ளது. எஸ். டீ. ஆர். அளவுகளில் ஏற்றுமதி வருமானமும் குறைவடைந்துள்ளது. மறுபுறத்தில், நிர்மாணத்துறை நடவடிக்கைகளில் காணப்பட்ட விஸ்தரிப்பு காரணமாக செங்கற்கள், ஓடு, மணல் போன்றவற்றின் உற்பத்தியில் அதிகரிப்பேற்பட்டுள்ளது.

**உற்பத்தித்துறை வெளியீடு**

ஏற்றுமதிப் பதப்படுத்துதல், தொழிற்சாலை உற்பத்தி, குடிசைக் கைத்தொழில்கள் என்பவற்றை உள்ளடக்கிய உற்பத்தித் துறையில் 4-5 சதவீத அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த அதிகரிப்புக்கான முக்கிய காரணம் தொழிற்சாலை உற்பத்தியில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பாகும். ஏற்றுமதிப் பதப்படுத்தல் உப துறையைப் பொறுத்தவரையில், இறப்பர், தெங்குப் பொருட்கள் என்பவற்றின் பதப்படுத்தல் நடவடிக்கைகள் அதிகரித்திருக்கும் அதே வேளையில், (1978 ல் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியை யடுத்து) தேயிலையில் வீழ்ச்சி தென்பட்டது. அரச கூட்டுத்தாபனங்களின் உற்பத்தி மட்டங்கள் கணிசமான அளவு அதிகரித்துக் காணப்பட்டன. சிமெந்து (62 %), உருக்கு (77 %), டயர்கள் (52 %), மட்பாண்டங்கள் (18 %), கோஸ்டிக் சோடா (24 %) என்பவற்றில் குறிப்பிடத்தக்க உற்பத்தி அதிகரிப்பு ஏற்பட்டது. மறுபுறத்தில், ஒட்டுப்பலகை, மண்வெட்டிகள், வாழைச்சேனை கடதாசி என்பவற்றின் உற்பத்தி மட்டங்கள் முன்னைய வருடத்தை விடவும் குறைந்து காணப்பட்டன.

செயற்கைப்பட்டு (சிந்தெடிக்) கைத்தொழில்களைத் தவிர ஏனைய பெரும்பாலான தனியார் துறைக் கைத்தொழில்கள் கூடிய உற்பத்தி ஆற்றல்களைக் காட்டியிருப்பதனை தரவுகள் காட்டுகின்றன. மூலப்பொருட்கள், இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் என்பன பெருமளவில் கிடைத்தமையே இதற்கு உந்துதல் அளித்திருக்கும் பிரதான காரணியாகும். இவ்வாண்டில், கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதி கணிசமான அளவு அதிகரிப்பினைப் பதிவு செய்திருக்கின்றது. உதாரணமாக, 1977 ல் 9.6 கோடி ரூபாவாக (1875 தொன்கள்) இருந்த கடல்படு திரவியங்களின் ஏற்றுமதி, 1978 ல் 23.3 கோடி ரூபாவாக (2900 தொன்கள்) அதிகரித்தது. அத்துடன், 1977 ல் ரூ. 48 கோடியாகவிருந்த ஏனைய பொருட்களினதும், நானாவித உற்பத்திகளதும் ஏற்றுமதி 1978 ல் 129.3 கோடி ரூபாவாக அதிகரித்தது. இவற்றுள், ஏற்றுமதி நோக்கிலான ஜவுளிக் கைத்தொழிலில் ஏற்பட்ட விஸ்தரிப்பு பிரமிப்பூட்டுவதாக இருந்தது. ஆய்வுக்குட்படுத்தப்படும் இவ்வருடத்தில் 41.4 கோடி ரூபா பெறுமதியான துணிமணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. முன்னைய வருடத்தை விடவும் இது 60 சதவீத அதிகரிப்பாகும். இத்துறையில் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் வசதிகளின் பின்னணியில் நோக்கும்போது அடுத்துவரும் சில வருடங்களில் உற்பத்தி மென்மேலும் அதிகரித்துச் செல்வதற்கான வாய்ப்பு மிகப் பிரகாசமாகத் தென்படுகின்றது.

மொத்த ஜவுளி உற்பத்தி 11.6 கோடி மீட்டராகும்; முன்னைய வருடத்தைவிடவும் இது 8 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்திருக்கின்றது. அரசதுறை ஆலைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்குக் காரணமாகும். இருப்பினும் ஆலைகளின் ஆற்றல் பயன்பாடு தொடர்ந்தும் ஒரு பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளது. இவ்வருடத்தில் சுமார் ஐம்பது சதவீதமான உற்பத்தி ஆற்றலே பயன்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் மிகப் பெரிய ஜவுளி ஆலையான துல்ஹிரிய ஆலையின் உற்பத்தி ஆற்றலில் 36 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்புக்களைப் பெற்றிருக்கும் கைத்தறித்துறையில் 30 சதவீதத்துக்கும் குறைவான உற்பத்தி ஆற்றலே பயன்படுத்தப்பட்டுள்ளது. நூல் விலையதிகரிப்பு, தரமான இறக்குமதிப் பொருட்களின் போட்டி என்பன காரணமாக கைத்தறி உற்பத்திகள் சந்தைப்படுத்தும் பிரச்சினைகளை எதிர்நோக்கின. ஆய்வுக்குட்படுத்தப்படும் இவ்வருடத்தில் ஜவுளிக் கைத்தொழில் எதிர்நோக்கிய பிரதான பிரச்சினையும் இதுவாகும். மேலும், தனியார் சிந்தெட்டிக் ஆலைகளின் உற்பத்தி 28 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

கைத்தொழில் துறையால் பயன்படுத்தப்பட்ட மின்சாரம், எரிபொருள் என்பவற்றைக் கொண்டு கைத்தொழில் நடவடிக்கைகளை ஓரளவுக்கு மட்டிடக்கொள்ள முடியும். கைத்தொழில் தேவைகளுக்கான மின்சாரப் பாவனை முன்னைய வருடத்தை விடவும் 12 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த மின்சார நுகர்வில் இவ்வருடத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு 11 சதவீதமாகும். தொழிற்சாலை உற்பத்திக்குத் தேவைப்படும் பிரதான உள்ளீடுகளில் ஒன்றான ஆலை எண்ணெய்யின் நுகர்வு 18 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

1978 ன் முடிவில், மாகொழும்பு பொருளாதார ஆணைக்குழு சுதந்திர வர்த்தக வலயத்துக்குள் 53 கைத்தொழில் திட்டங்களுக்கு அனுமதி வழங்கியிருந்தது. இக் கைத்தொழில்களின் நிலையான மூலதனம் சுமார் 130 கோடி ரூபாவாகும். உச்ச மட்டப் பயன்பாட்டின் போது இக் கைத்தொழில்கள் ஏற்றுமதி விற்பனைக்காக 460 கோடி ரூபா பெறுமதியான பொருட்களை உற்பத்தி செய்வதுடன், சுமார் 27,400 பேருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கின்றது. அனுமதிக்கப்பட்டிருக்கும் கைத்தொழில்களில் சுமார் அரைவாசிக்கும் அதிகமானவை ஜவுளி மற்றும் அது தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்பவையாகும். வருட இறுதியில் இவற்றுள் 32 நிறுவனங்கள் ஆணைக்குழுவுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருந்ததுடன், 7 நிறுவனங்கள் திட்ட அமுலாக்க ஆரம்ப நிலையிலிருந்தன. மேலும், சுதந்திர வர்த்தக வலயத்துக்குத் தேவையான சமூகப் பொது முதலீடுகளில் பெரும்பாலானவை பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. ஏற்றுமதித் தயாரிப்பு வலயத்தின் இயக்கத்தினை மதிப்பீடு செய்வதற்கு இன்னும் காலம் தேவை என்பது உண்மையே; ஆனால், பல்வேறு நாடுகளினதும் இது போன்ற வலயங்களின் முன்னேற்றத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஒரு வருடத்துக்கும் குறுகிய காலத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் வளர்ச்சி திருப்தியளிப்பதாகவே தெரிகின்றது.

சுதந்திர வர்த்தக வலயத்துக்கு வெளியேயும் அரசாங்கம் பல கைத்தொழில்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. நிதியமைச்சின் வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக்குழு 22 திட்டங்களுக்கு அனுமதியளித்துள்ளது. இவற்றின் முதலீடு 12.3 கோடி ரூபாவாகும்; இதில் 60 சதவீதம் வெளி

## அட்டவணை 5

### பொதுத்துறை கைத்தொழில் உற்பத்தி-தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்கள்

| | | 1976 | 1977 | 1978 | வீதமாற்றம் 1978 |
|---|---|---|---|---|---|
| 1. | சிமெந்து .. .. ('000 தொன்கள்) | 418.9 | 355.5 | 575.1 | 61.1 |
| 2. | உருக்கு .. .. (சுருளை '000 தொன்கள்) | 28.3 | 24.6 | 43.6 | 77.2 |
| 3. | டயர் ('000 டயர்கள்) .. | 181.4 | 156.5 | 256.9 | 64.2 |
| 4. | பெட்ரோலியம் .. (சுத்திகரிப்பு உற்பத்திகள் '000 தொன்கள்) | 1377 | 1406 | 1388 | — 1.3 |
| 5. | மட்பாண்டம் (தொன்கள்) .. | 2583 | 2996 | 3541 | 18.2 |
| 6. | உலோகம் .. .. | 199.5 | 378.5 | 361.4 | — 4.5 |
| 7. | கோஸ்டிக் சோடா .. (தொன்கள்) | 1571 | 1516 | 1877 | 23.8 |
| 8. | ஒட்டுப்பலகை .. .. (3 ஒட்டுப்பலகைகள் '000 சதுரமீட்டருக்குச் சமமானவை) | — | 3594 | 3093 | —14.0 |

நாட்டு மூலதனமாக இருக்கும். மேலும், 2,430 தொழில் வாய்ப்புக்களை இவை உருவாக்கும். கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு 60.7 கோடி ரூபா மூலதனத்தையும், 23,000 தொழில் வாய்ப்பு ஆற்றலையும் பெற்றிருக்கும் 1070 தொழில்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. ஜவுளிக் கைத்தொழில் அமைச்சு 1287 துணிமணிகள் தயாரிப்புத் திட்டங்களை அனுமதித்துள்ளது. இவற்றின் மூலதன உள்ளீடு 56.4 கோடி ரூபாவாக இருப்பதுடன் சுமார் 19000 தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வருடத்தில் இத்திட்டங்களில் எத்தனை அமுல் நடத்தப்பட்டன என்பது பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

### நிர்மாணம்

இவ்வாண்டில் நிர்மாணத் துறை சார்ந்த நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டன. இத்துறையில் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சி 9 சதவீதமாகும். நீர்ப்பாசன வேலைகள், பாதைகள், சமூகப் பொது முதலீட்டு நடவடிக்கைகள் போன்ற பொதுத்துறை நிர்மாண நடவடிக்கைகளே இவ்வதிகரிப்புக்கான பிரதான காரணமாகும். கட்டிடப் பொருட்களுக்கான நிரம்பலில் விஸ்தரிப்பு காணப்பட்ட போதிலும், செங்கல், மணல், பலகை, உருக்கு போன்ற பொருட்களுக்கு அவ்வப்போது ஏற்பட்ட தட்டுப்பாடுகள் காரணமாக பிரதான நிர்மாண வேலைகள் பாதிப்படைந்தன. ஒரு பொருளின் தட்டுப்பாடு முழு நிர்மாண வேலைகளையும் பாதித்துவிடக்கூடியது என்பது கவனிக்கத்தக்கது. மேலும், தச்சர், மேசன்மார் ஆகியோரின் தட்டுப்பாடு இவ்வாண்டில் நிர்மாண நடவடிக்கைகளைப் பாதித்த பிறிதொரு காரணியாகும். பொதுத்துறை நிர்மாண நடவடிக்கைகள் இலக்குகளை எய்தவில்லை. இதில் தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் நகர வீடமைப்புத் திட்டம் குறிப்பிடத் தக்கது. இத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தில் 35 சதவீதம் மட்டுமே இவ்வருடத்தில் செலவிடப்பட்டது. ஆனால், சில விதிவிலக்குகளும் உண்டு. அரசுக்குச் சொந்தமான கொழும்பு கொமர்சல் கம்பெனி (பொறியியல்) நிறுவனத்தின் 1978 ம் வருடத்துக்கான நிர்மாண இலக்கு 4.4 கோடி ரூபாவாக இருந்த போதிலும், வருடத்துக்கான இறுதிச் சாதனை 6 கோடி ரூபாவாக இருந்தது.

### வர்த்தகம், போக்குவரத்து, சேவைகள்

சேவைத்துறை பொதுவாகவும் — வர்த்தகம், போக்குவரத்து, பிரயாணம், வங்கித்துறை, நிதிச் சேவைகள் என்பன குறிப்பாகவும் — இவ்வருடத்தில் குறிப்பிடத்தக்க சம்பாத்தியங்களைப் பெற்றன. இச் சேவைத்துறைகளின் திரட்டிய பெறுமானம் சுமார் 6-8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. பெருந்தொகையான இறக்குமதிகள், அதிகரித்த உள்ளூர் உற்பத்தி என்பவற்றையடியொற்றி மொத்த, சில்லறை வியாபார அலுவல்கள் சுறுசுறுப்படையத் தொடங்கின. கடந்த பத்து வருடங்களின் தரவுகளுடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் புதிதாக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் தொகை கணிசமான அளவு அதிகரித்துக் காணப்பட்டது. இவ்வதிகரிப்பு 1976 ம் ஆண்டை விடவும் 130 சதவீதம் ஆவுகம், 1977 யை விடவும் 85 சதவீதம் ஆகவும் இருந்தது.

போக்குவரத்துத் துறையில் குறிப்பிடத்தக்க விஸ்தரிப்பு காணப்பட்டது. முன்னெப்போதுமிராத அளவில் பெருந்தொகையான புதிய வாகனங்கள் இவ்வருடத்தில் பதிவு செய்யப்பட்டன. புதிதாகப் பதிவு செய்யப்பட்ட கார்களின் எண்ணிக்கை 6,716 (385 சதவீத அதிகரிப்பு) ஆகும்; 4876 லொறிகளும் வான்களும் (107 சதவீத அதிகரிப்பு) பதிவு செய்யப்பட்டன. வாகனங்களின் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பினையடுத்து பெட்ரோல் விற்பனை 16 சதவீதமாகவும், டீசல் விற்பனை 18 சதவீதமாகவும் அதி

## அட்டவணை 6

### ஜவுளிக் கைத்தொழில்

| | | 1976 | 1977 | 1978 | சதவீத மாற்றம் 1978 |
|---|---|---|---|---|---|
| 1. | நூல் நூற்றல் (மில். கிலோ) | 6.41 | 6.97 | 7.87 | 12.9 |
| | ஆற்றல பயன்பாடு(%) .. | 47.3 | 51.8 | 45.6 | —12.0 |
| 2. | நெய்தல் (மில். மீட்டர்) .. | 108.15 | 107.72 | 115.87 | 7.6 |
| | ஆற்றல் பயன்பாடு (%) .. | 45.6 | 43.4 | 46.7 | 7.6 |
| | (அ) கைத்தறி உற்பத்தி .. (மில். மீட்டர்) | 25.63 | 24.70 | 24.39 | — 1.3 |
| | ஆற்றல் பயன்பாடு (%) | 31.3 | 30.2 | 29.9 | — 1.0 |
| | (ஆ) தனியார் சிந்தெடிக் ஆலை உற்பத்தி (மில். மீட்டர்) | 16.63 | 19.02 | 14.03 | —26.2 |
| | ஆற்றல் பயன்பாடு(%) .. | 56.1 | 64.2 | 56.8 | —21.5 |
| | ஏற்றுமதியாளர் தொகை .. | — | 40 | 55 | 37.5 |
| | மொத்த ஏற்றுமதிப் பெறுமானம் (மில். எஸ்.டீ.ஆர்கள்) | 7.2 | 13.0 | 21.2 | 63.1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 7

**பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள்**

| வருடம் | | பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள் தொகை |
|---|---|---|
| 1967 | .. | 206 |
| 1968 | .. | 215 |
| 1969 | .. | 279 |
| 1970 | .. | 240 |
| 1971 | .. | 141 |
| 1972 | .. | 261 |
| 1973 | .. | 355 |
| 1974 | .. | 349 |
| 1975 | .. | 284 |
| 1976 | .. | 265 |
| 1977 | .. | 319 |
| 1978 | .. | 592 |

கரித்தது. இ.போ.ச.வின் சேவைகள் 13 சதவீதமாகவும், பிரயாணிகள் போக்குவரத்து 15 சதவீதமாகவும் அதிகரித்தன.

இவ்வாண்டில் நாட்டுக்குள் வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 192,592 ஆகும்; இது முன்னைய வருடத்தை விடவும் 15 சதவீத அதிகரிப்பாகும். மேற்கைரோப்பிய நாடுகளிலிருந்தே பெருந்தொகையான பயணிகள் வந்தனர். இவ்வருடத்தில் சுற்றுலாத்துறையின் மொத்தச் சம்பாத்தியம் 72.8 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. எஸ். டீ. ஆர். அளவுகளில் பார்க்கும் போது இது 27 சதவீத அதிகரிப்பாகும். எவ்வாறிருப்பினும், வெளிநாட்டுப் பிரயாண விதிகள் தளர்த்தப்பட்டதை யடுத்து பெருந்தொகையான இலங்கையர் வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்ளத் தொடங்கினர். சுற்றுலாத்துறை மூலம் அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணியை இது ஒரு வகையில் ஈடு செய்வதாக இருந்தது.

**பணமும் வங்கியியலும்**

இவ்வருடத்தில் பண விஸ்தரிப்பு மிகக் குறைவாக இருந்தது ஒரு பிரதான அம்சமாகும். நாணயம், கேள்விவைப்புக்கள் (எம் 1) என்பவற்றையுள்ளடக்கிய பண நிரம்பலில் ஏற்பட்ட எல்லையதிகரிப்பு ரூ. 57 கோடியாக (அல்லது 11 சதவீதமாக) மட்டுமே இருந்தது. இதற்கு முன்னைய வருடத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு 120 கோடி (29சதவீத) ம்ரூபாவாகும். தவணை, சேமிப்பு வைப்புக்களை உள்ளடக்கிய பண நிரம்பலிலும் (எம். 2) குறைவான வளர்ச்சி வீதமே (48%) பதிவு செய்யப்பட்டது. நாணயம் கேள்வி வைப்புக்கள், தவணை வைப்புக்கள் சேமிப்புக்கள் என்பவற்றை யுள்ளடக்கிய மொத்தப் பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு 1977ல் 38 சதவீதம் ஆகவும், 1978 ல் 25% ஆகவும் இருந்தது. மொத்தப்பண நிரம்பலில் (நிலையான வைப்புக்கள் போன்ற) இரண்டாந்தரத் திரவச் சொத்துக்களின் பங்கு 1977 ல் 38 சதவீதமாக இருந்து, 1978 ல் 46 சதவீதமாக அதிகரித்துள்ளது. வட்டி வீதங்களில் 1977 செப்டம்பரில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களையடுத்து வங்கிகளில் இடப்படும் நிலையான வைப்புக்கள் பெருந்தொகையாக அதிகரித்தமையே இதற்கான காரணமாகும். இவ்வாறு பெருந்தொகையான இரண்டாந்தர திரவச் சொத்துக்களை (நிலையான வைப்புக்களாகவேனும்) வைத்திருத்தலானது, பணவீக்கத்துக்கு உந்துதளிக்கும் காரணி ஒன்ருக இருக்கும் என்பது அவதானிக்கத்தக்கது.

குறிப்பாக தனியார் துறைக்கு வழங்கப்பட்ட வர்த்தக வங்கிக் கடன்களே பண நிரம்பல் விஸ்தரிப்புக்கு (எம். 1) உந்துதல் வழங்கிய பிரதான காரணியாக இருந்தது. தனியார் துறையினருக்கான வங்கிக் கடன்கள் 189 கோடி ரூபாவால் (65%) அதிகரித்தன. இக்கடன்களில் பெருந்தொகை வர்த்தக, கைத்தொழில் நோக்கங்களுக்காகவே வழங்கப்பட்டது. இவ்வருடத்தில் தனியார் துறை வர்த்தக நடவடிக்கைகளிலும், கைத்தொழில்களிலும் ஏற்பட்டிருக்கும் செழிப்பு நிலைமைகளை இது பிரதிபலிக்கின்றது. பொதுத்துறைக் கூட்டுத்தாபனங்களுக்கான கடன் 42 சதவீதத்தால் அதிகரித்தது. செலாவணி வீதங்கள் திருத்தியமைக்கப்பட்ட பின்னர் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பும், உற்பத்தி விஸ்தரிப்பும் இதற்கான காரணமாகும். வருடத்தின் இறுதி அரைப்பகுதியில் பொதுத்துறைக் கூட்டுத்தாபனங்களுக்கான வங்கிக்கடன்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. கூட்டுறவுத் துறைக்கான வங்கிக் கடன் 36% அதிகரித்தது. 1977-78 மகா போகத்துக்கான விவசாயக்கடன் வழங்கலில் ஏற்பட்ட அதிகரிப்பும், கூடிய உத்தரவாத விலையின் கீழ் அதிகரித்த நெல் கொள்வனவும் இதற்கான காரணங்களாகும்.

வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 152.3 கோடி ருபாவால் அதிகரித்தமை பண நிரம்பல் விஸ்தரிப்புக்கான பிறிதொரு காரணியாகும். ஆயினும், அதிகரித்த ஏற்றுமதி வருமானங்கள் இந்நிலைமையை ஏற்படுத்தவில்லை. சர்வதேச நாணய நிதியின் கடன்களும், நீண்டகால மூலதன உட்பாய்ச்சலுமே இதற்கான காரணமாகும். இவ்வருடத்தில் அரசாங்கத்தின் நிதி நடவடிக்கைகள் பண நிரம்பல் விஸ்தரிப்புக்கு எத்தகைய தூண்டுதலையும் அளிக்கவில்லை. மறுபுறத்தில், அரச நடவடிக்கைகள் பண நிரம்பலில் குறைவை ஏற்படுத்தின. வங்கித் துறையிலிருந்து குறைவாகக் கடன் பெற்றதும், பெருந்தொகையான பணக் கையிருப்புக்களை வைத்திருந்ததும் இதற்குக் காரணமாகும்.

**அட்டவணை 8**

**பண நிலைமை (கோடி ரூபாய்கள்)**

| | 1976 | 1977 | 1978 | வீதமாற்றம் 1978 |
|---|---|---|---|---|
| 1. பணம் .. .. .. | 208.1 | 279.2 | 301.6 | 8.0 |
| 2. கேள்வி வைப்புக்கள் .. | 208.5 | 257.4 | 292.1 | 13.5 |
| 3. எம். 1 (1 2) .. .. | 416.6 | 536.6 | 593.6 | 10.6 |
| 4. எம் 2* .. .. | 215.5 | 335.1 | 495.6 | 47.9 |
| 5. பண நிரம்பல்** (3 4) .. | 632.1 | 871.7 | 1089.2 | 24.9 |
| 6. எம். 2 (5) ன் .. .. | 34.1 | 38.4 | 45.5 | 18.5 |
| 7. வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள் .. .. | 10.9 | 470.6 | 559.0 | 50.8 |
| 8. வர்த்தக வங்கிக்கடன்— | | | | |
| (அ) தனியார் துறை .. | 226.6 | 288.4 | 477.4 | 65.5 |
| (ஆ) கூட்டுறவுத்துறை .. | 66.3 | 123.1 | 167.4 | 36.0 |
| (இ) பொதுக் கூட்டுத்தாபனங்கள் .. .. | 105.6 | 167.0 | 236.3 | 41.5 |
| (ஈ) அரசாங்கம் (தேறியது) | 326.7 | 298.9 | 186.3 | 37.7 |

* வர்த்தக வங்கிகளின் தவணை சேமிப்பு வைப்புக்கள்
** நாணயம், கேள்வி, தவணை, சேமிப்பு வைப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளிநாட்டு வர்த்தகமும் கொடுப்பனவுகளும்**

1977 நவம்பர் நடுப்பகுதியில் இறக்குமதிகள் தாராளமயப் படுத்தப்பட்டதையடுத்து, 1978 ம் வருடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தொகை கணிசமான அளவு அதிகரித்தது. சுங்கத் தரவுகளின் பிரகாரம், 1978 ல் 144.4 கோடி ரூபா (74.3 கோடி எஸ். டீ. ஆர்.) பெறுமதியான வர்த்தகப் பண்டங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. இது முன்னைய வருடத்தை விடவும் (57.7 கோடி எஸ். டீ. ஆர்) 29 சதவீதம் அதிகமானதாகும். மொத்த தேசிய உற்பத்தியில் இந்த இறக்குமதி அளவு 40 சதவீதத்துக்கும் அதிகமானதாகும். 1977 ல் இது 20 சதவீதமாகவே இருந்தது. அரிசி, கோதுமை மா, சீனி போன்ற பண்டங்களின் இறக்குமதியில் வீழ்ச்சி காணப்பட்ட போதிலும், வாகனங்கள், போக்குவரத்து உபகரணங்கள், இயந்திரங்கள் போன்றவற்றின் இறக்குமதி பெருமளவில் அதிகரித்துக் காணப்பட்டது.

மறு புறத்தில், சுங்கத்தரவுகளின் பிரகாரம் மொத்த ஏற்றுமதி வருமானம் 1320.6 கோடி ரூபாவாக (67.7 கோடி எஸ். டீ. ஆர்) இருந்தது. இது முன்னைய வருடத்தை விடவும் 6 சதவீதமாக மட்டுமே அதிகரித்திருக்கின்றது. எஸ். டீ. ஆர். அளவுகளில், தேயிலை ஏற்றுமதி மூலமான வருவாய் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. குறைந்த சராசரி ஏற்றுமதி விலைகளே இதற்குக் காரணமாகும். அதே வேளையில் இறப்பர், தெங்குப் பொருட்கள் என்பன மூலமான ஏற்றுமதி வருவாய் அதிகரித்தது. தயார் செய்யப்பட்ட துணிமணிகள், மட்பாண்டங்கள் போன்ற கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதி வருவாய் அதிகரித்தது. துரிதமாக அதிகரித்து வரும் இறக்குமதிகளின் பின்னணியில், மிக மெதுவாக அதிகரித்து வந்த ஏற்றுமதி வருவாய்கள் காரணமாக வர்த்தக நிலுவையில் பாரிய அளவிலான குறை ஏற்படலாயிற்று. சுங்கத்தரவுகளின் பிரகாரம், இக்குறை 127.8 கோடி (6.6 கோடி எஸ். டீ. ஆர்.) ரூபாவாகும். மாறாக, 1977 ல் வர்த்தக நிலுவை 6.1 கோடி எஸ். டீ. ஆர். மிகையைக் காட்டியிருந்தது. சேவைத்துறையில் ஏற்பட்ட மிகை, வெளிநாட்டுக் கடனுதவிகள் என்பவற்றால் இக்குறை நிதிப்படுத்தப்பட்டது. (கடன்கள், உதவிகள் என்ற உருவில்) பெருந்தொகையான வெளிநாட்டு மூலவளங்கள் உட்பாய்ச்சப்பட்டமை காரணமாக நடைமுறைக் கணக்குக்குறை நிதிப்படுத்தப்பட்டது மட்டுமன்றி, வெளிநாட்டுச் சொத்துக்களும் பெருமளவில் அதிகரித்தன. வருட இறுதியில் 747.7 கோடி ரூபா (37 கோடி எஸ். டீ. ஆர்.) பெறுமதியான வெளிநாட்டுச் சொத்துக்கள் இருந்தன. இது இறக்குமதிச் செலவினங்களில் ஏறத்தாழ அரைவாசிக்குச் சமனானதாகும்.

இங்கு கவனத்தில் எடுக்க வேண்டிய மிகவும் முக்கியமான அம்சம் என்னவெனில், இங்ஙனம் வெளிநாட்டுச் சொத்துக்கள் பெருந்தொகையில் ஒன்று குவிந்தமை, நாட்டின் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட சாதக நிலைமையைப் பிரதிபலிக்கவில்லை என்பதாகும். உண்மையில், (கூடிய இறக்குமதிச் செலவினங்கள், மிக மெதுவாக அதிகரித்த ஏற்றுமதி வருமானம் என்பன காரணமாக) இவ்வருடத்தில் வர்த்தக நிலுவை குறையையே பதிவு செய்தது. எனவே, கடன்களாகவும், உதவிகளாகவும் பெருந்தொகையான வெளிநாட்டு மூலவளங்கள் உட்பாய்ச்சப்பட்டமை காரணமாக வெளிநாட்டு வளங்கள் கணிசமான அளவு அதிகரித்தன. அத்துடன், இதன் விளைவாக வெளிநாட்டுக் கடன் நிலுவையும் கூடிச் சென்றது. 1977 ம் ஆண்டு முடிவுற்றபோது நிலுவையாக இருந்த மொத்த வெளிநாட்டுக் கடன் 1082.7 கோடி ரூபாவாக (57.3 கோடி எஸ். டீ. ஆர்.) இருந்தது; 1978 ன் முடிவில் இத்தொகை 1481.1 கோடி ரூபாவாக (73.2 எஸ். டீ. அர். அக) அதிகரித்தது. இவ்வதிகரிப்பு 28 சதவீதமான

**அட்டவணை 9**

**வெளிநாட்டு வர்த்கமும் கொடுப்பனவுகளும்**

| | | 1976 | 1977 | 1978 | சதவீத மாற்றம் 1978 |
|---|---|---|---|---|---|
| 1. | மொத்த இறக்குமதி கோடி ரூபா | 464.5 | 600.7 | 1448.3 | 141.1 |
| | கோடி எஸ். டி. ஆர். | 47.7 | 57.6 | 74.3 | 29.0 |
| 2. | மொத்த ஏற்றுமதி கோடி ரூபா | 481.5 | 663.8 | 1320.6 | 99.0 |
| | கோடி எஸ். டீ. ஆர். | 49.5 | 63.7 | 67.7 | 6.3 |
| 3. | வர்த்தக நிலுவை கோடி ரூபா | —17.0 | —63.0 | 127.8 | — |
| | கோடி எஸ். டி. ஆர். | — 1.7 | — 6.5 | 65.5 | — |
| 4. | வெளிநாட்டுச் சொத்துக்கள் கோடி ரூபா | 140.2 | 557.4 | 747.7 | 34.1 |
| | கோடி எஸ். டி. ஆர். | 13.6 | 29.4 | 36.9 | 25.3 |
| 5. | வெளிநாட்டுப் பொதுக்கடன் கோடி ரூபா | 496.8 | 1082.7 | 1481.1 | 36.8 |
| | கோடி எஸ். டி. ஆர். | 48.4 | 57.2 | 73.2 | 27.8 |
| 6. | செலாவணி வீதங்கள் 100 ரூபாவுக்கு சமனுக— | | | | |
| | (ஏ) அமெரிக்க டாலர் | 11.28 | 6.44 | 6.46 | — 0.3 |
| | (பீ) ஸ்டேர்லிங் பவுண் | 6.84 | 3.36 | 3.16 | — 5.2 |
| | (சீ) ஜேர்மன் மார்க் | 27.12 | 13.49 | 11.70 | — 13.3 |
| | (டி) யப்பான் யென் | 33.33 | 15.45 | 12.45 | — 19.4 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். இவ்வருடத்தில் அரசாங்கம் பெற்றுக்கொண்ட திட்ட, திட்டமல்லாத மொத்தக்கடன் ரூ. 374.1 கோடி ரூபாவாக இருந்தது. இதில் திட்டக்கடன் 42 சதவீதமாகும். திட்டக்கடன்களில் 3 பெரிய கடன்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தும் (ரூ. 43.9 கோடி), நெதர்லாந்து (34.8 கோடி ரூபா), மேற்கு ஜேர்மனி (32.9 கோடி ரூபா) ஆகிய நாடுகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டன. திட்டமல்லாத கடன்கள் சர்வதேச நாணய நிதியின் நம்பிக்கை நிதியிலிருந்தும் (78.9 கோடி ரூபா), ஐக்கிய அமெரிக்க பீஎல் 480 இலிருந்தும் (58.6 கோடி ரூபா), ஜப்பானிலிருந்தும் (ரூ. 46.2 கோடி) பெறப்பட்டன.

1977 நவம்பர் 16 ல் மேற்கொள்ளப்பட்ட ரூபா புனர்மதிப்பீட்டினையிருந்து 1978 இறுதியில் இலங்கை ரூபாவின் செலாவணி வீத விருத்தி நிலைமைகள் பின்வருமாறு இருந்தன:

* ஜப்பான் யென், ஜேர்மன் மார்க் என்பவற்றுடனை இலங்கை ரூபாவின் பெறுமதி முறையே 10 சதவீதமாகவும், 17 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது.
* ஐக்கிய இராச்சிய பவுண் ஸ்டேர்லிங் பிரெஞ்சு மார்க் என்பவற்றுடனை ரூபாவின் பெறுமதி விழ்ச்சி முறையே 8.4 சதவீதமாகவும், 12.4 சதவீதமாகவும் இருந்தது.
* அமெரிக்க டொலருடனை ரூபாவின் பெறுமதி சுமார் 3 சதவீதமளவில் அதிகரித்துக் காணப்பட்டது. ஏனைய நாணயங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது டொலர் - ரூபா மாற்று வீதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மிகச் சிறிய அளவிலேயே இருந்தன. இலங்கை ரூபா உலகின் எந்த பிரதான நாணயத்துடனும் உத்தியோக பூர்வமாக தொடர்பு படுத்தப்படாதிருந்தபோதிலும்,1977 நவம்பரின் பின்னர் டொலர் - ரூபா மாற்று வீதம் (அநேகமாக) உறுதியடைந்து வந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

### விலைகளும் பணவீக்கமும்

கிடைக்கக் கூடியதாயிருக்கும் தரவுகளின் பிரகாரம், இவ்வருடத்தில் பொருளாதாரத்தின் மீதான பணவீக்கம் கணிசமானளவு — அதாவது சுமார் 16 சதவீதம் — அதிகரித்துக் காணப்பட்டது. (பாவனையாளர், நடுத்தர, முதலீட்டுப் பொருட்களை உள்ளடக்கிய) மொத்த விலைச் சுட்டெண் 1977 ம் ஆண்டை விடவும் 15.8 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டது. பல்வேறு பண்டத் தொகுதிகளினதும் விலையதிகரிப்புக்கள் வித்தியாசமானவையாக இருந்தன. இறக்குமதிப் பொருட்கள், நடுத்தர, முதலீட்டுப் பொருட்கள் என்பவற்றின் விலைகளிலேயே கூடிய அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

ஏனைய குறிப்பிடத்தக்க அம்சங்களாவன:

—இறக்குமதிப், பொருட்களின் மொத்த விலைச் சுட்டெண் சுமார் 49 சதவீதம் அதிகரித்தது. 1977 நவம்பரில் நடைபெற்ற ரூபா புனர்மதிப்பீடே இதற்கான பிரதான காரணமாகும். இதே வேளையில், உள்ளூர் பொருட்களின் விலைகள் 16 சதவீதமாக மட்டுமே அதிகரித்தன.

—நடுத்தர முதலீட்டுப் பொருட்களின் விலைச் சுட்டெண்கள் முன்னைய வருடத்தை விடவும் 30 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டன. இவ்வகைப் பொருட்களில் பெரும்பான்மையானவை இறக்குமதிப் பொருட்களே. எனவே இறக்குமதிச் செலவுகளில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பினையே இதுவும் காட்டுகின்றது.

—பாவனையாளர் விலைமட்டம் முன்னைய வருடத்தை விடவும் 12 சதவீதம் அதிகரித்துச் சென்றிருப்பதனைத் தரவுகள் காட்டுகின்றன. நுகர்வோர் பொருட்களுக்கான மொத்த விலை உப-குறிகாட்டி 11.7 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்திருப்பதுடன் (கொழும்பு நகர) வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டி 12.1 சதவீதமாக அதிகரித்துள்ளது.

### வேதனங்கள்

அரசாங்க ஊழியர்களுக்கான குறைந்தபட்ச வேதனம் 1977ல் 1.3 சதவீதமாகவும், 1978 ல் 15 சதவீதமாகவும் அதிகரித்திருப்பதனை மத்திய வங்கி வேதனக் குறிகாட்டிகள் காட்டின. எழுதுவினைஞர், தொழில் நுட்பத்தர ஊழியர்களின் சாதாரண சம்பள மட்டம் 12 சதவீதம் அதிகரித்தது; 1977 ல் இதில் ஏற்பட்ட அதிகரிப்பு 1 சதவீதம் மட்டுமே. முன்னைய வருடத்தின் 2 சதவீத அதிகரிப்புக்குப் பதிலாக சிற்றூழியர், ஆசிரியர் ஆகியோரின் வேதனங்கள் 1978 ல் முறையே 16 வீதமும் 10 வீதமும் அதிகரித்தன. 1977 டிசம்பரில் அரச ஊழியர்களின் சம்பளங்கள் உயர்த்தப்பட்டதன் பின்னணியிலேயே இவ்வதிகரிப்புக்கள் நிகழ்ந்துள்ளன. மேலும், நவம்பர் 1978 ல் சம்பள அதிகரிப்பு ஒன்று அறிவிக்கப்பட்ட போதிலும் 1979 ம் ஆண்டிலேயே அது அமுல் செய்யப்படும். எவ்வாறிருப்பினும், பணவீக்க நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது (சிற்றூழியர்களைத் தவிர) ஏனையோரின் மெய் வருமானங்கள் குறைந்தே காணப்படுகின்றன.

மெய் வருமானங்களின் வீழ்ச்சியினால் ஏற்படும் பாதகமான விளைவுகளை மத்திய வங்கி பின்வருமாறு சுட்டிக் காட்டுகின்றது. ''பல்வேறு தரங்களிலுமான ஊழியர்களின் குறைந்த பட்ச வேதனம் பற்றிய குறிகாட்டிகள் சம்பள உயர்வு, படிகள், போனஸ், மேலதிக வேலை நேர கட்டணம் என்பவற்றை உள்ளடக்குவதில்லை. தமது மேய் வருமானங்கள் வீழ்ச்சியுற்று வருவதன் காரணமாக அரச துறை, தனியார் துறை ஊழியர்கள் தாம் இழந்துவரும் வருமானங்களை ஈடுகட்டும் பொருட்டு 'தேவையற்ற' ஓவர்டைம் வேலைகளில் ஈடுபட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், பல ஊழியர்கள் பகுதிநேர வேலைகளையும் தேடிக்கொண்டுள்ளனர். வழமையான வேலைத்தளங்களில் ஊழியர் சமுகமளியாமை தொடர்ந்தும் அதிகரித்து வருவது இதனைப் பிரதிபலிக்கின்றது. பணக்கூலிகளை வீக்கம் 'அள்ளிச்' செல்லும் ஒரு சூழ்நிலையில் இத்தகைய நிலைமைகள் தோன்றுவது தவிர்க்க முடியாததாகும்.'' சட்டத்தின் மூலம் விதிக்கப்படும் தடையுத்தரவுகள் மூலம் இப்பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது. பணவீக்க நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் வேதன அமைப்பினை மாற்றியமைப்பதே இதற்கான மிகப் பொறுத்தமான இறுதித் தீர்வாக இருக்கும்.

### அரசாங்க நிதி

அரசாங்க வருமானத்தில் முன்னெப்போதுமிராத வகையில் அதிகரிப்பு தென்பட்டது. மறுபுறத்தில், அரசாங்கச் செலவினங்களில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் எய்தப்படவில்லை. அதாவது, மூலதன வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

அரசாங்க வருமானத்தின் அளவிலும், அமைப்பிலும் முக்கியமான மாற்றங்கள் காணப்பட்டன. மொத்த வருமானம் குறித்த உத்தேச மதிப்பீடுகளின் பிரகாரம், ரூ. 1156.7 கோடி வருமானம் பெறப்பட்டது. இது

(15ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புப் பெருந்திட்டம்

கொழும்புப் பெருந் திட்டத்தின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கொழும்பு மத்திய பிரதேசத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள், இவ்வருடம் செப்டம்பர் மாதத்தில் விவரமான படங்களுடன் கூடிய அறிக்கையாக வெளியிடப்பட்டது. இம் மத்திய பிரதேசம் 1,200 ஏக்கர் நிலப்பகுதியை உள்ளடக்கி உள்ளது. ஹல்ட்ஸ்டோர்ப், புறக்கோட்டை, கோட்டை, காலி முகப்பகுதி என்பனவற்றை உள்ளடக்கும் இப்பகுதி, ஆறு முக்கிய பிரதேசங்களாக புனரமைப்புச் செய்யப்படும். எச்சலன் சதுக்கம், லோட்டஸ் மையம், மரைன் ட்ரைவ் (கடற்கரை வீதி), கச்சேரி ரோட், மீன் சந்தை, நீதிமன்றங்கள் என்பனவே இந்த ஆறு பிரதேசங்களுமாகும்.

அரசாங்கம் பிரதானமாக முன்னுரிமை வழங்கியுள்ள மூன்று அபிவிருத்தித் திட்டங்களுள் கொழும்பு பெரு நகர (மெட்ரோபொலிட்டன் கொழும்பு) அபிவிருத்தியும், மீன் அபிவிருத்தியும் ஒன்றாகும். மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டம், தீர்வையற்ற வர்த்தக வலயம் என்பன ஏனைய இரண்டுமாகும். கொழும்பு பெரு நகரப் பகுதியில் சுமார் 1,000 சதுரமைல் பிரதேசத்தை இந்த கொழும்புப் பெருந் திட்டம் உள்ளடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதில் கொழும்புப் பட்டினப் பகுதியின் அபிவிருத்திக்கென 100 சதுரமைலை உள்ளடக்கி ஒரு திட்டம் உருவாக்கப்படும். அத்துடன், இதனையடுத்துள்ள மாகொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் பிரதேசத்துக்கென இன்னொரு திட்டம் தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட நிபுணர்களது வார்த்தைகளிற் கூறுவதாயின்,

''வீடுகள் வழங்கல், தண்ணீர் விநியோகம், வடிகால், போக்குவரத்து போன்ற பல்வேறு வசதிகளையும் புத்துயிரளித்து விஸ்தரிப்பதற்கான துணிகரத் முயற்சிகளை இத் திட்டங்கள் கொண்டுள . . . . இவ்வகையில், நவீன நகரொன்றை உருவாக்கத் தேவையான சகல அம்சங்கள், உபகரணங்கள் அத்தனையையும் இவை உள்ளடக்கியுள்ளன. சேரிப்பகுதிகளை ஒழித்து அவற்றை அபிவிருத்தி செய்தல், புது வீடுகளை நிர்மாணித்தல், நீர் விநியோகத் திட்டங்களை விஸ்தரித்தல், போக்குவரத்துத் துறை அபிவிருத்தி போன்ற பல துறைகளிலான அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்கனவே செயலூக்கம் பெற்றுவிட்டன. சமூகமொன்றின் அபிலாசைகளின் குவிமையமாகவும், தொழில் வாய்ப்புக்களின் பிரதான கேந்திரமாகவும், செல்வத்தின் வற்றாத ஜீவ ஊற்றாகவும் நகரின் இப்பகுதி விளங்குகின்றது. நகருக்கு வருவோர் நகரின் பிரதிபிம்பத்தையும் இங்கேயே பார்க்கிறார்கள். பொதுவாக தேசத்துக்கும் சிறப்பாகக் கொழும்பு மாநகருக்கும் புதியதொரு தோற்றப்பாட்டினைச் சிருஷ்டித்தல், பொருளாதார அபிவிருத்தி என்ற இரு வழிகளிலும் மத்திய கொழும்புப் பகுதியைச் சீரமைத்தல் முக்கிய ஓர் அம்சமாக அமைகிறது.''

அரசாங்கத்தின் நாடு நகர நிர்மாணத் திட்டமிடல் திணைக்களத்தின் அதிபராக 1960 களில் இருந்தபோதே, அதன் தற்போதைய பணிப்பாளர் இப் பெருந் திட்டத்துக்குக் கட்டியம் கூறியிருந்தார். உண்மையில் அவர் தமக்குள்ளேயே ஒரு திட்டத்தைத் தயார் செய்து வைத்திருந்தார். நாடு நகர நிர்மாணத் திட்டமிடல் தொடர்பான சட்டவிதிகள் போதியளவு இன்மை, தகுதி பெற்ற தொழில் நுட்ப நிபுணர்கள் பற்றாக்குறை என்ற இரு காரணிகளாலும் உந்தப்பட்டு, இவர் இத் திட்டத்தை அன்று முன்வைத்தார் எனக் கூறலாம். அத்துடன், திட்டமிடல் அமைச்சின் பொருளாதார வல்லுனர்களிடையே பௌதிகத் திட்டமிடலின் முக்கியத்துவம் பற்றி பொதுவான ஒரு அறியாமை அப்போது நிலவிற்று என்ற உண்மையும் கவனத்திற்கெடுக்கத்தக்கது. இத்தகைய நிகழ்ச்சித் திட்டமொன்றை உருவாக்குதற்கு செல்வாக்கு மிக்க அதிகாரிகள் சிலர் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். கொழும்பு நகரை அபிவிருத்தி செய்யப் பெருந் திட்டங்கள் அவசியமில்லை எனவும், கிராமப் பகுதிகளின் அபிவிருத்தியிலேயே கூடிய அக்கறை செலுத்தப்பட வேண்டுமென்றும் அவர்கள் கூறினர். ஆனால், 1970 ன் ஆரம்பப் பகுதியில் இந் நிகழ்ச்சித் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டபோது பணிப்பாளரது கருத்துக்கள் ஏற்கப்பட்டன. எனினும், இது தொடர்பாக முன் வைக்கப்பட்ட இரு வேறுபட்ட கருத்துரைகளிலும் சரி பிழைகள் காணப்பட்டன என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றே. இத் திடட்த்தின் அவசியம், அதன் முக்கியத்தும் என்பனவற்றையும் அது தொடர்பான விளக்கத்தையும் உள்ளடக்கி இரத்தினச் சுருக்கமான தஸ்தாவேஜு ஒன்ற 1978 ஜனவரியில் கொழும்பு பெருந்திட்டப் பகுதி வெளியிட்டது.

தேசிய ரீதியில் கொழும்பு நகரின் தற்போதைய பங்கு, எதிர்காலத்தில் அது ஆற்றக்கூடிய பங்களிப்பு, கொழும்பின் இன்றைய நிலை, எதிர்கால நிலைமைகள் மற்றிய மதிப்பீடு என்பனவற்றை எடுத்துக் காட்டுமாப்போல் இவ் விமர்சனம் ஆரம்பத்திற் காணப்பட்டது. பொருளாதாரக் குறிகாட்டி, ஜனத்தொகை மூலவளம், பொது வசதிகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு இவை விளக்கப்பட்டுள்ளன. திட்டத்தின் நோக்கங்கள் யாவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றைக் கருத்திற் கொண்டு, திட்டங்களும், கொள்கைகளும் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன. இவ் விஷயத்தில் பின்பற்றப்படும் முறை மிகச் சிறப்பான ஒன்றாகக் காணப்படுகிறது. குறிப்பாக எட்டு ''செயற் திட்டங்கள்'' இதில் உள்ளடக்கப்பட்டுள்ளமை உண்மையில் வரவேற்தக்க ஒன்று. நகரத் திட்டமிடலாளர்களைப் பொறுத்தளவில், இது அவர்கள் பேராசிரியர் ஒட்டோ கீனிக்ஸ் பேர்கரிடமிருந்து கற்றுக் கொண்டதாகும்.

முன்னர் குறிப்பிட்டது போன்று, இத் திட்டத்தில், நல்ல பல அம்சங்கள் காணப்படினும், விமர்சனம் செய்யக் கூடிய சில அம்சங்களும் இல்லாமலில்லை. இதில் முக்கியமானதாக, தேசிய நோக்கில் இன்று கொழும்பு நகரின் பங்களிப்பையும், எதிர் காலத்தில் அது நல்கவுள்ள பங்களிப்பையும் குறிப்பிடலாம். இவ்வளவு முக்கியத்துவம் மிக்க ஒரு விஷயத்தை மதிப்பீடு செய்தல், ஒரு தேசிய நகரவாக்க கொள்கையை உருவாக்கும் விஷயத்தில் பெருமுக்கியத்துவத்தைப் பெறுகிறது. இது வரை இத்தகைய கொள்கையொன்று இனங் காணப்படவோ, உருவாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படவோ இல்லை. ஒரு தேசிய நகரத் திட்டம் எங்ஙனம் கிராமியத் துறையிலான மாற்றத்தையும் அபிவிருத்தியையும் கொணரும், தற்போதைய சிபார்சுகள் ஒரு தேசிய நகரக் கொள்கையுடன் எத்துணை தூரம் இணைந்து செல்லும், நகர அமைப்புக்கும் கிராமப்பகுதிகளுக்குமிடையேயான தொடர்பு என்ன, இவை யாவற்றுக்கும் அபிவிருத்தி உயாயங்களுக்குமிடையேயான தொடர்பு யாது என்பன போன்ற அடிப்படை விஷயங்கள் இன்னும் விளக்கப்பட வேண்டியுள்ளன. எனவே, இவ்வகையில் நோக்குகையில், கொழும்புப் பெருந் திட்டத்தில் இவ்விஷயங்கள் பற்றிய விளக்கம் உள்ளடக்கப்படவில்லை யென்றே சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. தற்போதைய சிபார்சுகளின் அடிப்படையில் வைத்து நோக்குகையில் கொழும்பு நகரின் பங்களிப்பு பற்றி தேவைக்கதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வலியுறுத்தப் பட்டுள்ளதோ என ஐயுறவேண்டியுள்ளது.

திட்டமிட்ட செயற் திட்டங்களின்றேல் நாட்டின் பிரதான நகரப் பகுதியாகத் திகழும் இதன் அபிவிருத்திப் பிரச்சினைகள் மேலும் மோசமடையுமென்பதை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளது சரியானதே. முக்கியமான ஒரு திட்டம் அத்தியாவசியமாகக் காணப்பட்டது; அது இப்போது ஆக்கப் பட்டுள்ளது. நாட்டை எதிர் நோக்கும் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளை எத்துணை திறம்பட இத்திட்டம் தீர்த்து வைக்கும் என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். வளர்முக நாடுகளில் நகராக்கப் பிரச்சினைகள் பேரளவிற் பெருகி வருதற்கு ஒரு காரணம், நகரப் பொருளாதாரங்கள் கிராமியப் பொருளாதாரங்களினின்றும் வேறுபட்டவையாகக் கணிக்கப்படுவதாகும்; குறிப்பாக அபிவிருத்திக்கான முதலீடுகள் மேற்கொள்ளப்படுகையில் இது தெளிவாகத் தெரிகிறது. இலங்கையிற் காணப்படுவதும் இதே நிலையே. கொழும்புப் பெருந் திட்டத்திலும், உயர் அதிகாரம் மிகு தொழில் நுட்ப நிபுணர்களது கவனமும் அக்கறையும், கொழும்பு நகரின் பிரச்சினைகளின் பாலே ஈர்க்கப்பட்டுள்ளதைக் காணலாம். தீவின் வேறு எந்த நகரப் பிரச்சினைகளிலும் இத்துணை அக்கறை செலுத்தப் படவில்லை. இதன் விளைவாக நடைபெறுவது என்னவெனில், கொழும்பு நகரின் பிரச்சினைகள் இனம் காணப்பட்டுத் தீர்க்கப் பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே வேளை, ஏனைய நகரங்களின் பிரச்சினைகள் விடுபட்டுச் செல்கின்றன.

பெருந் திட்டத்தின், பல்வேறு திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களில் ஏற்படும் செலவினங்களை வெளிக் காட்டலே, இந்த அபிவிருத்தித் திட்டச் செய்முறையின் முக்கிய அம்சமாகும். மதிப்பீட்டிடையிலான செலவினங்கள் 1978 / 1985, 1986 / 2001 என்ற இரு வேறுபட்ட காலப் பிரிவுகளுக்குக் கணிக்கப்பட்டுள்ளன. முதற் காலப் பகுதியில், மொத்த மூலதன முதலீட்டுச் செலவினங்கள் (நிலத்தை தவிர்த்து) 458.4 கோடி ரூபாவாகும். இரண்டாம் காலப்பகுதிக்கான (1986 - 2001) செலவினங்கள் (நிலத்தைத் தவிர்த்து) 726.1 கோடி ரூபாவாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இம்முதலீட்டில் பெரும்பகுதி வீடமைப்பு போக்குவரத்து என்பனவற்றுக்கு செலவிடப்படும். வர்த்தகம் இதனையடுத்து இடம் பெறுகிறது. உத்தேசிக்கப்பட்டுள்ள விகிதாசார அளவுகளில் கொழும்புப் பெருநகரப் பகுதிக்கான இம்முதலீடுகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், நகரின் உடனடிப் பிரச்சினைகள் சிலவற்றைத் தீர்த்து வைக்குமென்பது உண்மையாயினும், இது மேலும் மோசமான பிரச்சினைகளை உருவாக்குமென்பதையும் எதிர்பார்க்கலாம். இத் திட்டத்துக்குட்பட்டு மேற்கொள்ளப்படும் முதலீடுகள் யாவும், மேலும் விரைவான வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதை அவதானிக்கலாம். அத்துடன், கொழும்பினதும், அதன் பின்னணிப் பகுதிகளினதும் முக்கியத்துவத்தை அதிகரிப்பனவாயும் அவை அமைந்துள்ளதையும் காணலாம். ஆனல், கிராமப்பகுதிகளிலிருந்து கொழும்பு நகரை நோக்கி மக்கள் வர ஆரம்பிப்பதற்கு இது வழிகோலலாமென்ற அச்சமும் அபாயமும் இதிற் காணப்படுகிறது.

இதுவரை இப் பிரச்சினை மிக மிகச் சிறிதான ஒன்ருகவே காணப்பட்டு வந்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பு நிலைமையை ஆராய்ந்த திட்ட அறிக்கை கொழும்புப் பெருநகரில் வேலையின்மை 26 சதவீதமாகக் காணப்படும் அதே வேளை, நாட்டின் வேலையின்மை 19 சதவீதமாக காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளது. இது ஒரு சம நிலையற்ற அம்சமெனவும் இது சரிசெய்யப்பட வேண்டுமெனவும் திட்டம் நம்புகிறது. வேலை வாய்ப்புத் தொடர்பாக இவ்வறிக்கையிற் தெரிவிக்கப் பட்ட சில அம்சங்களைப் பார்க்கும்போது, வளர்முக நாடுகளின் வேலை வாய்ப்புப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பாக தவருன சில எடுகோள்களின் அடிப்படையில் அமைந்த பிழையான முடிவொன்று எடுக்கப்பட்டு விட்டதோ என ஐயுறத் தோன்றுகிறது. அது பின்வருமாறு கூறுகிறது: ''உண்மையில் வேலை வாய்ப்பு வசதிகளின்மையே, முக்கியமானதும், கவலை தருவதுமான ஒரு பிரச்சினையாகும். இதே போன்று, முதனிலை உற்பத்தித்துறைகளில் — குறிப்பாக விவசாயத் துறையில் — தொழில் வசதி அதிகரிப்புக்கான உள்ளார்ந்த வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. கைத்தொழில் உற்பத்தித் துறையே இப் பிரதேசத்தின் எதிர்கால அபிவிருத்திக்கான திறவுகோலாக மிளிர்கிறது.'' கொழும்பு பெரு நகரப்பகுதியுள் இத்தகைய கைத்தொழில் அபிவிருத்தியை மேற்கொள்ளல் கிராமப்பகுதிகளிலிருந்து பெருமளவில் மக்களை கொழும்பை நோக்கி ஈர்க்குமென்பதை எவரும் அத்துணையளவு கவனத்திலெடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

உற்பத்தித்துறை தவிர, நிர்மாணத் துறையிலும் பெருமளவு வேலை வாய்ப்புக்கள் உருவாகுமென திட்டம் எதிர்பார்க்கிறது. வீடமைப்புத் துறை, சார்பு ரீதியாக ஒரு தொழிற் செறிவு மிக்க நடவடிக்கை யென்பது குறிப்பிடத் தக்கது. நீர் விநியோகம், வடிகால், சாக்கடை, நிலமீட்பு, வாய்க்கால்கள், பாதைகள் முதலியன தொடர்பான சமூகப் பொது முதலீட்டு நடவடிக்கைகள் யாவும் பேரளவு வேலை வாய்ப்புக்களை உருவாக்க வல்லவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகம், சேவை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட தொழில் வாய்ப்புக்கள் உயர் வேலை வாய்ப்பு நெகிழ்ச்சி கொண்டவை. ஆனால், அண்மைய எதிர்காலத்தில் அவற்றின் விரிவுக்கான உள்ளார்ந்த சாத்தியக் கூறுகள் மிகக் குறைவு அரசாங்க நிர்வாகத் துறைகளில் இந்த அமைப்பு உச்சத்தை எய்தியுள்ளமை இதற்குக் காரணமாகும். ஆனால், இரண்டாம் நிலைத் தொழில் துறைகளின் விருத்தியும் விஸ்தரிப்பும் மூன்றாம் நிலைத் துறையில் தொழில் வாய்ப்பைப் பெருமளவில் உருவாக்கும்.

எமது தேசிய அபிவிருத்திக்கான உபாயங்கள் அத்தனையையும் முழுமையாகக் கருத்திற் கொள்ளக் கூடிய, ஒரு தேசிய நகராக்கக் கொள்கையை உருவாக்குதற்கான அவசியத்தின் பால் விசேட கவனத்தைச் செலுத்த இத் திட்டத்தின் விவரங்கள் உதவுகின்றன. புதிதாக உருவாக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபை, அதன் பணிகளுள் ஒன்றாக இதனை இயல்பாகவே கொள்ளலாம். துரிதப் படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தைப் பொறுத்தளவில், இத்தகைய ஒரு திட்டத்தின் தொடர்பும், முக்கியத்துவமும் விசேட முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகலாம்.

எவ்வாறிருப்பினும், ஒரு குறித்த பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமிடல் நடவடிக்கைகள், தேசியக் கொள்கையில் தேவைக்கதிகமான செல்வாக்கை ஏற்படுத்தி விட அனுமதித்தல் கூடாது. இன்றைய நிலையில் கொழும்புக்கு இது சாலப் பொருந்தும். எந்த வகையான அபிவிருத்தித் திட்டமிடல் நடவடிக்கைகளாயினும், தீர்மானங்களை மேற்கொள்ளல், செயற்பாடு சம்பந்தமான அவற்றின் பல்வேறு மட்டங்களில் அரசாங்கத் தலையீட்டை அவசியமாக்குகின்றன. பொருளாதார, சமூக, பௌதிக அமைப்பு என்பனவற்றில் அவ்வப்போது மாற்றங்களைக் கொண்டுவர இது அவசியமாகிறது. எனவே, மிகச் சிறந்த ஒரு தேசிய நகராக்கக் கொள்கையை உருவாக்க, தேசிய மட்டத்திலான தீர்மானங்களை மேற்கொள்ளும் விஷயத்தில் பௌதிகத் திட்டமிடல் வல்லுநர்களின் வழிகாட்டல் தேவை. இதே போன்று பிராந்திய உள்ளூர் மட்டங்களில் மேலதிகத் திட்டமிடல் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அவசியம்.

கொழும்புப் பெருந் திட்டத்தின் மிக முக்கிய சிறப்பம்சங்களாக ''நடவடிக்கைத் திட்டங்கள்'' அமைகின்றன. பின்வரும் ஒழுங்கைப் பின்பற்றி இவை உருவாக்கப்பட்டுள்ளன:

(1) ஒவ்வொரு முக்கிய அபிவிருத்திப் பிரச்சினைப் பகுதியும் காலம், மனித வலு என்பன கிடைப்பதற்கேற்ப தெரிவு செய்யப்பட்டு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

(2) ஒவ்வொன்றும் ஓர் அவசர, அவசியப் பிரச்சினையைக் கொண்டிருக்க வேண்டும்.

(3) உடனடியான பகுதிக்கு அப்பாலும் அவை ஒவ்வொன்றும் தாக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும்; அதாவது அவற்றின் எதிரொலி ஏனைய பகுதிகளிலும் ஏற்படுதல் வேண்டும்.

(4) ஒவ்வொன்றும் முன்னோடித் திட்டங்களாக அமைதல் வேண்டும்; இத் திட்டங்கள் வெற்றியளிக்கும் பட்சத்தில், பாரியளவில் ஏனைய இடங்களில் இத்தகைய திட்டங்களை உருவாக்க இது உதவும்.

சேரிகளைத் தர முயர்த்தல், கொட்டில்களைத் தர முயர்த்தல், சேரி வாழ் மக்களுக்கான புதுக் குடியிருப்பு வசதிகள், ஏற்றுமதிப் பதப்படுத்தல் வலயம், கோட்டே கழிவு நீர் திசை திருப்பற் திட்டம், புறக்கோட்டை சந்தை பேஸ்லைன் ரோட், உப மத்திய ஹோமாகம என்பன இத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எட்டுத் திட்டங்களுமாகும்.

திட்டம் வலியுறுத்தும் முக்கிய பல தொழில் நுட்ப அம்சங்களும் உள. உதாரணமாக, கொழும்பு பகுதியில் பிரதான பிரச்சினையாக இதுவரை இருந்ததும், இன்றும் இருந்து வருவதும் வடிகாலமைப்பே என்பதைத் திட்டம் ஒப்புக் கொள்கிறது. அத்துடன் வடிகால், நில மீட்பு என்பனவற்றுக்கிடையே ஒரு சம நிலையை உருவாக்குதற்கான அவசியத்தையும் இது வலியுறுத்துகிறது. முழுக் கொழும்புப் பகுதியினதும் நில அமைப்பை ஆராய்ந்த பின்னர், இயற்கையான புவியீர்ப்பு அடிப்படை கொண்டதாக நகரின் வடிகால் அமைப்பு அமைய வேண்டுமென உத்தேசிக்கப்பட்டுள்ளது; இது, நீரேற்று (பம்பிங்) நிலையங்களை அமைத்தற்கான முதலீட்டுச் செலவினங்களையும், அவற்றின் பாரமரிப்புச் செலவினங்களையும் தவிர்க்கும். இதே வேளை, உத்தேச வடிகால் திட்டங்கள், வெள்ளக் கட்டுப்பாட்டுக்கான அணைகள், கழிவு நீர் திசை திருப்பல் நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளதுடன், புதிய தண்ணீர்க் குழாய்கள், சாக்கடைக் குழாய்கள், பாதைகள், மற்றும் வசதிகள் என்பனவற்றை அமைப்பதற்கான இடங்களையும் அமையும். நிலங்களைக் கையேற்றற் பிரச்சினைகளைக் குறைத்தலும், கூட்டிணைக்கப்பட்ட நிர்மாணத்துக்கு வழிசெய்வதும் இதன் இன்னொரு நோக்கமாகும்.

வெளிக் காட்டப்பட்ட கொள்கைத் தத்துவங்களில், நகர அபிவிருத்தி அதிகார சபையொன்றின் அவசியம் ஒரு வேளை அதி முக்கியமானதெனலாம். தற்போதைய கொழும்புப் பெருந் திட்டச் செயற்பாடு உருவாக்கியுள்ள அசைவைத் தொடர்ந்து வைத்திருக்க இது அதி முக்கியமெனதென இவ்வறிக்கை கூறுகிறது. இச்சிபார்சை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, இத்தகைய ஓர் அதிகார சபையை நிறுவியுள்ளது. பெருந் திட்டத்தின் நோக்கங்கள், அபிலாஷைகளை இது நிறைவேற்றி வைக்குமென எதிர்பார்க்கலாம்.

---

(12ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னைய வருடத்தை விட ரூ. 488.1 கோடி ரூபா (73%) அதிகமானதாகும். சமீபகால வரலாற்றில் ஒரு தனி வருடத்தில் ஏற்பட்ட மிகக்கூடிய அதிகரிப்பு இதுவாகும். அரசாங்க வருமானம் மொ. தே. உ. விகிதம் 1977 ல் 23 சதவீதமாகவும் 1978 ல் 33 சதவீதமாகவும் அதிகரித்தது. பொதுவாக சகல வரிவருமானங்களும் அதிகரித்ததுடன், குறிப்பாக ஏற்றுமதித் தீர்வைகளில் மிகக் கூடிய அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது. தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் என்பன மூலமாக பெறப்பட்ட ஏற்றுமதித் தீர்வைகள் 424.7 கோடி ரூபாவாகும். இது முன்னைய வருடத்தை விடவும் 600 சதவீத அதிகரிப்பாகும். இவ்வருடத்தில் பெறப்பட்ட இறக்குமதித் தீர்வைகள் மொத்த அரசாங்க வருமானத்தில் 37 சத வீதமாக இருந்தன. நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானத்

(26ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்டாட் — எந்தப்பக்கத்தில்?

உங்டாட் பற்றிய தமது அண்மைய கட்டுரையொன்றில் இந்நிறுவனம் பற்றிய சில முக்கியமான கேள்விகளை திரு. சக்கரவர்த்தி ராகவன் எழுப்பியிருந்தார். வட கோளார்த்த நாடுகள் —அவை மேற்கிலிருந்தாலென்ன கிழக்கிலிருந்தாலென்ன —, மூன்றாம் மண்டல நாடுகளுடனான கூட்டுறவு தொடர்பாக உங்டாடுக்கு ஐ. நா. வழங்கியியுள்ள ஆணையிலிருந்து, எத்துணை தூரம் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன என்பதை அவர் எடுத்துக் காட்டுகிறார். வளர்முக நாடுகளுக்கிடையேயான பொருளாதாரக் கூட்டுறவு தொடர்பான பல கூட்டங்களை ஏற்பாடு செய்து அவற்றை 1979 ல் கூட்டுமாறு உங்டாட் கேட்கப்பட்ட வேளையில் ''வடக்கு'' நாடுகளின் மனப்போக்கு தெளிவாகியது என்றும் அவர் கூறுகின்றார். மூன்றாம் மண்டல நாடுகளின் குழுச் செயலகங்கள், அந்நாடுகளின் பன்முக நிதி நிறுவனங்கள், உப பிராந்திய, பிராந்தியப் பொருளாதாரக் குழுக்கள், மூன்றாம் மண்டல நாடுகளின் அரசாங்க நிபுணர்கள் முதலியோரை உள்ளடக்குவனவாக இக் கூட்டங்கள் இருக்கும். இவற்றுக்கான நிகழ்ச்சித் திட்டம் வரையப்பட்டு வரவு செலவுத் திட்டமும் தயாரிக்கப்பட்டதுடன், நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. இதற்கான அங்கீகாரம் உங்டாடின் வர்த்தக, அபிவிருத்திச் சபையிடம் கோரப்பட, அச்சபை விரிவான பரிசீலனைகளை, வளர்முக நாடுகளிடையேயான பொருளாதார அபிவிருத்தி பற்றிய கமிட்டி (ECDC) யிடம் ஒப்படைத்தது. இது தொடர்பான விவகாரங்களை ஆராயவென அக்டோபரில் கூடிய கூட்டமொன்றில், ''பீ'' குழு நாடுகளும் (மேற்கைரோப்பாவும் ஏனையவும்), ''டி'' குழு நாடுகளும் (கிழக்கைரோப்பிய நாடுகள்) அதனைத் தடை செய்யும் விஷயத்தில் ஒன்றிணைந்து கொண்டன. ஐ. நா. வும் அதன் ஏஜன்ஸி நிறுவனங்களும் ''சர்வ தேசிய'' நோக்கைக் கொண்டவை எனவும் எனவே இத்தகைய கூட்டங்களைக் கூட்ட முடியாதெனவும் வாதாடின. உண்மையில் வளர்முக நாடுகளிடையேயான பொருளாதார அபிவிருத்தி பற்றிய கமிட்டி (ECDC). வளர்முக நாடுகளிடையேயான வர்த்தக அபிவிருத்தி பற்றிய கமிட்டி (TCDC) அல்லது இத்தகைய வேறு எக் கமிட்டிகளும் இருக்க முடியாதென்பதையே இது உண்மையிற் காட்டிற்று. எனவே 1979 ம் ஆண்டு மே மாதம் மணிலாவில் நடைபெறும் உங்டாட் 5 மகாநாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பான ஆரம்பக் கூட்டங்களைக் கூட்டுதற்குத் தேவையான ஆணையை உங்டாட் பெற்றிருக்கவில்லை எனத் தோன்றுகிறது. இதற்குத் தேவையான உங்டாட் நிதி கிடைக்கவில்லையென்றுகூடக் கூறலாம். எனவே ஜனவரி ஆரம்பத்தில் கொழும்பில் நடைபெற்ற பிராந்திய மகாநாட்டை ஒரு தனியார் ஆராய்ச்சி நிறுவனம் கூட்ட வேண்டி நேரிட்டது: இதற்கான நிதி பல்வேறு ஸ்தாபனங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

வளர்முக நாடுகளிடையே பொருளாதாரக் கூட்டுறவை ஏற்படுத்துதற்கான கமிட்டி (ECDC) 1976 லும் பின்னர் 1977 லும் ஐ. நா. பொதுச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டதாகும். இக் கமிட்டி நடவடிக்கைகளில் உங்டாட் நிறுவனத்துக்கு முன்னணி இடம் கொடுக்கப்பட்டதுடன், பல ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. வளர்முக நாடுகளிடையே பொருளாதாரக் கூட்டுறவை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு, அவற்றின் அமைப்பு விதிகளுக்கு இணங்க — ஆதரவு வழங்குமாறு ஐ. நா. அமைப்பின் கீழ் இயங்கும் விசேட துறை ஏஜன்சிகளையும், ஏனைய நிறுவனங்களையும் ஒரு ஐ. நா பொதுச் சபைத் தீர்மானம் கோரியுள்ளது. மேற்படிக் கமிட்டி தேவையான கூட்டங்களை நடத்துதற்கான செயலக சேவை உதவிகளையும், மற்றும் பொருத்தமான ஏனைய ஏற்பாடுகளையும் செய்துகொடுக்க வேண்டுமென்றும் அத் தீர்மானம் கோரியது. ஆனால் வடக்கின் கருத்து வேறுபட்டுக் காணப்படுவது போன்று தோன்றுகின்றது.

இத் தீர்மானத்தைச் சமாளிக்கவென 'பீ' குழு நாடுகளும், 'டீ' குழு நாடுகளும், ''அவற்றின் அமைப்பு விதிகளுக்கு இணங்க'' என்ற சொற்களுள் அபயம் தேட முயன்றன. இவ்வகையில் தர்க்க ரீதியான ஒரு முடிவுக்கு வந்தார் ராகவன்; தனது பல்வேறு குழுக் கூட்டங்களுக்கு உங்டாட் சேவைகளோ உதவிகளோ அளிக்கக் கூடாது . . . . அது 77 குழுக் கூட்டமாயிருந்தாலென்ன, 'பீ' குழுக் கூட்டமாகவிருந்தாலென்ன, அல்லது 'டீ' குழுக் கூட்டமாக விருந்தாலென்ன . . . . உதவி வழங்கக் கூடாதென வாதிட்டார். தவிரவும், பல்வேறு பிராந்திய ஆணைக் குழுக்களில் வடக்கானது, ஏற்கனவே செயலக, அங்கத்துவ மட்டங்களிற் பிரதிநிதித்துவப்படுத்தப் பட்டுள்ளது; ஆனால், பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பில் தெற்குக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. எனவே, ஐ.நா. நிதிகளைக் கொண்டு பொ.ஒ.அ. க்கான சேவைகளை வழங்கவோ, செலவுகளை வழங்கவோ கூடாது.

இச் செய்தி மூன்றாம் மண்டல நாடுகளை ஏற்கனவே எட்டியிருக்குமாதலால் 77 குழு நாடுகளின் அமைச்சர்கள் தன்ஸானியாவின் அருஷா நகரில் உங்டாட் 5 பற்றி ஆராயவென 1979 ம் ஆண்டு பெப்ரவரியில் கூடுகையில் இவ்விஷயம் தொடர்பாகப் புனராலோசனை செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

உங்டாட் மகாநாடுகளின் இத்தகைய முடிவில்லா நிலை குறித்துப் பல தடவைகள் 'பொருளியல் நோக்கு' கருத்துக்கள் தெரிவித்துள்ளது. ''மகாநாடு மீளவும் கூடுகிறது . . . .'' என்பதே எடுக்கப்படும் முடிவாக இருந்துள்ளதென்பதை நாம் பல முறை சுட்டிக் காட்டியுள்ளோம். 'வடக்கு' தொடர்ந்து தனது பணிகளைச் செய்யும்; ஆனால் 77 நாடுகள் குழு கோருவனவற்றை அது வழங்காது. எனவே, அது ஒரு பொது நிதியாகவிருந்தாலென்ன, நீதியும் சமத்துவமும் மிக்க ஒரு 'புதிய பொருளாதார அமைப்பாக' இருந்தாலென்ன, மூன்றாம் மண்டல நாடுகள் தமது தலைவிதியைத் தாமே தனியே நிர்ணயித்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

நாம் முன்னர் கூறியுள்ளது போன்று வடக்கின் கருத்தைப் பிரதிபலிக்கும் முறையில் லண்டன் 'இக்கனமிஸ்ட்' சஞ்சிகையின் கருத்துக்கள் அமைந்தன.

(19ம் பக்கம் பார்க்க)

# விஸ்தரிப்புச் சேவைகளும் சிறு கமக்காரரும்

வளர்முக நாடுகளின் அரிசி உற்பத்திப் பிராந்தியங்களிலுள்ள சிறு கமக்காரர்கள் எதிர்நோக்கும் அநேகமான பிரச்சினைகள் ஆற்றல் வாய்ந்த விரிவாக்கற் சேவைகள் குறைபாட்டிலிருந்தே எழுகின்றன. உதாரணமாக, இலங்கையில் சிறு கமக்காரர்களைப் பொறுத்தமட்டில், பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தாமையே பிரதான பிரச்சினையாயுள்ளது. சிறு கமக்காரர்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்தாமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால், அவற்றிற்கான அடிப்படைக் காரணங்கள் கமத்தொழிற் சேவைக் கடன் நிறுவக அமைப்புகளினதும், திருப்பிச் செலுத்தலுக்குப் பாதகமான முனைப்பு நிலைகளினதும் கோளாறுகளாலேயே ஏற்படுகின்றன. சிறு கமக்காரர்களை கடனைத் திருப்பிச் , செலுத்துவதிலிருந்து தடுத்துள்ள கமத்தொழில் அமைப்பின் அடிப்படைக் குறைபாடு, அவர்கள் தாம் பெற்ற கடனை அடைப்பதற்குப் போதுமான வருமானத்தைப் பெற முடியாமையிலிருந்து எழுந்ததாகும். இதற்கான பிரதான காரணம் கமத்தொழிலால் வரும் வருமானத்தைவிட அவர்களது குடும்பாதாரச் செலவுகளும், வேறு உடனடிப் பணம் சம்பந்தமான இறுப்பனவுக் கடப்பாடுகளும் அதிகமாக இருப்பதாகும். அதே வேளை விவசாய உள்ளீடுகளின் பற்றாக்குறை காரணமாக அவர்களால் போதிய வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடிவதில்லை. இங்கே தான் நாட்டினது கமத்தொழில் விஸ்தரிப்புச் சேவைகள் தோல்வி கண்டுள்ளன. நிலத்தின் உற்பத்தி ஆக்கத்திறன், நீர்ப்பாசன வசதிக் குறைவாலும், வேறு உள்ளீடுகளான உரம், கிருமிநாசினி ஆகியவை தரம் வாய்ந்தவையாயும், நியாயமான விலையில் உரிய காலத்தில் கிடைக்கக்கூடியவையாயும் இல்லாதிருப்பதாலும் மிகக் குறைவாகவே உள்ளது. மேலும், தகுந்த பண்டசாலைப் படுத்து வசதி, ஆலை வசதி, சந்தைப்படுத்து வசதி, செலவை ஈடு செய்யக்கூடிய விலை வாய்ப்புப் போன்றவை இன்மையாலும் உற்பத்தி ஆக்கத்திறன் பாதிப்புறுகின்றது. எனவே விவசாய உற்பத்தியை அதிகரிக்கக் கூடிய எந்த முயற்சியும், இந்நாட்டிலுள்ள சிறு கமக்காரர்களுக்கு இப்போது கிடைப்பதை விடச் சீரிய முறையில் அமையக்கூடிய அதிக ஆற்றல் வாய்ந்த விஸ்தரிப்புச் சேவைகளை வேண்டி நிற்கும்.

விவசாய விஸ்தரிப்பு என்பது பாரம்பரிய கமக்காரர் தம் பண்ணைச் சூழ்நிலைகளை விருத்தி செய்வதற்கு ஏதுவாக அவர்களது போக்கை மாற்றியமைத்து, விருத்தியடைந்த நடைமுறைகளைப் பின்பற்றச் செய்து புதிய திறன்களை அபிவிருத்தி செய்யத் தூண்டும் ஒரு கைங்கரியமாகும். கமநல ஆய்வு, பயிற்சி நிறுவனத்தின் அண்மைய ஆய்வொன்று ஒரு விரிவாக்கல் அலுவலரின் வேலை நேரத்தில் அரைப்பங்குக்கு அதிகமான நேரம் விவசாயியுடன் தொடர்பு வைப்பதிலேயே கழிந்துள்ளது என்று குறிப்பிடுகிறது. அந்நிலையத்தின் ஆய்வுப்படி கமக்காரருக்கு அறிவுத் தகவல் ஊட்டும் நடவடிக்கையில் இது ஆற்றல் வாய்ந்த முறையெனக் கொள்ளப்படுகிறது.

உள்ளூர் விஸ்தரிப்பு அலுவலர்களினால் கைக்கொள்ளப்படும் நடைமுறைகளில் மிகவும் பிரசித்தமானவை தனித்தனியாட் தொடர்பு, செய்து காட்டல், வயல் உதவிகள், விவசாயப் பயிற்சி வகுப்புகள், குறு உபகரணத் தொகுதிகள், உற்பத்தி உபகரணங்கள் போன்றவற்றின் உபயோகம், சஞ்சிகைகள் துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றை விநியோகித்தல், வானொலி நிகழ்ச்சிகள் போன்றவற்றை நிகழ்த்துதல் ஆகியவையாம். அம்பாறை மாவட்டத்தில் மட்டும் வைத்து நடத்தப்பட்ட கமநல ஆய்வுப் பயிற்சி நிலையத்தின் ஆய்வு, தனித்தனியாட் தொடர்பு முறை (மிகவும் செலவுள்ள ஒன்றாயிருந்த போதிலும்) விசேஷமாக இலங்கையில் காணப்படும் ‘‘சிறு கமம் — உயர் குடிப்பெருக்க’’ச் சூழ்நிலையில் வெகு பொருத்தமானதும், ஆற்றல் வாய்ந்ததுமான முறை என எடுத்துக் காட்டியுள்ளது. இம் முறை மூலம் அணுகப்படும் கமக்காரர்கள் மிகக் குறைவானவர்களாகவே இருந்தபோதிலும் இதன் பயனாக ஒரு சிநேகபூர்வமான, கூட்டுறவு மனப்பான்மையுள்ள ‘‘முற்போக்குகளை’’ காண்பிக்கும் கமக்காரரின் தொடர்பை செறிவாய்ப் பேணக் கூடியதாயுள்ளது. இச்சூழ்நிலைகளில் தனித்தனியாட் தொடர்பை ஒரு ஆற்றல்வாய்ந்த விரிவாக்கற் பணியாகக் கொள்வது ஒரு கேள்விக்குரிய விடயமாக இருப்பினும், பெருக்கலாற்றலை உண்டாக்கக்கூடிய அறிவுத் தகவல்களைப் பரப்புதற்கு உதவக் கூடிய முனைப்பு நாட்டமுள்ள முக்கியஸ்தர்களை விரிவாக்கற் பணியாளர் இனம் காண்பதற்கு இதனைப் பரவலாகப் பயன்படுத்தலாம் என அவ்வாய்வு எடுத்துக் காட்டுகிறது.

ஆள்சார் தொடர்பு அல்லது தனித்தனியாள் தொடர்பு முறைகள் ஒரு கமக்காரன் எந்தளவுக்கு அடிக்கடி விரிவாக்கற்பணியாளரின் உதவியை விரும்புகிறானோ அந்தளவுக்கே நடைமுறைச் சாத்தியமாகிறது. இது விரிவாக்கற் பணியாளன் கமக்காரனுடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பில் பெரிதும் தங்கியுள்ளது. இவ்வாய்வின்படி, 90 சதவீதமான கமக்காரர்கள் விவசாயப் போதனையாளர்களையும், விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களையும் (கேவிஎஸ்) அறிந்து வைத்துள்ளார்கள். அத்துடன் அவ்வாய்வுக்குட்பட்ட காலத்தில் இரண்டு போகத்திலும் இவ்வலுவலர்களை அவர்கள் சென்று கண்டிருக்கிறார்கள். கணிசமான தொகையினரான கமக்காரர்கள் நடுகை உபகரணங்கள் மற்றும் உதவிகளைவிட ஆலோசனை பெறுவதற்காகவே இவ்வலுவலர்களைச் சென்று சந்தித்திருக்கின்றனர். எனினும், முன்னர் மேற்கொள்ளப்பட்ட க.ஆ.ப.நி. ஆய்வுகள் இரண்டு, சிறிய தொகையினரான கமக்காரர்களே இவ்வலுவலர்களை அறிந்து வைத்திருந்தனர் என்றும், ஆலோசனைகளை விட நடுகைஉவிப் பொருள்களுக்காகவே இக்காரியாலங்களுக்குச் சென்றுள்ளனர் என்றும் காண்பிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பிந்திய க. ஆ. ப. நி. ஆய்வு, ஒரு விவசாய போதனாசிரியர்க்கு (AI) சராசரி 3,000 முதல் 6,000 கமத்தொழிற் குடும்பங்களும், விஸ்தரிப்பு உத்தியோகத்தருக்கு 700 முதல் 1,000 கமக்காரர்களும் அவர்களது இயக்கப் பிராந்தியத்தில் வாழ்கின்றனரென்றும், தெரிவு செய்யப்பட்ட சில கமக்காரர்களுடனான தொடர்பு விரிவாக்கற் பணியாளரின் சேவைகளை அதிகப்படியாக வேண்டும் விவசாயிகளை உதாசீனப்படுத்துவதில் முடியுமென்றும் சுட்டிக் காட்டியுள்ளது. இம்முறை குறைந்த வருமானம் பெறும் கமக்காரர்களதும், விவசாயத் தொழிலாளர்களதும் தேவைகளைப் புறக்கணிப்பதில் கொண்டு சென்றுவிடலாம். இத்தகைய புதிய விரிவாக்கல் முறைகளை ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டவர்கள் கிராமத்திலே உயர் வருமானம் உடையவர்கள் என்பதும், இவர்கள் நட்டாபத்துத் துணிபினை எடுத்து, புதிய தொழில் நுட்பத்தில் உள்ள வசதிகளைப் பயன்படுத்த வல்லவர்கள் என்பதும் பொதுவாகவே நிறுவப்பட்டுள்ளது. எனினும், விதந்துரைக்கப்படும் விரிவாக்கலும் பயிற்சி முறைகளும் நல்ல நிலையில் உள்ள முன்னேற்றகரமானவர் எனப்படும் கமக்காரருக்குத்தானா என்ற அடிப்படைக் கேள்வி எழுப்பப்படவேயில்லை. எமது விவசாய விரிவாக்கற் பணியாளரின் குறிக்கோள், கமக்காரர்கள் தமது உற்பத்திகளைப் பெருக்கிக் கொள்ள உதவுவது தான் என்று தெரிகிறது. ஆனால், இவ்விரிவாக்கற் பணியாளர்கள் தமது முயற்சிகள் யாவும், வசதி குறைந்த பெருந் தொகையினரான கமக்காரரையே சென்றடைந்து, அவர்களது உற்பத்தியை விருத்தி செய்வதற்காகச் செல்வதினின்றும் தடுக்கப்படுகிறது என்பதை உணர்வதில்லை. அநேகமாக விரிவாக்கற் பணியாளர்கள் உற்பத்தி வீதங்களை அதிகரிப்பதற்கு உதவும் கைங்கரியத்தை நிறைவேற்றிச் செல்வதையே தமது குறிக்கோளாகக் கொண்டிருட்பர். ஆனால், இவ்வதிகரித்த உற்பத்தியினால் யார் நன்மையடைகின்றார் என்பது கருத்துக்கெடுக்கப்படுவதில்லை.

இப்பிரச்சினை இலங்கையில் மட்டும் நிலவும் ஒன்றல்ல. ஆசிய பிராந்தியத்திற்கே உரித்தான ஒன்றாக இது திகழ்கிறது. அண்மையில் உணவு விவசாய நிறுவனத்தின் ஆதரவின் கீழ் பசிப்பிணி விடுதலை இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட, அபிவிருத்திக்கான பங்குகொள் பயிற்சித் திட்டத்தில் பங்கு பற்றியோர், பல ஆசிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளனர். இவர்கள், நேரடியாகவே கமக்காரர்களுடன் அரசு ஊழியர்களின் தொடர்புப் பணிகள் பற்றி கலந்துரையாடியுள்ளனர். கிராமிய மக்கள் அநேகமாக அரசு ஊழியர்களைப் பற்றித் தவறான அபிப்பிராயமே கொண்டிருப்பது இக்கலந்துரையாடலில் இருந்து தெரியவந்தது. சில உழைக்கும் விவசாயிகள் இவ்வரசு ஊழியர்களில் சிலர் தம்மை ஆட்டிப்படைக்கும் எசமானர்களாக நினைத்துக் கொண்டு கட்டளையிடுவதாக இக்குழுவினரிடம் தெரிவித்துள்ளனர். இவ்வூழியர்களுக்கு தம்மோடு குந்தியிருந்து பேசுவதற்கோ தம்மோடு சேர்ந்து பழகி வாழ்வதற்கோ நேரங் கிடைப்பதில்லையென்றும், அவர்கள் தமது அழகிய சீருடைகளை கிராமத்துப் பிரச்சினைகளின் அழுக்குகளினாலும், தூசுகளினாலும் கசக்கிக் கொள்வதை விரும்புவதில்லை யென்றும். அவர்கள் விரும்புவதெல்லாம் தமது மேலதிகாரிகளின் நற்சாட்சிகளையன்றி வறிய மக்களின் நல்லுறவையல்ல வென்றும் தெரிவித்துள்ளனர். இக்குழுவினரின் எண்ணப்படி அரசுச் சேவையிலுள்ள தனித்தனி ஊழியர்கள் இவைகளுக்காகப் பழிக்குள்ளாக முடியாது. ஏனெனில் அரசுச் சேவையிலுள்ள தீவிர அமைப்பு முறைகள் அவர்களை அவ்வாறு நடந்துகொள்ளத் தூண்டுகின்றன. அவர்களுக்கான உத்தரவுகள் எல்லாம் மேலிடத்திலிருந்தே வருகின்றன. வெளிக்களங்களிலுள்ள பணியாளர்களால் இவ்வுத்தரவுகளை நடைமுறைப்படுத்தவே முடியும். இங்கு உண்மையான செய்காரியங்களை விட அறிக்கைகளே முக்கியத்துவம் பெறுகின்றன. ஒருவரது அறிக்கை நன்றாயிருக்குமாயின் தொல்லையே இல்லை. இது இப்படி அமைந்திருப்பதால் வெளிக்களப் பணியாளர்கள் எழுத்து வேலைகளிலேயே தமது காலத்தைக் கடத்துகின்றனர்.

ரொபெர்ட் சேம்பர்ஸ், பி. டபிள்யூ. ஈ. விக்கிரமநாயக்கா ஆகியோரால் விவசாய விஸ்தரிப்பு அம்சம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அண்மைக்கால ஆய்வொன்று ''தமிழ்நாடு இலங்கை ஆகியவற்றின் நெல்லுற்பத்திப் பிராந்தியங்களில் மாற்றமும், தொழில் நுட்பமும்'' என்ற தலைப்பின் கீழ் கேம்பிரிஜ் பொதுநலவாயத் தொடர் வெளியீட்டில் பிரசுரமாகியுள்ளது. இவ்வாய்வு, இலக்குகள், விவசாய விஸ்தரிப்புப் பணியாளர்களின் அறிக்கைகள் ஆகியவை தொடர்பான பிரச்சினை பற்றிக் குறிப்பிடுகிறது. அவ்வாய்வுக் கூற்றுப்படி, இலக்குகளை அடைவதானது ''பாரிய அளவிலான ஒரு எழுத்துப்படி முறை மட்டுமே'' என்று இவர்கள் கருதுகின்றார்கள். இவ்வாய்வாளர்கள் ஆதாரமாக சஸ்செக்ஸ் அபிவிருத்தி ஆய்வுகள் கழகத்தினைச் சேர்ந்த பைரன் மூக் என்பாரின் ஆய்வினை மேற்கோள் காட்டுகின்றனர். பைரன் மூக்கின் குறிப்பின்படி, ஒரு மாவட்ட விவசாய அலுவலர் தனது விஸ்தரிப்புப் பணியாளரைச் சந்தித்துச் சொல்கின்றார்: ''நாம் எமது இலக்குகள் யாவற்றையும் எய்தி விட்டோம். விளங்குகிறதா? உமது கட்டமைப்புக்குள் அவசியமான எல்லா ஒழுங்குகளையும் செய்து கொள்ளும்''. இம் மேற்கோள் இவர்களது வாதத்திற்கு தகுந்த ஆதாரமாய் அமைகிறது. அவ்வாய்வாளர்கள், ஒரு விரிவாக்கற் பணியாளனின் நாணயம், புனைவுகளை உண்டாக்கவும் பயன்களைக் கண்டுபிடிக்கவும் நிர்பந்திக்கப்படுவதாலும், வரிசையாக சேர்ந்து தவறிழைக்க வேண்டியிருப்பதாலும், சந்தேகிக்கப்படவேண்டிய ஒன்றாகிறது. ஒரு சீரமைப்புமின்றி இவ்வமைப்பு முறை தொடர்ந்து நிலவும் வரை ஒரு விஸ்தரிப்பு முகவர் தனது கண்களுக்கும், தன் மேற்பார்வையாளர் கண்களுக்கும் பொது மக்கள் கண்களுக்கும் நாணயமற்றவராகவே சாட்சியளிக்கின்றார்.

அம்பாந்தோட்டைப் பிராந்தியத்தில் தமது ஆய்வினை மேற்கொண்ட விக்கிரமநாயக்கவும் சேம்பர்ஸும் அறிக்கையிடுதல், இலக்குகள் பற்றிக் குறிப்பிடும் போது, ஒரு விவசாய போதனாசிரியர் மாதமொன்றுக்கு 29 அறிக்கைகளை அல்லது வருடமொன்றுக்கு 348 அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படி வேண்டப்பட்டார் என்று சுட்டிக்காட்டியுள்ளனர். இப்படி அறிக்கைகள் வேண்டப்படும்போது, புது அறிக்கைகள் மேலும் மேலும் சேர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுகின்றனவே யன்றி பழையவை நிறுத்தப்படுவதில்லை. அவர்கள் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையில் விவசாயத்திற்கு மேலதிக அமைச்சொன்று உண்டாக்கப்பட்டதன் விளைவு, வெளிக்களத்திலிருந்து கோரப்படும் அறிக்கைகளின் தொகை மேலும் அதிகரித்ததே என்றும் கூறுகின்றார்கள். மேலும், உணவுற்பத்திப் போராட்டத்தின் ஒரு பகுதியாக உண்மையான தகவல்களுக்கான தேவை பூர்த்தி செய்யப்படாததாக இருந்தது. மாவட்ட விவசாய விரிவாக்கல் அலுவலர்களுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகள் அநேகமாக விவசாயப் போதனாசிரியர்கள் மீது சுமத்தப்பட்டன. இப்போதனாசிரியர்களோ விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களுக்கு அவற்றினைப் பற்றி எழுதினர். அதன்பின் வி.உ. கள் அவைபற்றி போதனாசிரியர்களுக்கு அறிக்கையிட பின்னர் போதனாசிரியர்கள் மாவட்ட விவசாய விரிவாக்கல் அலுவலர்களுக்கு அறிக்கையிட்டனர். ''உணவுற்பத்திப் போராட்டம் ஒரு கடதாசி எழுதுகோள் போராட்டமாகி விட்டது என்று கூறுவது மிகைப்படுத்திக் கூறுவதாகலாம். ஆனால், உணவுற்பத்திப் போராட்டம் அறிக்கைகளை அதிகரிக்கச் செய்துள்ளதென்பதும், வெளிக்களத்திலிருந்து தேவைப்பட்ட தகவல்களை அதிகமாக்கியுள்ளதென்பதும், கனிஷ்ட உத்தியோகத்தர்களின் எழுத்து வேலைச் சுமையை அதிகரித்ததென்பதும், அதிக கடதாசி, மை, தட்டச்சுப் பொறி நாடாக்கள் ஆகியவற்றை விழுங்கியுள்ளதென்பதும், விரிவாக்கற் பணியாளர்களை அதிகமாகவே அலுவலகங்களில் முடங்கிக் கிடக்கச் செய்துள்ளது என்பதும் மிகையாகாத உண்மைகளே. இத்தகைய சூழ்நிலைகளில் அநேகமாக மேலதிகமாககத் தேவைப்படும் தகவல்கள் அத்தனையும் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட அறிக்கைகளில் காணப்பட்ட போதிலும், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் அவற்றினைக் கண்டுபிடிப்பது பற்றிக் கவல்வதில்லை. இத்தகைய பொதுக் குறைபாடு களையப்படத்தக்கதே. சீரமைப்பில்லாது விடின் ஒரு விரிவாக்கல் முகவர் ஒரு இலிகிதராகி விடுவார்.''

எனவே மக்களுக்கன்றி மேலதிகாரிகளை மகிழ்விப்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இம்மேலதிகாரிகள் திட்டங்களைத் தீட்டும்போதோ, கொள்கைகளை வகுக்கும்போதோ வெளிக்களப் பணியாளர்களைக் கலந்து கொள்வது குறைவாகும். இது போன்ற பல விடயங்கள் உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. முன்னின்றுழைத்தற்கும், ஊக்க முயல்வுக்கும் கிடைக்கும் பயன் குறைவாயிருப்பதாலும், எதிர் நீச்சலடித்து முன் செல்வது தொல்லையாயிருப்பதாலும் அரசுச் சேவையில் முதன்மையோடும், ஊக்கமுயல்வோடும் இலட்சியத்தோடும் சேர்வோர் சிறிது காலத்தின் பின் அவற்றை யெல்லாம் இழந்து விடுகின்றனர். அரசு அலுவலர்கள் மத்தியில் சுயாதீனமானவையும், வெளிப்படையானவையுமான கலந்துரையாடல்களுக்கு இடமில்லையென்றும் இக் குழு கண்டறிந்துள்ளது. நாணயமான ஆத்மார்த்த இலட்சியத்தோடிருப்பவர்கள் அவர்களது வேலை நேரங்களுக்கு அப்பாற்பட்ட நேரங்களிலே தமது இலட்சிய வேட்கைகளைத் தீர்த்துக் கொள்கின்றனர்.

இப்பிரச்சினை, இலங்கையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வேறு ஆய்வுகளிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பொலன்னறுவை, வவுனியா மாவட்டங்களில் மக்கள் வங்கி மேற்கொண்ட விவசாயக் கடன் தொடர்பான வெளிக்கள ஆய்வின் போது, விஸ்தரிப்பு ஊழியர்கள் தம்மை மிக அரிதாகவே சந்திப்பதாக பெரும்பான்மையான கமக்காரர்கள் கூறினர். வவுனியா மாவட்டத்திலுள்ள கமக்காரர்கள் இன்னும் ஒருபடி மேற்சென்று, இந்த விஸ்தரிப்புப் பணியாளர்களிடமிருந்து தாம் புதிதாய் அறிவதற்கு ஒன்றுமில்லையென்றும், தமது பாரம்பரியமான தொழில்நுட்ப முறைகள் தமக்குத் தாராளமாகப் போதுமானவை யென்றும் கூறினர். இஃது இப்படி இருப்பதால் ஒன்றில் இவ் விரிவாக்கற் பணியாளர்களின் தொழில் நுட்பம் ஆற்றல் குறைந்ததாயிருக்க வேண்டும்; அல்லது அப்பணியாளர்கள் தமது அலுவலகங்களில் இருந்து கொண்டு எழுத்து வேலைகளில் ஈடுபட்டு அறிக்கைகள் தயாரித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

நாட்டினது கமத்தொழில் விரிவாக்கற் சேவைகளின் செயற்றிறன் மீதானதும், அதன் குறிக்கோள் மீதானதுமான பூரண மீள் மதிப்பீடொன்றின் அவசியத் தேவையை இப் பிரச்சினைகள் முன்வைத்துக் காட்டுகின்றன. எனினும், நம்பிக்கை அற்றுப் போய்விடவில்லை. அபிவிருத்தி யென்பது வெறிதே மக்கள்பால் செலுத்தப்படக்கூடிய ஒன்றல்ல என்பது அதிகமாகவே உணரப்படுவது அந்நம்பிக்கையின் பாற்பட்டதே. அது, அவர்களது ஊக்கத்தினதும், ஆக்கத் திறனினதும் வலுவினதும் நயப்பாலும் பயன்பாட்டாலும் அவர்களுக்குள்ளிருந்தே பெரிதாகக் கிளர்ந்தெழ வேண்டும். மாற்றங்களின் படிமுறைப் போக்கில் அவர்களே வெகு சுறுசுறுப்பாக இதில்ஈடுபட வேண்டியவர்கள்.

---

**உங்டாட் . . .**

(16ம் பக்கத் தொடர்ச்சி)

1977 ல் நடைபெற்ற ஒரு உங்டாட் மகாநாட்டின் பின்னர், மகாநாட்டு முடிவுகளை அது பின்வருமாறு கூறியது: ''பேச்சுக்கள் தொடரும்; ஒவ்வொருவருக்கும் சலிப்பும் அலுப்பும் தட்டத்தான் செய்யும் . . . .''

லத்தீன் அமெரிக்கச் சிந்தனைகளைத் தொடர்ந்து 1960 களில் உங்டாட் ஸ்தாபனம் உருவாக்கப்பட்டது. லத்தின் அமெரிக்க எழுத்தாளர்கள், அல்லது அப்பாரம்பரியத்தால் ஊக்குவிக்கப்பட்டோர் ஆகியோரே இன்னும் இவ்வியக்கத்தின் ''ஆலோசக நிபுணர்களாகப்'' பின்னணியில் இருந்து வருகின்றனர். உயர் மட்டத்தில் உங்டாட் ''தலைமையில்'' மாற்றங்கள் ஏற்பட்டு (குறைந்தது புவிசார்பு அரசியற் காரணங்களுக்காகவாவது), தற்போதைய சிந்தனைப் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டு இருந்தாலும், 1 வது உங்டாட் மகாநாட்டின் (1964) ஆவி இன்னும் இவ்வியக்கத்தைப் பாதிப்பதுடன், அப்போது உருவாக்கப்பட்ட சூழ்நிலையிலேயே கலந்துரையாடல்கள் இன்னும் நிகழ்கின்றன. குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இவ் விஷயத்தில் இன்னும் ஏற்படவில்லை. எனவே, அதன் பாதை யாது என்ற கேள்வி இக் கட்டத்திற் கேட்கத்தக்கது. அதன் நோக்கம் ஒன்றாகவும் விளைவு வேறொன்றாகவும் காணப்படுகிறது. இந்நிலையில் செயலாளர் நாயகம் பெருமூச்சுடன் கூறுவது நியாயமானதே. ''பன்முகப் பேச்சுவார்த்தைகள் மூலம் பயன்மிகு விளைவுகளை எய்துவதில் இயக்கத்துக்கு ஏற்பட்ட தோல்வி காரணமாக ஒரு விரக்தி மனப்பான்மை வளர்ந்து வருவது கண்கூடாகத் தெரிகிறது.''

# தென்னை — 1978 ல் மீட்சி

தெங்கு உற்பத்தியும் ஏற்றுமதியும் 1978 ல் ஒரு மீட்சியை எய்தியது போலத் தோன்றிற்று. இரு ஆண்டுகளதும் உற்பத்தித் தொகை ஏற்றுமதிப் பெறுமதி என்பனவற்றை ஒப்புநோக்கிப் பார்க்கையில் இது புரிகிறது. ஆனால் வழமையான உற்பத்தி வருட நோக்கில் பார்க்கையில் 1977-78 ம் ஆண்டு ஒப்பீட்டு எண்ணிக்கைகள் காட்டுவது போன்று, 1978 ன் மீட்சி அப்படியொன்றும் காத்திரமான ஒன்றாகக் காணப்படவில்லை. 1977 ன் தெங்கு உற்பத்தி கடந்த சுமார் 20 ஆண்டு கால வரலாற்றில் மிகக் குறைவாகக் காணப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இது தேங்காய்த் துருவல், கொப்பராக் கைத்தொழில்களைப் பெரும் நெருக்கடி நிலைக்குள்ளாக்கியதுடன் முழுத் தெங்குக் கைத்தொழில் துறைக்குமே எதிர்காலத்தில் நிச்சயமற்ற ஒரு நிலை தோன்றி விடுமோ என்ற அச்சம்கூட நிலவியது. அதிர்ஷ்டவசமாக இந்த உற்பத்தி வீழ்ச்சி 1978 ல் தொடரவில்லை. எனினும் இது ஒரு மாபெரும் அதிகரிப்பென்று குறிப்பிட்டுவிட முடியாது. 1978 ல் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் 220.8 கோடி தேங்காய்கள் 1977 ல் 183·1 கோடி தேங்காய்களுடன் ஒப்பிடுகையில் திருப்திகரமான ஒன்றாகக் காணப்பட்டாலும் 1976 க்கு முன்னர் காணப்பட்ட உற்பத்தி மட்டங்களுடன் ஒப்பிடுகையில் அது வெகு குறைவானதாகவே தென்படுகின்றது. 1970 ஐ அடுத்த 10 ஆண்டு காலத்தில் இலங்கையின் தேங்காய் உற்பத்தி பற்றிய மதிப்பீட்டு எண்ணிக்கை அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

1977 ல் பெறப்பட்ட 183.1 கோடி காய்களே அண்மைக் காலத்தில் நிகழ்ந்த மிகக் குறைந்த உற்பத்தியாகும்: அத்துடன் 1977 க்கு முந்திய காலத்துடன் ஒப்பிடுகையில் இதில் மிகப் பெருந்தொகை கைத்தொழில் உற்பத்தி மற்றும் நுகர் தேவைகட்குப் பயன்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது. 1977 க்கு முந்திய காலப்பகுதியின் தேங்காய் உற்பத்தி மிகப் பெருந் தொகையாகக் காணப்பட்டதுடன், கூடிய பயன்பாட்டுப் பெறுமானத்தையும் கொண்டிருந்தது தெரியவந்துள்ளது. குறிப்பாகத் தேங்காய்த் துருவல், தேங்காய் எண்ணெய், கொப்பரா முதலியவற்றுக்குப் பெருந்தொகை தேங்காய்கள் செலவாகின. இவ்வகையில் 1977 க்கு முன்னர், 1,000 தேங்காய்கள் மூலம் பெறப்பட்ட பயன்பாடு சுமார் 135 கிலோகிராமாக இருந்திருப்பின், 1977 ல் 1,000 தேங்காய்கள் மூலமான வெளியீடு 120 கிலோகிராமாகக் குறைவுற்றது. இதன் விளைவாக, தேங்காய் துருவல், கொப்பரா என்பவற்றுக்கென மேலும் கூடிய தொகை தேங்காய்கள் செலவிடப்பட வேண்டியிருந்தன. (அத்துடன், வீட்டுப் பெண்டிரும் தெரிந்தோ, தெரியாமலோ வீட்டுத் தேவைகளுக்கென கூடியளவு தேங்காய்களை இக்காலத்தில் உபயோகித்தனர்.) குறித்த இக்காலப் பகுதியில் தேங்காய்களின் தரம் குறின்க் காணப்பட்டபடியால், தேங்காய்த்துருவல், கொப்பரா என்பனவற்றுக்கு செலவான தேங்காய்களின் எண்ணிக்கையையும், அதற்கு முன்னைய ஆண்டுகளில் இவற்றுக்குச் செலவான தேங்காய்களின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பிழையான முடிவுகளையே காட்டும்; இதே போன்று, இத்தகைய அடிப்படையில், பொருளியற் தரவுகளைச் சேர்த்துக் கணக்கிடலும் சரியான பயனைத் தரா.

இந்நாட்டு மக்களின் நாளாந்த உணவில் தேங்காய் முக்கிய ஓர் அங்கமாகக் காணப்படுகிறபடியால், அதன் உற்பத்தியிற் காணப்படும் வீழ்ச்சியானது, நுகர்வோர் விலை மட்டத்தில் அதிகரிப்பைக் காட்டின. நகரப்புறங்களில், 1975 ல் 32 சதமாகவும், 1976 ல் 45 சதமாகவும் காணப்பட்ட ஒரு தேங்காயின் விலை, 1977 ல் கிட்டத்தட்ட ஒரு ரூபாவாகக் கூடியது. 1977 ல் கிடைக்கக் கூடிய தேங்காய்களின் எண்ணிக்கையில் மாத்திரமின்றி அவற்றின் தரத்திலும் குறைபாடு காணப்பட்டது. உண்மையில், ரூபாய் மதிப்பிற் பார்க்கையில் இந்த ஆண்டில் தேங்காயின் தரம் வெகுவாகக் குறைந்தது. எனினும், 1978 ல் இப் போக்கில் சாதகமான ஒரு நிலை ஏற்பட்டது. 1978 ல் காணப்பட்ட தரம், எண்ணிக்கைகள் நிலைமைகளில் 1977 க்கு முந்திய காலப்பகுதியைவிடக் கூடிய முன்னேற்றம் காணப்படவில்லையெனினும், 1977 நிலையைவிட நிச்சயமாக ஒரு கூடிய முன்னேற்றம் காணப்பட்டதென்பது நிச்சயம். விலைகளில் சிறிது வீழ்ச்சி காணப்பட்டது. எனினும் நிரம்பல் அதிகரிக்கும் பட்சத்தில் ஏற்படக்கூடிய பெரு வீழ்ச்சியை இங்கு அவதானிக்க முடியவில்லை. ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும். தேங்காய்த் துருவல், தேங்காய் எண்ணெய், கொப்பரா என்பனவற்றின் ஏற்றுமதியில் காணப்பட்ட அதிகரிப்பு காரணமாக, கைத்தொழில் நோக்கங்களுக்கு கூடியளவு தேங்காய்கள் பயன்படுத்தப்பட்டதுடன், விலை மட்டங்களும் இந்த ஏற்றுமதி விலைகளிலேயே நிர்ணயிக்கப்பட்டன. எனவே, 1977ல் நிலவிய விலைமட்டங்களிலிருந்து 1978 ல் விலைகள் குறைவதற்கான சாத்தியங்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. ஏற்றுமதிக்கும் சிறிதளவு தேங்காய்கள் உப

(26ம் பக்கம் பார்க்க)

| ஆண்டு | | | மொத்த உற்பத்தி கோடி தேங்காய் | ஏற்றுமதி கோடி தேங்காய் |
|---|---|---|---|---|
| 1970 | .. | .. | 244.5 | 90.5 |
| 1971 | .. | .. | 266.8 | 110.9 |
| 1972 | .. | .. | 282.8 | 123.1 |
| 1973 | .. | .. | 194.6 | 35.1 |
| 1974 | .. | .. | 203 | 49.5 |
| 1975 | .. | .. | 258.5 | 91.4 |
| 1976 | .. | .. | 233 | 79.4 |
| 1977 | .. | .. | 182.5 | 23.3 |
| 1978 | .. | .. | 220.8 | 50.7 |
| 1979* | .. | .. | 222.5 | 59.6 |

(*ஊர்ஜிதம் செய்யப் படாதது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகிதாசாரப்பிரதிநிதித்துவம் — ஓர் அறிமுகம்

— டிரேஸி லேட்டன்

கட்சிப்பட்டியல் அடிப்படையிலான விகிதாரப் பிரதிநிதித்துவ முறை இப்பொழுது நமது நாட்டில் சட்டரீதியாக அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றது. பாராளுமன்றத்துக்கும் உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல்கள் இனிமேல் இம்முறையிலேயே நடைறுபெம். விகிதசாரப் பிரதிநிதித்துவ முறையின் சில பிரதான அம்சங்களை இக்கட்டுரை விளக்குகின்றது. அடுத்து வரும் கட்டுரையில் இலங்கையில் இவ்வமைப்பின் தாக்கம் குறித்து விரிவாக ஆராயப்படும். கலாநிதி (திருமதி) லேட்டன் கொழும்புப் பல்கலைக்கழக வளாகத்தின் அரசியல் தத்துவஞானத்துறை விரிவுரையாளராவர்.

வாக்குச் சீட்டின் மூலம் பொது மக்கள் தங்கள் விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்தலானது, உண்மையான ஜனநாயக அரசாங்கத்துக்குரிய அத்தியாவசியமானதும் பூர்வாங்கமானதுமான ஒரு படியென்பது இன்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் இத் தேர்தல் முறைகளும், அவை தொடர்பான இயக்கச் செய்முறைகளும் நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுகின்றன. இன்றைய அரசியல் வானில் வெளிப்படையாகக் காணப்படும் குழப்ப நிலைமைகளுக்கும், சிக்கல்களுக்கும், துஷ்பிரயோகங்களுக்கும் காலங்கடந்த தேர்தல் முறைகளே காரணமென சிலர் வாதிட்டு வருகின்றனர்.

பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா உட்பட பல பொது நலவாய நாடுகளில் பின்பற்றப்படும் தேர்தல முறை (இன்றுவரை இலங்கையில் நிலவிய முறையும்) சார்பு ரீதியான பெரும்பான்மை முறையாகும். அதாவது, சக வேட்பாளர்களைவிட கூடிய வாக்குகளைப் பெறுபவர் வெற்றி பெற்றவராகிறார். மறுபுறத்தில், பெரும்பாலான மேற்கைரோப்பிய நாடுகள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையைக் கையாண்டு வருகின்றன.

### சார்புரீதியான பெரும்பான்மை

சார்புரீதியான பெரும்பான்மைத் தெரிவு முறையின் பிரகாரம், ஒவ்வொரு தொகுதியிலும் (ஒரேயொரு அங்கத்தவரே இங்கிருந்து தெரிவாவார்) ஆகக் கூடிய எண்ணிக்கையான வாக்குகளைப் பெறும் வேட்பாளர், வெற்றி பெற்றவராகப் (தெரிவு செய்யப்பட்டவராக) பிரகடனப் படுத்தப்படுவார்; அவர் அறுதிப் பெரும்பான்மையை (அதாவது தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் அரை வாசிக்கும் மேற்பட்ட தொகையை) பெறுது போனாலும் சரியே. இவ்வகையில், குறித்த ஒரு தொகுதியில் ஏனைய வேட்பாளர்களிலும் பார்க்க அதிக வாக்குகளைப் பெற்றமையின் காரணமாக ஒருவர் வெற்றி பெற்றவராகக் கணிக்கப்பட்டாலும், உண்மையில் அவர் அத்தொகுதியில் குறைவான வாக்குகளை மாத்திரமே பெற்றிருக்கக் கூடும். அதாவது, ஒரு தொகுதியில் இரண்டு வேட்பாளருக்கு மேற்பட்ட தொகையினர் போட்டியிடுகையில், தோல்வியுற்ற வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளின் மொத்த எண்ணிக்கை, வெற்றி பெற்ற வேட்பாளருக்குக் கிடைத்த மொத்த வாக்குகளிலும் பார்க்கக் கூடியதாகவிருக்கலாம்.

இந்நிலைமையானது, சட்ட சபையில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறும் ஒரு கட்சி — முழு நாட்டிலும் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் அரை வாசிக்கும் குறைந்த எண்ணிக்கை அதற்குக் கிடைத்திருந்தாலும் கூட — அரசாங்கத்தை அமைக்கும் ஒரு நிலைமைக்கு இட்டுச் செல்கிறது. எனவே, நாட்டில் பெரும்பான்மை மக்களது வாக்குகளைப் பெறுத ஒரு கட்சி, பாராளுமன்ற அமைச்சரவை முறையின் கீழ் ஆட்சியைப் பெற்றுக்கொள்கின்றது. ஒவ்வொரு கட்சியும் வெற்றிபெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை தேசிய அடிப்படையில் கட்சிகள் பெற்ற முழுமையான ஆதரவைப் பிரதிபலிக்கவில்லையென்பதையே இது சுட்டிக் காட்டுகிறது.

உதாரணமாக பிரிட்டனில், 1922 க்கும் 1966 க்கு மிடைப்பட்ட காலப்பகுதியில் இரு அரசாங்கங்கள் மாத்திரமே (1931 லும் 1935 இலும் அமைக்கப்பட்ட கூட்டரசாங்கங்கள்), பொதுத் தேர்தலில் அளிக்சப்பட்ட மொத்த வாக்குகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட தொகையைப் பெற்று (அதாவது அறுதிப் பெரும்பானமையைப் பெற்று) ஆட்சியில் அமர்ந்தன. மேலும் எதிர்க் கட்சியில் அங்கம் வகித்த ஆகப் பெரிய தனிக் கட்சி பெற்ற மொத்த வாக்குத்தொகையிலும் குறைந்த வாக்குகளையே அரசாங்கக் கட்சி பெற்றிருந்த நிலைமைகள் 1929, 1951, 1974 (பெப்ரவரி) தேர்தல்களில் காணப்பட்டன என்ற உண்மையும் இங்கு கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்.

அடிப்படையில் ஏனைய கட்சிகளால் எதிர்க்கப்படும் சட்ட திட்டங்களைச் செயற்படுத்திக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம், குறைந்த வாக்குகளை (மொத்தமாக) ப் பெற்று அரசாங்கத்தை அமைத்துள்ள கட்சிக்குக் கிடைக்கவும் இது வழிகோலுகின்றது. பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் தேசியமயத் திட்டங்கள் இங்கு உதாரணமாக எடுத்துக் காட்டப்படலாம். 1945 ல் நடைபெற்ற தேர்தலில் பிரிட்டிஷ் மக்கள் சபையில் 146 பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று பதவிக்கு வந்த தொழிற் கட்சி அரசாங்கம் (ஏனைய கட்சிகள் எதிர்த்தபோதும்) தனது தேசியமயக் கொள்கைகளைச் செயற்படுத்தக் கூடியதாகவிருந்தது. இத் தேர்தலில் தொழிற் கட்சி (நாடளாவிய ரீதியில்) 47.8 சதவீத வாக்குகளையே பெற்றிருந்தது.

இத் திட்டத்தை ஆதரிப்போர் கூறும் கருத்தானது, தொகுதிவாரிப் பிரதிநிதித்துவங்களில் கணித ரீதியில் அமைந்த மிகப் பொருத்தமான பிரதிநிதித்துவத்தைத் தேட முனைவது அவசியமற்றது மட்டுமன்றி, அது அத்துணை தூரம் நன்றன்று என்பதுமாகும். சட்ட சபையானது, நாட்டு மக்களது அரசியல் அபிப்பிராயத்தின் பிரதான போக்குகளை மேலோட்டமாகப் பிரதிபலித்தால் போதுமானது என்பது இவர்கள் வாதமாகும். எவ்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெனினும், ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கைக்கும், சட்ட சபையில் அது கொண்டுள்ள பலத்துக்குமிடையே (அதாவது ஆசனங்களது எண்ணிக்கைக்குமிடையே) பலத்த வேறுபாடுகளையும், சார்புரீதியற்றதன்மைகளையும் இப் பெரும்பான்மை வாக்குமுறையானது கொண்டு வந்து விடுகிறது. 1970, 1974ம் ஆண்டுகளின் பிரிட்டிஷ் பொதுத் தேர்தல்களில் காணப்பட்ட இத்தகைய முரண்பாடுகளை அட்டவணை 1 காட்டுகிறது:

களிலிருந்து இவ்விரு அம்சங்களுக்குமிடையேயான முரண்பாடுகளைத் தெளிவாகக் காண முடிகின்றது.

உதாரணமாக, 1960 மார்ச் பொதுத் தேர்தலில் ஐ. தே. க. மொத்தம் 50 தொகுதிகளில் (சனப் பிரதிநிதிகள் சபையின் மொத்த ஆசனங்களில் மூன்றிலொரு பங்கு) வெற்றியீட்டிய போதிலும், அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 20.62 சதவீதத்தையே பெற்றுக்கொண்டது. 1960 ஜூலை தேர்தலில் உண்மையில் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 29.72 சதவீதத்தைப் பெற்றது.

சிறிய கட்சிகள் குறைந்த பிரதிநிதிகளைப் பெறவேண்டி நேர்வது இம் முறையில் காணப்படும் இன்னொரு தாக்கமாகும். உதாரணமாக மேலேயுள்ள அட்டவணைகளில் காணப்படுவது போன்று) பிரிட்டனின் லிபரல் கட்சி வெற்றி பெற்றிருக்கும் ஆசனங்களின் எண்ணிக்கை, அது பெற்று வந்துள்ள மொத்த வாக்குகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது விகி

**அட்டவணை 1**

**பிரிட்டிஷ் (1970, 1974ம் ஆண்டுகளது) பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள்**

| | கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் | மொத்த வாக்குவீதம் | மொத்த ஆசன வீதம் |
|---|---|---|---|---|---|
| பொதுத் தேர்தல் 1970 .. | கன்ஸர்வேடிவ் | 13,145,123 | 330 | 46.4 | 52.4 |
| | தொழில் | 12,179,341 | 287 | 43.0 | 45.6 |
| | லிபரல் | 2,117,035 | 06 | 7.5 | 0.9 |
| | ஏனையன | 903,299 | 07 | 3.1 | 1.1 |
| பெப்ரவரி, 1974 .. .. | கன்ஸர்வேடிவ் | 11,924,755 | 296 | 38.1 | 46.6 |
| | தொழில் | 11,654,726 | 301 | 37.2 | 47.4 |
| | லிபரல் | 6,063,470 | 14 | 19.3 | 2.2 |
| | ஏனையன | 1,690,275 | 24 | 5.4 | 3.8 |
| அக்டோபர், 1974 .. .. | கன்ஸர்வேடிவ் | 10,428,970 | 276 | 35.8 | 43.5 |
| | தொழில் | 11,465,136 | 319 | 39.3 | 50.2 |
| | லிபரல் | 5,346,800 | 13 | 18.3 | 2.4 |
| | ஏனையன | 1,944,700 | 27 | 6.6 | 4.2 |

1974ம் ஆண்டு பெப்ரவரி மாதத் தேர்தலில் மொத்தம் 301 ஆசனங்களைப் பெற்று தொழிற் கட்சி பதவிக்கு வந்தது. இத் தேர்தலில் கன்ஸர்வேடிவ் கட்சி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை 296 ஆகும். ஆனால், தொழிற் கட்சி மொத்தமாகப் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 37.2% ஆகக் காணப்பட்ட அதே வேளை, கன்ஸர்வேடிவ் கட்சி 38.1% வாக்குகளைப் பெற்றிருந்தது. 1974 அக்டோபர் மாதத் தேர்தலில் 50.2% ஆசனங்களைப் பெற்ற தொழிற் கட்சியானது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 39.3% ஐ மாத்திரமே பெற்றது. இதே வேளை 18.3% வாக்குகளைப் பெற்ற லிபரல் கட்சி 13 ஆசனங்களை (அல்லது 2.04%) மாத்திரமே பெற்றது.

ஒவ்வொரு கட்சியும் பெறும் மொத்த வாக்குகளுக்கும் ஆசனங்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகள் இலங்கைத் தேர்தல் முடிவுகளிலும் தெளிவாகத் தெரிகின்றன. 1960ம், 1977ம் வருடங்களின் தேர்தல் முடிகவு ஐ. தே. க. வாக்குகள் 37.57% ஆக அதிகரித்தது; ஆனால் அது 30 ஆசனங்களை மாத்திரமே (19.9%) பெறக்கூடியதாகவிருந்தது. இதே போன்று, 1970ம் ஆண்டு தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குத் தொகையில் 37.92 சதவீதத்தை ஐ. தே. க. பெற்ற போதிலும், அதற்கு 17 (அல்லது 11.3%) ஆசனங்களையே வெற்றிகொள்ள முடிந்தது. இதே வேளை, 90 ஆசனங்களை (அல்லது 60%) பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐ. தே. கட்சி பெற்ற மொத்த வாக்கு வீதத்தை விடவும் குறைந்த வீதத்தையே பெற்றது.

சமீபத்திய — 1977 ஜூலை — பொதுத் தேர்தலிலும் இந்நிலைமையை அவதானிக்க முடிந்தது. இத் தேர்தலில் ஐ. தே. க. 140 ஆசனங்களை (அல்லது 83.33%) ப் பெற்று அமோக வெற்றியீட்டியது. இக் கட்சிக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 50.92 சதவீதமாகும். இதே வேளை, ஸ்ரீ. ல. சு. க. 8 ஆசனங்களை மட்டுமே வெற்றி கொண்டாலும்,

தாசாரப்படி தொடர்ந்து மிகவும் குறைவாகவே இருந்துவந்துள்ளது. எடுத்துக் காட்டாக, 1964ல் பிரிட்டனில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் இக் கட்சி (லிபரல்) 11.2 சதவீதத்தைப் பெற்றிருந்தாலும், 9 தொகுதிகளில் மட்டுமே அது வெற்றியீட்டியது.

விகிதாசாரப்படி பார்ப்பின் உண்மையில் அக்கட்சி 70 ஆசனங்களைப் பெற்றிருக்க வேண்டும். இதே போன்று, 1974 அக்டோபரிலும், அதற்குக் கிட்டிய மொத்த வாக்குகளின் பிரகாரம் விகிதாதாசாரப்படி 116 ஆசனங்களைப் பெற்றிருக்க வேண்டிய லிபரல் கட்சி 13 ஆசனங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

இலங்கையில் 1977 பொதுத் தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன முறையே 3.61, 1.98 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தாலும் பாராளுமன்றத்தில் அவற்றுக்கு ஓர் ஆசனம் தானும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அட்டவணை 2

#### இலங்கைப் பொதுத் தேர்தல் முடிவுகள்—வாக்குகளுக்கு விகிதாசாரமாக பெறப்பட்ட ஆசனங்கள் விகிதம்

| பொதுத் தேர்தல் | கட்சி | வென்ற ஆசனங்கள் | ஆசனங்களின் விகிதம் | வாக்குகளின் விகிதம் |
|---|---|---|---|---|
| மார்ச் 1960 .. .. | ஐக்கிய தேசிய கட்சி | 50* | 33.1 | 29.62 |
| | ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி | 46 | 30.5 | 21.12 |
| | லங்கா சமசமாஜ கட்சி | 10 | 6.6 | 10.50 |
| | கம்யூனிஸ்ட் கட்சி | 3 | 2.0 | 4.62 |
| | மகாஜன எக்ஸத் பெரமுன | 10 | 6.6 | 10.12 |
| | தமிழ் காங்கிரஸ் | 1 | 0.7 | 1.25 |
| | சமஷ்டிக் கட்சி | 15 | 9.9 | 5.75 |
| | ஜாதிக விமுக்தி பெரமுன | 2 | 1.3 | .36 |
| | லங்கா பிரஜா தந்திரவாத கட்சி | 4 | 2.6 | 4.08 |
| | எஸ். எம். பீ. | 1 | 0.7 | .79 |
| | எஸ். என். ஜே. பீ. | 1 | .7 | .36 |
| | பி. வீ. பி. | 1 | .7 | .32 |
| | சுயேட்சை | 7 | 4.6 | 8.83 |
| | ஏனைய | 0 | .0 | 1.78 |
| ஜூலை 1960 .. .. | ஐக்கிய தேசிய கட்சி | 30 | 19.9 | 37.57 |
| | ஸ்ரீ ல. சு. க. | 75 | 49.7 | 33.59 |
| | ல. ச. க. | 12 | 7.9 | 7.36 |
| | கம்யூனிஸ்ட் கட்சி | 4 | 2.6 | 2.96 |
| | மகா ஜன எக்ஸத் பெரமுன | 3 | 2.0 | 3.38 |
| | தமிழ் காங்கிரஸ் | 1 | 0.7 | 1.54 |
| | சமஸ்டிக் கட்சி | 16 | 10.6 | 7.19 |
| | ஜே. வீ. பீ. | 02 | 1.3 | .46 |
| | எல். பீ. பீ. | 02 | 1.3 | .96 |
| | சுயேட்சை | 06 | 4.0 | 4.62 |
| | ஏனைய | 00 | | 0.37 |
| 1970 .. .. | ஐ. தே. க. | 17 | 11.3 | 37.92 |
| | ஸ்ரீ. ல. சு. க. | 90 | 60.0 | 36.63 |
| | ல. ச. க. | 19 | 12.7 | 8.75 |
| | கம்யூனிஸ்ட் கட்சி | 6 | 4.0 | 3.42 |
| | மகாஜன எக்ஸத் பெரமுன | 00 | 0.0 | 0.94 |
| | கம்யூனிஸ்ட் கட்சி | 00 | 0.0 | 0.07 |
| | தமிழ் காங்கிரஸ் | 03 | 2.0 | 2.33 |
| | சமஸ்டிக் கட்சி | 13 | 8.7 | 4.96 |
| | எஸ். எம். பீ. | 00 | 0.0 | 0.41 |
| | சுயேட்சை | 02 | 1.3 | 4.56 |

மூலம்: பொருளியல் நோக்கு, மே, 1977.

உண்மையில் சார்புப் பெரும்பான்மைத் திட்ட அடிப்படையிலான தேர்தல் தொடர்பாக ஈனிட் லேக்மன் அளிக்கும் தீர்ப்பு இதுவாகும்:

''அரசியல் அபிப்பிராயத்தின் எல்லா பிரதான போக்குகளையும் பிரதிபலிக்கும் ஒரு பாராளுமன்றத்தை அது தருமெனவோ அல்லது பெரும்பான்மைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்ட அல்லது தனித்த பெரும்பான்மை வாக்காளர்களது ஆதரவைப் பெற்ற அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்துமெனவோ நம்ப முடியாது . . . . அத்துடன், ஒரு கட்சி அதன் சொந்தக் கருத்துக்களின்படி தடைகள் எதுவுமின்றி தொடர்ந்து அரசாட்சியை நடத்துதற்கான அதிகாரத்தை வழங்கவோ அல்லது விருப்பப்படி அதனை உருவாக்கவோ உதவுமென நம்பவும் முடியாது.''

#### விகிதாசாரப் பிரதிநிதித்துவம்

சார்புப் பெரும்பான்மைத் தேர்தல் முறையிலுள்ள இக்குறைபாடுகள், அம் முறையின் ஜனநாயகத் தன்மை பற்றி ஐயங்களைக் கிளப்பியுள்ளன. இம்முறையை விமர்சிப்போர், ஏதாவது ஒரு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை இதற்கு மாற்றாகச் சிபார்சு செய்துள்ளனர். இவ்விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை வெவ்வேறு அடிப்படைகளில் நிலவுகிறது. இவற்றுள் கட்சிப்பட்டியல் முறை, ஒற்றை மாற்று வாக்கு என்பனவே இன்று பெருமளவிற் பயன்படுத்தப்படுகின்றன.

ஸ்கண்டிநேவிய நாடுகள், பெல்ஜியம், ஒல்லாந்து, இத்தாலி, சுவிற்சர்லாந்து முதலிய நாடுகளில் கட்சிப் பட்டியல் முறையானது ஏதோ ஒரு வகையில்

### அட்டவணை 3

#### இலங்கைப் பொதுத் தேர்தல் 1977

| அரசியல் கட்சிகள் | ஆசனங்கள் | ஆசனம் % | வாக்கு % |
|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி .. .. .. | 140 | 83.33 | 50.97 |
| ஸ்ரீ. லங்கா சுதந்திரக் கட்சி .. .. | 8 | 4.76 | 29.72 |
| லங்கா சமசமாஜ கட்சி .. .. .. | — | — | 3.61 |
| கம்யூனிஸ்ட் கட்சி .. .. | — | — | 1.98 |
| மகாஜன எக்ஸத் பெரமுன .. .. | — | — | 0.36 |
| தமிழர் விடுதலை முன்னணி .. .. | 18 | 10.71 | 6.75 |
| தமிழ் தொழிலாளர் காங்கிரஸ் .. .. | 01 | 0.06 | 1.00 |
| சுயேட்சை .. .. .. | 01 | 0.06 | 5.65 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்தப்படுகிறது. இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசு (1978) அரசியற் திட்டத்தின் 99 ம் பிரிவின்படியும், உள்ளூராட்சி அதிகாரசபைகள் (சிறப்பேற்பாடுகள்) 1977 ன் 24 ம் இலக்கச் சட்டத்தின்படியும், பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றுக்கு இனி மேல் கட்சிப் பட்டியல் அடிப் படையிலமைந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவரீதியிலேயே தேர்தல் நடைபெறும்.

கட்சிப் பட்டியல் திட்டத்தின் பிரகாரம், ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் அல்லது தொகுதியிலும் (இவை பல அங்கத்தவர் தொகுதியாகவே இருக்கும்), ஒவ்வொரு அரசியற் கட்சியும் தனது வேட்பபாளர் பட்டியலை முன் வைக்கும். அங்கு மொத்தமாகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள அங்கத்தவர்களது எண்ணிக்கையை (பெரும்பாலும்) ஒத்ததாக கட்சியின் வேட்பாளர் எண்ணிக்கையும் அமையும். இப்பட்டியலில் வேட்பாளர்களது பெயர்கள் அமையும் ஒழுங்கு, கட்சியாலேயே தீர்மானிக்கப்படும். இவ்வகையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமையைத் தனிப்பட்ட வாக்காளர்களைப் பொறுத்தளவில் கட்டுப்படுத்தி, கட்சிக்கே கூடிய அதிகாரத்தை இம்முறை வழங்குகிறது. ''முழுப் பட்டியல்'' என்றழைக்கப்படும் திட்டத்தின் கீழ், வாக்காளர்கள் தாம் தெரிவு செய்ய விரும்பும் கட்சியின் பட்டியலை அப்படியே ஏற்றுக் கொண்டு அதற்கு வாக்களிக்க வேண்டும். சில திருத்தங்களுடன் இம் முறையே இலங்கையில் அமுல் செய்யப்படுகிறது. வெவ்வேறு கட்சிகளின் வேட்பாளர்களிடையே தனது வாக்கைப் பிரித்து அளிக்க இலங்கை வாக்காளனுக்கு முடியாது. சில நாடுகளில் உள்ள தேர்தல் முறையின் பிரகாரம், கட்சிப் பட்டியல்களிடையே தனது வாக்குகளைப் பிரித்தளிக்க வாக்காளனுக்கு இடமுண்டு. இதன் பிரகாரம், தனது வாக்கை ஒரு தனிக் கட்சியின் வேட்பாளர்களுக்கு அளிக்கவோ அல்லது வெவ்வேறு கட்சிகளின் வேட்பாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கவோ வாக்காளனுக்குச் சுதந்திரமுண்டு.

ஏற்கனவே சுட்டிக் காட்டியவாறு, எல்லாத் தொகுதிகளும் பல அங்கத்தவர் தொகுதிகளே. எனவே, வாக்களிப்பைத் தொடர்ந்து ஒவ்வொரு தொகுதியிலும், ஒரு தெரிவுக் கோட்டாவின் அடிப்படையில் போட்டியிடும் கட்சிகளுக்கிடையே ஆசனங்கள் ஒதுக்கப்படும்; அளிக்கப்பட்ட வாக்குகளை ஆசனங்களின் எண்ணிக்கையாற் பிரித்து இக்கோட்டா முறை நிர்ணயிக்கப்படும். உதாரணமாக, 200,000 செல்லுபடியாகும் வாக்குகளையும் 5 ஆசனங்களையும் கொண்ட ஒரு தொகுதியில் கோட்டா 40,000 ஆகும். தேர்தலின் பின் வாக்குகள் எண்ணப்பட்டு 40,000 வாக்குகளைப் பெறும் ஒரு பட்டியல் ஓர் ஆசனத்தைப் பெற அருகதையுடையதாகும்; 80,000 வாக்குகளைப் பெறும் பட்டியலுக்கு 2 ஆசனங்கள் கிட்டும். இது போன்றே ஆசனங்கள் பிரிக்கப்பட்டு வழங்கப்படும். இவ்வாறு இரண்டு பிரதிநிதிகளைப் பெறும் ஒரு கட்சியின் பட்டியலில் முதலாம் இரண்டாம் இடத்தை வகிப்பவர்கள் தெரிவு செய்யப்பட்டோராவர்.

நடைமுறையில், கோட்டாவின் மிகச் சரியான எண்ணிக்கையை கட்சிப் பட்டியல்கள் மிக அருமையாகவே பெறுமாதலின், கோட்டா எண்ணிக்கைக்கு மேலதிகமாக ஒவ்வொரு கட்சியும் பெறும் தொகை வெவ்வேறு விதங்களில் கணக்கிலெடுக்கப்படுகின்றது. இவற்றுள் பொதுவாகக் கையாளப்படும் இரு முறைகள் ''ஆகப் பெரிய மீதி'', ''ஆகக் கூடிய சராசரி'' என்பனவாகும். ''ஆகப் பெரிய மீதி'' என்ற திட்டத்தின்படி, கோட்டாவின் பிரகாரம் ஆசனங்கள் ஒதுக்கப்பட்ட பின்னர், மீதியாக ஆகக் கூடிய தொகை வாக்குகளைக் கொண்டிருக்கும் கட்சிக்கு மேலதிகமான ஆசனங்கள் வழங்கப்படும். உதாரணமாக கோட்டா வாக்கின் எண்ணிக்கை 40,000 ஆகவுள்ள 5 அங்கத்தவர் தொகுதியில் பின்வரும் தேர்தல் முடிவுகள் கிடைக்கின்றன எனக் கொள்வோம்:

| கட்சிகள் | மொத்த வாக்குகள் | கோட்டா அடிப்படையில் கிடைத்த ஆசனங்கள் | மீதி வாக்குகள் |
|---|---|---|---|
| அ | 93,000 | 2 | 13,000 |
| ஆ | 58,000 | 1 | 18,000 |
| இ | 49,000 | 1 | 9,000 |

ஆகப் பெரிய மீதி என்ற திட்டத்தின்படி, 'ஆ' கட்சிக்கு 5வது ஆசனம் கிட்டும். ''ஆகக் கூடிய சராசரி'' முறையின் கீழ், ஒவ்வொரு கட்சிக்கும் கிட்டும் மொத்த வாக்குகள், அவ்வக் கட்சியாற் பெறப்பட்ட மொத்த ஆசனங்களின் எண்ணிக்கையுடன் ஒன்றைக் கூட்டிவரும் எண்ணாற் பிரிக்கப்படும். இவ்வகையில் முன் சொல்லப்பட்ட உதாரணத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் கிடைக்கும் சராசரிகள் வருமாறு:

அ — $\frac{93,000}{3}$ — 31,000

ஆ — $\frac{58,000}{2}$ — 29,000

இ — $\frac{49,000}{2}$ — 24,500

இதன்படி, 'அ' கட்சிக்கு மேலதிக ஆசனம் ஒதுக்கி வழங்கப்படும். முன்னைய முறையானது, பெரிய கட்சிகளின் செலவில் சிறியகட்சிகளுக்கு உதவும் அதே வேளை, இரண்டாவது முறையானது சிறிய கட்சிகளின் செலவில் பெரிய கட்சிகளுக்கு ஆதரவாக இருக்கின்றது.

### ஒற்றைமாற்று வாக்கு முறை

விகிதாசாரப் பிரதிநிதித்துவத் திட்டத்தின் ஒற்றை மாற்று வாக்கு முறையானது, முதன் முதல் தோமஸ் ஹேயார் என்பவரால் முன் வைக்கப்பட்டது; ஜோன் ஸ்ட்ருவட் மில் தமது ''பிரதிநிதித்துவ அரசாங்கத்'' தில் (1861) இம்முறையை அங்கீகரித்துள்ளார். இது, பல அங்கத்தவர் தொகுதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு விருப்பத் தேர்வு வாக்களிப்பு முறையாகும். இங்கு பொதுவாக ஒரு தொகுதி 3 முதல் 7 ஆசனங்களைக் கொண்டிருக்கும். 1973 முதல் அயர்லாந்துக் குடியரசு, வட அயர்லாந்து ஆகிய நாடுகளிலும், 1921 முதல் மால்டாவிலும், 1949 முதல் ஆஸ்திரிய செனட் தேர்தலிலும், கனடாவின் இரு மாநிலங்களிலும் இம் முறை அமுலில் உள்ளது.

இத் தேர்தல் முறையில் வாக்காளர் ஒவ்வொருவரும் ஒரு வாக்குச் சீட்டைப் பெறுவர். அத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதியிற் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரது பெயர்களும் அதில் (பொதுவாக அகர வரிசைப்படி) குறிப்பிடப்பட்டிருக்கும். எனவே, தனியே கட்சிப் பட்டியலுக்கு மட்டுமன்றி, தமது விருப்பத்தை ஒவ்வொரு வேட்பாளருக்கேற்பவும் வெளியிட வாக்காளருக்கு இடமுண்டு. எனவே, பட்டியல்களிலுள்ள வேட்பாளருள், தாம் மிகவும் விரும்பும் ஒருவரது பெயருக்கெதிரே 1 எனவும், தமது விருப்பப்படி அதற்கடுத்த வேட்பாளர்களது பெயர்களுக்கு எதிரே 2, 3 எனவும் வாக்காளர் குறிப்பிடுவர். கட்சிப்பட்டியல் முறையைவிட இம்முறை, தனிப்பட்ட வாக்காளருக்குக் கூடிய தெரிவுச் சுதந்திரத்தை அளிக்கிறது. இங்கு பல்வேறு கட்சியின் வேட்பாளருக்கும் தனது வாக்கைப் பிரித்து வழங்க அவருக்கு முடியும்; அதே கட்சியிலும் கூட தெரிவு விருப்பைச் சுட்டிக் காட்டுவது தனிப்பட்ட வாக்காளரேயன்றி கட்சியல்ல.

ஆசனமொன்றை வெற்றி கொள்ளத் தேவையான கோட்டா எண்ணிக்கையை நிர்ணயித்தல் வாக்குகளை எண்ணுவதின் முதற்கட்ட நடவடிக்கையாகும். நிரப்பப்பட வேண்டிய ஆசனங்களின் தொகையால், சம்பந்தப்பட்ட தொகுதியில் கிடைத்த வாக்குகளைப் பிரிப்பதன் மூலம் இந்த எண்ணிக்கை நிர்ணயிக்கப்படும். முதல் எண்ணிக்கையில், வாக்காளரது முதல் விருப்பே கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும். அதாவது, 'அ' வின் பெயருக்கெதிரே 1 என்ற இலக்கமிடப்பட்ட சீட்டுக்களே அவருக்கான வாக்காகக் கணிக்கப்படும். ''ஆ'' வின் பெயருக்கெதிரே 1 என இலக்கமிடப்பட்ட சீட்டு ''ஆ'' வுக்கான வாக்குகளாகக் கணிக்கப்படும். இவ்வாறே ஏனையோருக்கு அளிக்கப்பட்ட வாக்குகளும் கணிக்கப்படும். முதல் எண்ணிக்கையில், தேவையான கோட்டா வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் இயல்பாகவே தெரிவு செய்யப்பட்டோராகப் பிரகடனப் படுத்தப்படுவர்.

எனினும், முதல் எண்ணிக்கையின் போது தேவையான ஆசன எண்ணிக்கைகள் கிடைக்காதபட்சத்தில், பொதுவாகப் பின்வரும் முறை கையாளப்படுகிறது. கோட்டா அடிப்படையில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களது மேலதிக வாக்குகள், வாக்காளர்களது இரண்டாவது விருப்பின் பிரகாரம் மற்றவர்களிடையே மீள் பகிர்வு செய்யப்படும். முதல் விருப்பின் பிரகாரம் ஒவ்வொரு வேட்பாளரும் ஏற்கனவே பெற்ற வாக்குகளுடன் இத் தொகையும் சேர்க்கப்படும். எனவே, கோட்டா 4,000 ஆகவிருந்து, 'இ' என்ற வேட்பாளர் 3,940 வாக்குகளை முதல் எண்ணிக்கையின் போது பெற்றிருந்தால், வெற்றி பெறும் வேட்பாளரது மேலதிக வாக்குகளை இரண்டாவது விருப்பின் அடிப்படையில் மீள் பகிர்வு செய்து அளிக்கும் பட்சத்தில், கோட்டாவை எட்டிப்பிடிக்க அவருக்குத் தேவைப்படும் 60 வாக்குகளைப் பெற்றுக் கொள்ள அது உதவலாம். இதன் மூலம் அவர் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றுவர்.

அப்படிச் செய்த பின்னரும் சில ஆசனங்கள் இன்னும் நிரப்பப்படாதிருப்பின் பெறப்பட்ட மொத்த வாக்குகளின் அடிப்படையில், அடிமட்டத்தில் இருக்கும் வேட்பாளர்கள் படிப்படியாக அகற்றப்பட்டு, இரண்டாவது விருப்பின் பிரகாரம் அவர்களது வாக்குகளை ஏற்கனவே உள்ள மொத்தங்களுடன் சேர்த்து தேவையான ஆசனங்களின் எண்ணிக்கையை அடையும் வரை கணக்கிடல் வேண்டும்.

இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர், உண்மையில் வாக்காளர்களாலேயே தெரிவு செய்யப்படுவார் என்பதை இம்முறை உறுதி செய்கிறது. வாக்களிப்போரது முதல் விருப்பு அல்லது இரண்டாம் (அல்லது சில சமயம் மூன்றும் நான்காம் விருப்பின் அடிப்படையில்) இத் தெரிவு நடைபெறும். அத்துடன் தனியே ஒருவருக்கோ அல்லது ஒரு கட்சிக்கோ அல்லது வாக்காளரது விருப்புக்கேற்ப பிரித்து வழங்கவும் இடம் வழங்குகிறது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவமானது, சார்புப் பெரும்பான்மை முறையிலுள்ள பெரும்பாலான குறைபாடுகளை நீக்கவல்லதென்பது தெளிவான ஒருண்மையாகும். எனினும், அதில் தீமைகள் இல்லாமலும் இல்லை. எடுத்துக்காட்டாக, ஒற்றை மாற்று வாக்கு முறையானது விருப்புத் தெரிவு அடிப்படையிலமைந்த வாக்களிப்பிலுள்ள சிக்கல்களையெல்லாம் நன்கு விளங்கிக் கொள்ளக்கூடிய கற்றறிந்த வாக்காளர்கள், குறித்த நாட்டில் அல்லது பிரதேசத்தில் வாழ்கின்றனர் என்பதை எடுகோளாகக் கொண்டே செயற்படுத்தப்படுகிறது. கடசிப்பட்டியல் முறையானது, வாக்காளர் ஒருவர் தமது வாக்கை அளித்து வேட்பாளரைத் தெரியும் விஷயத்தில், அவருக்குள்ள சுதந்திரத்தைக் கணிசமான அளவு குறைக்கின்றது. அத்துடன், பல அங்கத்தவர் தொகுதியொன்றில், ஒரு தனிப்பட்ட பாராளுமன்ற அங்கத்தவர் தமது தொகுதி மக்களுடன் நெருங்கிய தொடர்பை வைத்திருக்க முடியாதென்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது. வாக்காளருக்கு இத்தேர்தல் முறையானது சிக்கலை ஏற்படுத்துமென்ற விஷயம் ஒரு புறமிருக்க, கட்சிகளுக்கிடையே அல்லது வேட்பாளர்களுக்கிடையே மிகப் பூரண விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை இது கொண்டுவருமா என்பதும் கேள்விக்குரியது; ஏனெனில், குறித்த ஒரு தொகுதியில் சிறிய குழுக்களுக்கு எத்தகைய சந்தர்ப்பத்திலும் தேவையான கோட்டா வாக்குகளைப் பெற்றுக் கொள்ளல் கஷ்டமாகவே இருக்கும். பூரண விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்று கூறக் கூடியது தோமாஸ் ஹெயார் சிபார்சு செய்த முறையேயாகும்; இத்திட்டத்தின்படி முழு நாடும் ஒரு தொகுதியாகக் கணக்கிடப்படும்; தேசிய சட்ட சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்து அனுப்பும் பல ஆசனங்களை இது கொண்டிருக்கும்.

பூரண விகிதாசாரப் பிரதிநிதித்துவத் திட்டம் இதன் பிரதிபலனாக இல்லாவிட்டாலும் கூட, அயர்லாந்து போன்ற நாடுகளில் இம்முறை கையாளப்பட்டிதிலிருந்து கிட்டிய அனுபவமானது, முடிவுகள் விகிதாசாரத்தை நெருங்கியே இருந்ததைக் காட்டுகின்றன. 1974 தேர்தலில் வாக்குகளுக்கும், ஆசனங்களுக்குமிடையே விகிதாசாரம் காணப்படாதிருந்ததன் விளைவாக, தேர்தல் தொகுதி முறையில் சீர்திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமென பிரிட்டனில் மீண்டும் ஏற்பட்ட சிந்தனைப் போக்கானது, பிளேக் ஆணைக் குழுவை நியமிக்கும் நிலைமைக்கு இட்டுச் சென்றது; 1975 ல் ஹன்சார்ட் கழகத்தின் ஆதரவில் இவ்வாணைக் குழு நியமிக்கப்பட்டது. இக் குழு சிபார்சு செய்துள்ள இரு தீர்வுகளுள் ஒன்று, ஒற்றை மாற்று வாக்கு முறை ஆகும்.

எவ்வாறெனினும், விமர்சகர்களின் கருத்தின்படி, விகிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரப் பிரதிநிதித்துவத்திலுள்ள பிரதான குறைபாடு, அது சிறுபான்மைச் சிந்தனையைத் தூண்டுகிறதென்பதும், அதனுல், பல கட்சிமுறை கூட்டரசாங்கங்கள் என்பனவற்றை உருவாக்கத் தூண்டுகிறதென்பதுமாகும். வெவ்வேறு நலன்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் சந்தர்ப்பத்தைப் பெறுவதும், அரசாங்கத்தை அமைக்கும் விஷயத்தில் இந்நலன்கள் சருத்திற் கொள்ளப்படலும், அரசியல் முதிர்ச்சியின் ஓர் அடையாளமாகக் கொள்ளப்படலாம்; ஆனுல், பலம் வாய்ந்த ஒரே கட்சி அமைச்சரவையானது ஓர் உறுதியான அரசாங்கத்தை உருவாக்கத் துணைபுரியுமென அவர்கள் வாதாடுகின்றனர். அத்துடன், ஒரு சமூகத்திலுள்ள வெவ்வேறு குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காகவும், கணித ரீதியான கணிப்பீடுகளை மேற்கொள்வதற்காகவும் பல நன்மைகளைத் தரும் முற்கூறிய உறுதியான அரசாங்கத்தை உதாசீனம் செய்துவிட முடியாது.

### தென்னை . . .

(20ம் பக்கத் தொடர்ச்சி)

யோசிக்கப்பட்டன. முன்னைய ஆண்டுகளில் மொத்த உற்பத்தியில் 50 சதவீதம் ஏற்றுமதிக்கும் 50 சதவீதம் நுகர்வுக்கும் பயன்படுத்தப்பட்டன. ஆனுல் 1977ம் 1978ம் ஆண்டுகளில் உள்நாட்டு நுகர்வு உணவுத் தேவைகள் மொத்த உற்பத்தியில் 75 சதவீதமாகிடது.

எனினும், ஏற்றுமதி நிலைமைகளில் சிறிது அபிவிருத்தி காணப்பட்டது போலத் தோன்றியது. 1977 ம் ஆண்டில் தேங்காய் உற்பத்தி மிகத் தாழ்ந்த மட்டத்தை எய்தி, சிறிதளவு தேங்காய்களே ஏற்றுமதிக்குக் கிடைத்த போதிலும்கூட, அந்த ஆண்டில் பொதுவான ஏற்றுமதி நிலைமைகள் திருப்திகரமாகவே இருந்தன. ரூபாய்ப் பெறுமான ஏற்றுமதித் தரவுகளில் 1976 ல் காணப்பட்ட நிலைமைகளிலும் பார்க்க, 1977 ல் சிறிது அதிகரிப்புக் காணப்பட்டது. ஆனுல், 1978 ல் ஏற்றுமதிச் சம்பாத்தியத்தின் ரூபாய் பெறுமானம் முன்னெப்போதையும்விட மிகக் கூடிய அதிகரிப்பு மட்டத்தைக் காட்டியது. 1977ம் ஆண்டுச் சம்பாத்தியத்துடன் ஒப்பிடுகையில் இது 146 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. தேங்காய்த் துருவல், கொப்பரு முதலான பொருள்களின் மூலமான சம்பாத்தியம் 183 சதவீதமாகவும், தேங்காய் எண்ணெய் ஏற்றுமதிகள் 2,683 சதவீதமாகவுவும் அதிகரித்தன. குறைந்த தேங்காய் நிரம்பல் காரணமாக 1977 ல் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருந்த துருவல், கொப்பரு முதலான பொருள்களின் ஏற்றுமதியானது, 1978 ல் (சில நிபந்தனைகளின் கீழ்) தாராளமயப்படுத்தப்பட்டது.

எவ்வாறிருப்பினும், இவ்வெளிநாட்டு வர்த்தக சாதனைகளை ஒப்பிட்டுப் பார்க்கையில் ரூபாய் பெறுமதி, செலாவணி மாற்று வீதப் பெறுமதி என்பனவற்றிற் காணப்படும் வித்தியாசங்களும் கருத்திற்கெடுத்துக் கொள்ளப்படல் வேண்டும். 1977 ன் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மறைமுக நாணயப் பெறுமதிக் குறைப்புடன், ஏற்றுமதிச் சம்பாத்தியம் 100 சதவீதம் அதிகரிக்குமென இயல்பாக எதிர்பார்க்கப்பட்டது. இது எப்படி இருந்தாலும், ஏற்றுமதிச் சம்பாத்திய அதிகரிப்பானது (முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில்) 46 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. எஸ். டீ. ஆர். பெறுமதிகளில் பார்க்கும் போது தெங்குப் பொருள் ஏற்றுமதிகளின் பெறுமதி (அதற்கு முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில்) சுமார் 40 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

தேங்காய் சமன் அடிப்படையிற் பார்க்கையில், 1978 ல் ஏற்றுமதி செய்யப்பட்ட தொகை இரண்டு மடங்குக்கும் அதிகமாகியது. 1977ம் வருடத்துடன் ஒப்பிடுகையில் இது மிகவும் முன்னேற்றகரமான ஒரு சாதனையாகக் காணப்பட்டது. உப உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதிகளைப் பொறுத்தளவில் குறிப்பாக தும்பு ஏற்றுமதியைப் பொறுத்தளவில் 1977 ஐ விட பெறுமதிகளில் அதிகரிப்புக் காணப்பட்ட போதிலும், ஏற்றுமதி செய்யப்பட்ட தொகையில் வீழ்ச்சி காணப்பட்டது. 1978ல் ஏற்றுமதியான இரு ரகத் தும்புகளின் தொகையும், முன்னைய ஆண்டில் ஏற்றுமதியான தொகையை விட மிகக் குறைவாகக் காணப்பட்டது. தென்னஞ் சிரட்டைக் கரியைப் பொறுத்தளவில் தொகை, பெறுமதி இரண்டிலும் அதிகரிப்புக் காணப்பட்டது; ஆனுல், 1978 ல் ஏற்றுமதி செய்யப்பட்ட சிரட்டை, சிரட்டைத் தூள் பனவற்றின் தொகை முன்னைய ஆண்டை விட குறைவாகவே காணப்பட்டது. தென்னை ஈர்க்கும் குறிப்பிடத்தக்க ஓர் ஏற்றுமதிப் பொருளாகக் காணப்பட்டது. கூட்டு மொத்தமாகப் பார்க்கையில் தெங்குப் பொருள்களின் ஏற்றுமதி வர்த்தகத்தைப் பொறுத்தளவில் 1978 ம் ஆண்டு பொதுவாக ஒரு வெற்றிகரமான ஆண்டாகவே காணப்படுகிறது. அத்துடன் 1979 ம் ஆண்டுக்கான கணிப்பீடுகளும் மேலும் சிறப்பானவையாகவே காணப்படுகின்றன.

(15ம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஏற்றுமதித் தீர்வைகள் 32 சதவீதமாக இருந்தன. இது, 1977 ல் 9 சதவிகிதமாக மட்டுமே இருந்தது. கூடிய இறக்குமதிசனையடியொற்றி இறக்குமதி வரிசளும் (146.5 கோடி ரூபா) 183 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன. வர்த்தக, கைத்தொழில் நடவடிக்கைகள் செழிப்படைந்தமை காரணமாக இவ்வாண்டில் திரட்டப்பட்ட இலாப வரிகள் 60 சதவீதமாகவும், வருமான வரிகள் 20 சதவீதமாகவும் அதிகரித்தன.

இவ்வருடத்தில் உணவு மானியங்கள் மீதான செலவு ரூ. 218.4 கோடியாகவிருந்தது. இது முன்னைய வருடத்தை விடவும் 100 சதவீதம் அதிகமானதாகும். சனத்தொகையில் சுமார் அரைவாசிப் பகுதியினரின் பங்கீட்டு உணவுப் புத்தகங்கள் வாபஸ் பெறப்பட்ட ஒரு சூழ்நிலையில், உணவு மானியம் மீதான செலவுகள் அதிகரித்தமைக்குப் பல காரணங்களுஉடு. ரூபா புனர் மதிப்பீட்டையடியொற்றி அரிசி, கோதுமை என்பவற்றின் ரூபாப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாகும். மேலும், உள்ளூர் நெல் கொள்கொள்வனவு விலைகளும் அதிகரித்துக் காணப்பட்டன. 1977 ல் 12.7 கோடி ரூபாவாக இருந்த கோதுமை மா மானியம் 1978 ல் 101 கோடி ரூபாவாக அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் கடற்ருெழில் பொருளாதாரம்

## மீன்பிடித்துறையில் புதிய சக்திகளின் ஊடுருவல் குறித்த ஒரு கண்ணேட்டம்

— ஜோன் கூரியன்

**இந்திய மீன்பிடிக் கைத்தொழிலின் பரிணமமும், அபிவிருத்தியும் அண்மைக்காலம் வரையில், எமது நாட்டு நிலைமைகளைப் போன்றே இருந்து வந்துள்ளன. ஆயினும், மிகச் சமீபத்தில் 'அதி நவீன துறை' என்று அழைக்கப்படும் புதியதொரு சக்தி இந்தியக் கடற்ருெழில் பொருளாதாரத்தில் எழுச்சி பெற்று வருகின்றது. நூற்ருண்டு காலமாக பாரம்பரிய இயக்க அம்சங்களைக் கொண்டிருந்த மரபு சார்ந்த ஒரு துறையில், புதிய முதலாளித்துவ முயற்சியாளர்களும், பல்தேசிய நிறுவனங்களும் ஊடுருவல் செய்வதானது, சமூக, பொருளாதாரத் துறைகளில் ஏற்படுத்தவிருக்கும் தாக்கங்கள் பற்றியும், இதன் காரணமாக கவலையளிப்பதாக இருக்கும். இந்திய மீன்பிடிக் கைத்தொழிலின் எதிர்காலம் பற்றியும் திரு. கூரியன் இங்கு ஆராய்கின்ருர்.**

மீன் பிடித்துறையில் பாரிய வர்த்தக முகவர்களின் இன்றைய ஈடுபாடு, முப்பது வருடங்களுக்கு முன்னர் மீன்பிடித்துறையில் நவீனத்துவம், மூலதனச் செறிவுடைய தொழில்நுட்பம் என்பவற்றைக் கருதி மேற்கொள்ளப்பட்ட விஸ்தரிப்பு நடவடிக்கைகளின் விளைவொன்ருகும். பெருந்தொகையான மூலவளங்கள், தொடர்ந்தும் விரிவடைந்து செல்லும் சந்தைகள் என்பன இப்போக்குக்கு மேலும் அனுகூலமளித்தன. எவ்வாறிருப்பினும், 200 மைல் பரப்பளவு கொண்ட பிரத்தியேக பொருளாதார வலயத்தின் அறிமுகம், மீன்பிடித் துறை அபிவிருத்தியின் எதிர்காலம் குறித்த விவாதங்களைத் தூண்டி விட்டதுடன், புதிதாகப் பெறப்பட்ட ஆழ்கடல் மூலவளங்களைப் பெற்றுக்கொள்ள பாரிய வர்த்தக நிறுவனங்களுக்கு இடமளித்தது. தற்பொழுது எம்மிடமுள்ள மூலதனம், தொழில் நுட்பம் என்பன இப்புதிய மூலவளங்களைப் பயன்படுத்தப் போதாதிருந்தமையால், உலக மீன் வெளியீட்டில் எமது பங்கைத் தொடர்ந்தும் பேணி வரவேண்டிய அவசியம் கருதி, இந்நிறுவனங்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும், பாரம்பரியக் கடற்ருெழிலாளரின் வாழ்க்கையமைப்பில் இது ஏற்படுத்திய தாக்கம் பற்றி பலர் குரலெழுப்பினர். மரபு வழி மீன்பிடிச் சமூகங்களைப் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பணி எம்மைச் சாந்துள்ளது; ஆனல், அதே வேளையில் மீன்பிடியில் எமது உலகலாவிய பங்களிப்பினையும் நாம் புறக்கணித்து விட முடியாது.

மீன்பிடித்துறையில் பாரிய நிறுவனங்களின் பங்கெடுப்பு பற்றி யதார்த்த ரீதியில் விளங்கிக் கொள்வதற்கு மீன்பிடித் துறையின் பரிணம வளர்ச்சி பற்றிய மொத்த ரீதியான ஒரு நோக்கு அவசியமாகும். அதே வேளை, இந்தியாவின் பிரத்தியேக பொருளாதாரப் பிராந்தியத்தின் கடல் சாரீ மூலவளம், அதன் பயன்பாடு என்பன பற்றியும் ஆராய்தல் பயனுடையதாகும்.

### மீன்பிடிப் பொருளாதாரத்தின் பரிணமம்

முதலில், நாம் மீன்பிடிப் பொருளாதாரத்தின் வரலாற்று ரீதியான பரிணமத்தை ஆராய்வோம். இரு காரணங்களின் நிமித்தம் (பல்வேறு இடர்பாடுகளுக்கிடையில்) இதனை மேற்கொள்ள வேண்டியுள்ளது. முதலாவதாக, அதன் செயல்முறையையும், எத்தகைய நிலைமைகளில் மீன்பிடித் தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளோர் மூலவளங்களிலிருந்து மிகக்கூடிய பயன்பாட்டினை அடைய முடிகின்றது என்பதனையும் இது படம்பிடித்துக் காட்டும். இரண்டாவதாக, அது மீன்பிடித் தொழிலில் ஏற்பட்டுள்ள நவீன முயற்சிகளின் அபிவிருத்திப் போக்கு, அதன் நோக்கம் என்பவற்றை வெளிக்காட்டி ஆராய்வதுடன், பயன்படுத்தப்படாது எஞ்சியுள்ள மூலவளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பது தொடர்பான அறிவையும் தெளிவாகத் தரும்.

நாட்டின் மீன்பிடிப் பொருளாதாரம், உற்பத்தி (மீன்பிடித்தல்), சந்தைப்படுத்தல், மீன் நுகர்வு ஆகிய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோரை உள்ளடக்கியிருக்கின்றது. தற்போது, இது மரபுரீதியான துறை, நவீன் துறை என்ற இரு துறைகளைக் கொண்டிருப்பதுடன், ஒவ்வொரு துறையும் மேற்கூறிய மூன்று நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன.

பாரம்பரிய துறையே பொருளாதாரத்தின் அடித்தளமாக விளங்குகின்றது. இத்துறையில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பல்வேறு வகையிலான இயந்திரமயப்படுத்தப்படாத வள்ளங்கள் பாவிக்கப்படுவதுடன், 5 இலட்சத்துக்கும் அதிகமான கடற்ருெழிலாளர் ஈடுபட்டுள்ளனர். கடற்கரையோரமாகச் சிதறிக் காணப்படும் 1800 க்கும் அதிகமான கிராமங்களில் வாழும் இம்மீனவர்கள், நாட்டின் மொத்த மீன்பிடியில் சுமார் 70 சதவீதத்தைப் பெற்றுத் தருகின்றனர். இவ்வாறு பிடிக்கப்படும் மீன் ஆள் சுமையாக அல்லது சைக்கிள்கள் மூலமாக கிராம நுகர்வோரைச் சென்றடைகின்றது. தமது ஜீவனேபாயத்துக்காக மீன்பிடித் தொழிலை மேற்கொண்ட மக்களின் பரிணம வளர்ச்சியே இத்துறையாகும்.

ஒப்பீட்டு வீதியில் நவீனதுறை மிகக் குறுகிய வரலாற்றைக் கொண்டுள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்ட திட்டமிடப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் விளைவாகவே இத்துறை முக்கியத்துவமடைந்தது. சுமார் 70,000 பாரம்பரிய கடற்ருெழிலாளரே இத்துறையிலும் உழைப்பில் ஈடுபட்டுள்ளனர். ஓரளவுக்கு இயந்திரமயப்படுத்தப்பட்ட சுமார் 12,000 வள்ளங்களைப் பாவித்து வரும் இத்துறை, நாட்டின் மொத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்சார் மீன்பிடியில் சுமார் 25 சதவீதத்தைப் பெற்றிருக்கின்றது. இத்துறை பாரிய வர்த்தகர்களின் கைகளில் தங்கியிருப்பதுடன், சுமார் 250 மையங்களில் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வர்த்தகர், பாதை, புகையிரத மார்க்கம் என்பன வாயிலாக இவற்றை உள்நாட்டில் வெகுதொலைவில் அமைந்திருக்கும் பட்டினங்களுக்கு எடுத்துச் செல்கின்றனர்.

அதி நவீன துறை என்றழைக்கக்கூடிய ஒரு மூன்றாவது துறை புதிய போக்குகளுடன் எழுச்சி பெற்று வருகின்றது.

## பாரம்பரிய துறை

எமது கரையோரத்தில் 5,650 கிலோ மீட்டர் பிரதேசத்தில் சிதறி வாழும் பாரம்பரிய மீனவர்கள், நூற்றாண்டு காலமாக சாதி அடிப்படையில் இத்தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ள சமூகத்தைச் சேர்ந்தோராகும். இவர்கள் பன்னூற்றாண்டு காலமாக உள்ளூர் நிலைமைகளிற்குப் பொருந்தக்கூடிய தமக்கே உரித்தான தொழில் திறன், கருவி, மீன்பிடி நுட்பங்கள் என்பவற்றை வளர்த்துக் கொண்டுள்ளனர். மீன்கள், மீன்களின் பழக்கங்கள், அலைகள், நீரோட்டங்கள், நட்சத்திரம் என்பன குறித்து தலைமுறை தலைமுறையாக கைமாற்றப்பட்டு வந்த அறிவுச் செல்வத்துக்கும் இவர்கள் உரித்துடையோராவர்.

உழைப்புச் செறிவுடனான தொழில் நுட்பம், வள்ளத்தின் இடப்பற்றாக்குறை என்பன, சிறிய மீனினங்கள் நிறைந்த கரையை அண்மிய ஆழமற்ற பிரதேசங்களுக்கு மட்டும் இவர்களது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியுள்ளன. மரபு ரீதியான தொழில் நுட்பங்களின் குறைந்த உற்பத்தி ஆற்றலின் விளைவாக மீன்வளங்கள் முடிவடையாதிருந்தன. உற்பத்தி மிகக் குறைவாக இருந்த போதிலும், உற்பத்தி செய்வோர் மிகக் குறைந்த தொகையையே நுகர்வு செய்தமையால் பாவனைக்கும், விற்பனைக்கும் பெருமளவு மிகை இருந்தது. மீன்பிடிக் கிராமங்களுக்கு வெளியே இருந்த சமூகங்களில் மீனுக்கு கூடிய கிராக்கி நிலவியமையால் அப்பகுதிகளில் இம்மிகை விற்பனை செய்யப்பட்டது; அல்லது பண்டமாற்றுச் செய்யப்பட்டது. பெரும்பாலும் கடற்றொழிலாளரின் மனைவிமார் இவற்றை விற்பனை செய்வர். மேலும், மீன் வியாபாரம் தடையானது என்று கருதாத பிற சமூகங்களைச் சேர்ந்தோரும் இவற்றை விற்பனை செய்யத் தொடங்கினர். மீனின் உடனடி அழுகக் கூடிய தன்மை இவ்வர்த்தக விஸ்தரிப்பு எதிர்நோக்கிய பிரதான தடங்கலாக இருந்தது.

உப்பிடுதல், காயவைத்தல் ஆகிய மீனை நிலைப்படுத்தக்கூடிய பாதுகாப்பு நுட்பங்கள் இப் பிரச்சினையை ஓரளவிற்கு சமாளித்துள்ளன. இது பாவனைத் தன்மையை மேலும் விரிவுபடுத்தியது ஐஸ் தயாரிப்பும். பாவனையும் வர்த்தக நடவடிக்கைகளில் செழிப்பு நிலைமைகளை ஏற்படுத்தியதுடன் இதனையடியொற்றி குளிரூட்டல், பொதிகட்டுதல், போக்குவரத்து, உள்ளூர் நிலையங்களில் பெருமளவிலான பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகள் பெருமளவில் அதிகரித்தன.

இவ்வபிவிருத்திகள் காரணமாக பெருந்தொகையான மக்கள் மீன்பிடி சார்ந்த நடவடிக்கைகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றனர். உண்மையான கடற்றொழிலாளர் இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்த முன்வராமையால் உற்பத்தி, நுகர்வு அமைப்புக்களிடையே இடைவெளி அதிகரித்தது. இந்த இடைவெளி வெளியாரினால் நிரப்பப்பட்டது. ஆரம்பத்தில் இவர்கள் உற்பத்தியாளர், வர்த்தகர், சிறு விநியோகஸ்தர் ஆகியோருக்கு இடையே முகவர்களாகக் கருமமாற்றினர். பொதுவாக, இவர்கள் நிதியளிப்பவர்களாகவே தமது கருமத்தை ஆரம்பித்தனர். விசேடமாக, மீனவர்களின் வள்ளம், இயந்திரங்கள் அல்லது நுகர்வு போன்ற தேவைகளின் பொருட்டு முற்பணம் வழங்கினர். இவ்வாறு முற்பணம் பெறும் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியை இந்த நிதியாளர் மூலம் விற்பனை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவ்வாறாக, சிலர் தமது செல்வாக்கினை உற்பத்தித்துறையில் பரவச் செய்ததுடன் இன்னும் சிலர் சந்தைப்படுத்தல் அமைப்பில் தமது நிலையை உறுதியாக ஸ்தாபித்துக் கொண்டனர். எனவே, இவ்வாறாக நாட்டின் மொத்த மீன் உற்பத்தி, சந்தைப்படுத்தல் அமைப்பில் இத்தகைய இடைநிலை முகவர்களின் பலமான செல்வாக்கு விரிவடைந்ததுடன், அறுவடையின் கூடிய பாகத்தினையும் அவர்கள் சுவீகரித்துக் கொண்டனர்.

இவ்வர்த்தக விஸ்தரிப்பிற்கு முன்னர், மீன்பிடிக் கிராமங்களுக்கு அண்மையிலிருந்த பிரதேச மக்களே மரபுசார் துறையின் நுகர்வாளர்களாகவிருந்தனர்; இவர்களது கொடுக்கல் வாங்கல் பண்டமாற்று முறையில் அமைந்திருந்தது. பாதுகாப்பு நுட்பத்தில் எற்பட்ட விருத்தி நிலைமைகள் காரணமாக சந்தை விரிவடைந்ததுடன், கூடியளவு பணப்பிரயோகத்திற்கும் வழி வகுத்தது. உண்மையில், பெரும்பாலான கரையோர விற்பனை நிலையங்களிலிருந்த பெருந்தொகையான வாடிக்கையாளர்கள் அடிப்படையில் கிராமீய அல்லது கீழ் வருமான மட்டத்தை சேர்ந்தவர்களாக இருந்தனர். (உயர் சாதியரின் சைவ சித்தாந்தம், கிராமீய, கீழ் வருமான குழுவினரிடையே மாத்திரம் மீன் நுகர்வினை மட்டுப்படுத்திய ஒரு காரணியாக விளங்கியது.) சனத்தொகையில் இப்பிரிவு மக்களிடையே மீன் படிப்படியாக ஒரு பிரதான மாமிச உணவாகவும், புரதச் சத்து மூலமாகவும் மாறியது. கிராமப்புறங்களின் பாரிய மொத்த ரீதியான கேள்வி, மரபு சார்ந்த துறையின் தயாரிப்பு அதிகரிப்பதற்கு ஊக்கமளித்ததுடன், சிறு விநியோகஸ்கர்களின் நடவடிக்கைகளை அதிகரித்து, சிறிய நுகர்வோர் குறைந்த விலையில் மீனைப் பெறுவதற்கும் உத்தரவாதமளித்தது.

கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட பெருந்தொகையான மீனவர், விநியோகஸ்தர்கள், நுகர்வோர் என்போரே நாம் இங்கு குறிப்பிடுகின்ற மீன்பிடிப் பொருளாதாரத்தின் மரபுசார் துறையினராகும்.

## நவீன துறை

சுதந்திரத்திற்கு பிற்பட்ட ஆரம்ப காலத்தில் நகர்ப்புறத்தில் கைத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட வேகமான அபிவிருத்தியையடுத்து பெருந்தொகையான மக்கள் இந் நிலையங்களை நோக்கிப் பெயர்ந்தனர். பாதைகள், புகையிரத மார்க்கம் என்பவற்றில் ஏற்பட்ட விருத்தி காரணமாக இந் நிலையங்களை இலகுவில் சென்றடைய முடிந்ததுடன், அதிகரித்த கேள்வி காரணமாக கூடிய விலையில் மீனை விற்பனைசெய்வதற்குரிய புதிய வசதியும் இது தோற்றுவித்தது. சிறந்த முறையில் ஸ்தாபிதமாகி எழுச்சியடைந்து வந்த முதலாளித்துவ வகுப்பினர், தமது கட்டுப்பாட்டில் இருந்த மீன் உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகையை, அதிகரித்த கிராக்கி நிலவிய இப் புதுப் பிரதேசங்களுக்கு வழிப்படுத்தலாயினர். மேலும் பல மாநில அரசுகள் திட்டமிடப்பட்ட மீன்பிடி அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பெருமளவில் அமுலாக்கம் செய்தன. பாரம்பரிய மீன்பிடித் துறையின் உற்பத்தி ஆற்றல் குறைவாக இருந்ததனால், பிரித்தானியா, நோர்வே ஆகிய நாடுகளின் பாணியில் மீன்பிடித்துறையை இயந்திரமயப்படுத்துவதில் திட்டவறிஞர் கூடிய கவனஞ்செலுத்தலாயினர்.

பண முதலாளிமார் மீன்பிடி வள்ளங்களை இயந்திரமயப்படுத்தும் கொள்கையை ஆதரித்தனர். மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக மீனவர்களுக்கு வழங்கப்படும் இயந்திரப் படகுகளின் பெருந்தொகையைச் சுவீகரித்துக்கொள்ளும் நோக்கில், அரசு ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் இவர்கள் ஊடுருவினர்; ஏற்கனவே மீனவர் மீது அவர்கள் கொண்டிருந்த ஆதிக்கம் காரணமாக இது இலகுவானதாக அமைந்ததுடன் வெற்றியுமளித்தது.

இயந்திரப் படகுகளினாலும், நைலோன் வலைகளினாலும் மீன் பிடிப்பதன் மூலம் உற்பத்தியும் உற்பத்தித்திறனும் அதிகரித்ததுடன், ஆரம்பத்தில் பிடிக்கப்பட்ட பெருந்தொகையான பெரிய மீன் இனம் நகரங்களிற்கு அனுப்பப்பட்டது. இயந்திரப் படகுகள் உற்பத்தித்திறனிற்கு வழிவகுத்ததுடன், டீசல், இயந்திர எண்ணெய், பழுதுபார்த்தல் ஆகிய (இயந்திரமற்ற படகு இயக்குவோர் அறியாத) பல்வேறு புதிய செலவுகளையும் ஏற்படுத்திற்று. இவை யாவும், கூடிய பணத்தை வேண்டி நின்றதுடன், பிடிக்கப்படும் மீன் தொகையைத் தமக்கு விற்பனை செய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன் இச் செலவுகளிற்கு முற்பணம் வழங்க முதலாளிமார் முன் வந்தனர். இதன் காரணமாக மீனவர்களின் நிலை பலவீனமடைந்தது.

அதிகரித்த மீன்பிடித்தொகை, பணப் பற்றாக்குறையுடன் மீனவர் மீது கட்டுப்பாடின்றியுமிருந்த சிறு விநியோகஸ்தர்களை சங்கடத்துள்ளாக்கியது. அவர்கள் தொழிலிருந்து விலகவேண்டியிருந்தது; அல்லது எழுச்சி பெற்றுவந்த முதலாளிடமிருந்து கடுமையான நிபந்தனைகளின் கீழ் மீனைக் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. இவ்வாறாக மீன்பிடிச் சமூகத்திலிருந்து வந்த மரபுசார்ந்த மீனவரும், இயந்திரப் படகுடன் கூடிய மீனவர்களும் புதிய சந்தை அமைப்பினால் ஒருங்கிணைக்கப்பட்டனர். இதுவரையும் கிராமங்களைச் சுற்றி மாத்திரம் அமைந்திருந்த இவ்வமைப்பு, மாநில அரசுகளின் எல்லைகளைக் கடந்து வெகு தொலைவிலிருந்த நகர்மையங்களை தொடர்புபடுத்தியது. மிகை உற்பத்தி நிலையங்களிலிருந்து கூடிய கேள்வியுள்ள சந்தைகளிற்கு மீனைக் கொண்டு செல்லும் புதிய அமைப்பு இரு கோணங்களிலுமிருந்த சுரண்டல்வாதிகளுக்கு சிறந்த அனுகூலத்தைப் பெற்றுக் கொடுத்தது. இன்னும், கொள்வனவாளரின் சந்தையை எதிர்நோக்கி நின்ற உற்பத்தியாளர்கள் தமது அதிகரித்த உற்பத்தித்திறனிற்கு குறிப்பிடத்தக்களவு விலைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை. இதேவேளை, விற்பனையாளரின் சந்தையை எதிர்நோக்கிய நுகர்வோர் (குளிரூட்டப்படாமை, பரிமாற்றலில் கவனமின்மை, அழுகல் தன்மை என்பன காரணமாக) குறைந்த தரத்துடனான மீனுக்கு கூடிய விலைகளைச் செலுத்த வேண்டியவர்களாயிருந்தனர்.

மீன்பிடிப் பொருளாதாரத்தை நவீனமயப்படுத்துவது தொடர்பான முயற்சியின் பின்னர், மீன்பிடி தொடர்பான ஆராய்ச்சி, அபிவிருத்தி, பயிற்சி என்பவற்றுக்கான நிலையங்கள் நாடெங்கணுமிருந்த மீன்பிடிமையங்களில் அமைக்கப்பட்டன. இவை பெரும்பாலும் கைத்தொழில்மயப்படுத்தப்பட்ட நாடுகளின் மீன்பிடிக் கைத்தொழிலுடன் இணைந்த வகையில் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்துவது தொடர்பானதாகவேயிருந்தன. உணவு விவசாய தாபனம் போன்ற சர்வதேச தாபனங்களின் கூட்டுறவு, ஆலோசனை என்பன இந் நடவடிக்கைகளிற்குப் பெறப்பட்டதுடன், நாடுகளிற்கிடையிலான அபிவிருத்தித் திட்டங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டன.

கேரளத்தை ஓர் உதாரணமாக எடுப்போம். ''ஒருங்கிணைக்கப்பட்ட மீன்பிடி அபிவிருத்தி'' என்ற திட்டத்தில் இங்கு நோர்வே நாட்டினர் பணிபுரிகின்றனர். இவர்கள் பாரம்பரிய வள்ளம் அல்லது மீன்பிடியை நவீனமயப்படுத்தக் கூடிய நடுத்தர தொழில் நுட்பத்தை ஒதுக்கிவிட்டு, அதற்குப் பதிலாக மிக நவீனமான இயந்திரங்களை அறிமுகம் செய்தனர். மேலும், மீன் பதனிடல், சந்தைப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் ஒரு வர்த்தக நிலையமும் நிறுவப்பட்டது.

கேரளக் கரையின் எழில்மிகு பாரம்பரிய மீன்பிடிக் கிராமங்களில் (நோர்வே நாட்டுக்குப் பொருத்தமான) புதிய தொழில் நுட்ப மாதிரிகள், புகுத்தப்பட்டன; ஆனால் இயற்கையாகவே இம்மாதிரிகள் தோல்வி கண்டன. இவ்வமைப்புகளின் இயல்பு, பொருளாதாரம் என்பன காரணமாக மீன் விலைகள் அதிகரித்தன. பின்னர் உயர் வருமானம் பெறுவோர் வாழும் ஒரு நகர மத்திய நிலையத்தில் கவனம் செலுத்தப்பட்டது; ஆனால் அதுவும் போதிய பயனளிக்கவில்லை. இயந்திர மீன்பிடிப் படகுகள், மீனுடன் நண்டு இனத்தைச் சேர்ந்த ஒரு வகை இறாலையும் பிடித்தன. இவ்விறால்களுக்கு உள்ளூரில் கிராக்கி குறைவாக இருந்த போதிலும் பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் கூடிய கேள்வி இருந்தது. கேரளக்கரைக்கு அண்மைய கடற் பிரதேசத்தில் இவ்விறால் இனம் பெருமளவில் இருப்பதனை மூலவள ஆய்வுகள் காட்டின. குளிரூட்டல் தொழில் நுட்பத்தைப் பெற்றிருந்த நோர்வேஜியர்கள், இவற்றைக் குளிரூட்டி கூடிய கேள்வியுள்ள ஐக்கிய அமெரிக்கச் சந்தைக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இப் பிரச்சினைக்கு பரிகாரம் கண்டனர்.

இறால், ஆழ்கடல் மீனினம் என்பவற்றைப் பிடிக்கும் வகையில், ஆழ்கடல் வலைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், குளிர்சாதன உலைக்களங்கள் நிறுவப்பட்டு அமெரிக்காவுடன் வர்த்தக உறவுகளும் ஏற்படுத்தப்பட்டன. ஆழ்கடல் வலைகள் பெரிய, பாரமான வலைகளாகவிருந்தமையால், நீரின் அமுக்கத்திற்கிடையே வலையை ஆழ்கடலினுள் அனுப்புவதற்கு இயந்திர சக்தி தேவைப்பட்டது. ஆகவே இம்முறையிலான மீன்பிடியை இயந்திர மயப்படுத்தப்படாத வள்ளங்களின் மூலம் மேற்கொள்ள முடியவில்லை.

இவ்வாறாக, மீன்பிடித் தொழிற்துறையில் புதிய ஊக்கமொன்று பிறந்தது; பெருமளவிற்கு வெளிநாட்டுச் செலாவணி தேவைப்பட்ட ஒரு நிலைமையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபதுக்களின் ஆரம்ப கால கட்டத்தில் மீன்பிடி திடீரென ஒரு பிரதான ஏற்றுமதிக் கைத்தொழிலாக மாறியது. இது வரை மீன்பிடித் தொழிலிருந்து ஒதுங்கியிருந்தவர்கள் கூட இறால் வர்த்தகத்தைச் செய்வதில் பெருமை கண்டனர்.

ஒரு புறம் மீன்பிடிப் பொருளாதாரம் புதிய சக்திகள், நலன்கள் என்பவற்றின் கைகளில் சிக்கியது; இதுவரை காலமும் தேங்கிக்கிடந்த இப்பொருளாதாரம் அதி விரைவில் உலக முதலாளித்துவ சந்தைச் சக்திகளின் இறுக்கமான பிடிக்குள் வந்தது. மறுபுறத்தில், மரபுசார்ந்த, நவீன பாரம்பரியக் கடற்றொழிலாளரைப் பொறுத்தவரையில் இறால் ஒரு புது மீனினமாக இருக்கவில்லை. இவர்கள் குறித்த சில பருவங்களில் இறால்களைப் பிடித்தனர்; ஆனால் அவற்றை உண்ணவில்லை. பாரியளவு இறால் பிடிக்கப்பட்ட வேளைகளில் அவை கடற்கரையோர தென்னந் தோட்டங்களில் பசளையாகப் பயன்படுத்தப்பட்டன. உண்ணத்தகாத ஓர் உயிரினம், குறுகிய காலத்தில் கூடிய செல்வமுழைக்கும் 'தங்கமாக' மாறிய விந்தையை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. (1960 க்கும் 1974 க்கும் இடையில் இந்தியாவின் மொத்த கடல்படு திரவிய ஏற்றுமதியில் இறாலின் பங்கு 30 சதவீதத்திலிருந்து 77 சதவீதமாகவும், அதன் பெறுமதி 41 சதவீதத்திலிருந்து 90 சதவீதமாகவும் அதிகரித்தது. இத்துடன் இதன் அலகுப் பெறுமானம் கி. கிராம் 3.32 ரூபாவிலிருந்து 19.10 ரூபாவாகியது). மீனவர்கள் கூடியளவு இறால்களைப் பிடிக்கக்கூடிய ஆற்றலுடையவர்களாகவிருந்ததுடன், மீன் பிடிக்காத பருவத்தில் (பிடிக்கின்ற மீனைத் தமக்கே தயாரித்தல் வேண்டுமென்ற வாக்குறுதியின் பேரில்) வர்த்தகர்-தரகர் அளிக்கின்ற முற்பணங்களையும் மகிழ்ச்சியுடன் ஏற்றனர். உண்மையில், அறுபதுக்களின் கடைசிப் பகுதி வரை அமெரிக்காவின் சுகபோக ஹோட்டல்களையும், செல்வந்த ஜப்பானியத் திருமண வைபவங்களையும் சென்றடைந்த இறாலில் நான்கில் மூன்று பங்கினை இவர்களே பிடித்தனர். இவ்வாறாக, பாரம்பரிய மீனவர்கள், குளிர் உலைக்களங்கள், குளிரூட்டற் சாதனம் பொருத்திய வாகனம் என்பவற்றை வைத்திருந்த இந்தியாவின் புதிய முதலாளித்துவ தரகர்களின் மூலமாக உலகச் சந்தையுடன் தொடர்புபடுத்தப் பட்டனர்.

## எழுச்சி பெற்றுவரும் அதி நவீன துறை

மீன்பிடிப் பொருளாதாரத்தின் பரிணாம வளர்ச்சி வரலாற்றின் இக்கால கட்டத்தில், பாரிய வர்த்தகக் கம்பெனிகள், பல் தேசிய நிறுவனங்கள் என்பவற்றையுள்ளடக்கிய புதிய கைத்தொழில் முதலாளிகள் பங்கு கொள்ளத் துவங்கினர். ஆரம்பத்தில் பாரிய வர்த்தக நிலையங்கள், ஏற்றுமதி முகவர்கள் என்ற வகையில் தமது ஏற்றுமதிக் கடமையை நிறைவு செய்யும் பொருட்டு, குறிப்பாக கடல் படுதிரவிய ஏற்றுமதி வர்த்தகத் துறைக்குள் நுழைந்தனர். பின்னர், இறக்குமதி வர்த்தகக் கட்டுப்பாட்டுக் கொள்கைத் திட்டத்தின் விளைவாக, இறக்குமதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றனர். இக் கொள்கையின் கீழ் ஏற்றுமதி முகவர்கள் பாரம்பரியமற்ற பொருட்களை (இவற்றுள் தகரத்திலடைக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட மீனும் ஒன்றாகும்.) ஏற்றுமதி செய்யுமாறு வேண்டப்பட்டனர். இதன் கப்பற்றளம் வரையிலான பெறுமானம் அனுமதிப் பத்திரப் பெறுமானத்திலும் நான்கு மடங்காகும்.

இதனை நிறைவேற்றும் பொருட்டு இவர்களுட் சிலர், பதனிடுவோரிடமிருந்து மீன்களைக் கொள்வனவுசெய்து தமது தயாரிப்புக்களின் பெயரில் ஏற்றுமதி செய்யும் வர்த்தக முதலாளிகளாக இயங்கினர். அனுகூலம் வாய்ந்த ஏற்றுமதி முகவர்கள் என்ற பெயர்களைப் பயன்படுத்தி தமக்கும் பதனிடுவோரிற்கும் கூடிய இலாபமளிக்கக்கூடிய ஒரு தொழிலை இவர்கள் செய்தனர். இம்முகவர்கள் எத்தகைய இடர்ப்பாடுகளோ, தடைகளோ இன்றி பதனிடப்பட்ட தயாரிப்புகளைப் பெற முடிந்தது. பதனிடுவோரிற்கு விற்பனை வருமானத்தில் 7 சதவீதக் கழிவுகளை இவர்கள் வழங்கினர். எல்லாவற்றிற்கும் மேலாக ஏற்றுமதிச் செய்முறைகளும், சந்தைப்படுத்தும் பிரச்சினைகளும் இதன் மூலம் எளிதாக்கப்பட்டன. இன்னும் சிலர் ஒரு படி முன் சென்று, ஊக்கமுடைய இளைஞர்களுக்கும், நிறுவனங்களுக்கும், சொந்தமான மீன்பிடி வள்ளங்களைக் கொள்வனவு செய்யவும் பதனிடும் நிலையங்களை ஆரம்பிக்கவும் பண உதவி வழங்கினர். ஏற்றுமதி செய்யக்கூடிய மீனினம் வர்த்தக முகவர்களுக்கு விற்கப்படும் என்பதே இதன் கருத்தாகும். இம்முயற்சியில் வெற்றி கண்ட பாரிய விற்பனை முகவர்கள், தாம் வேலை வாய்ப்புக்களை வழங்கியதாகவும், வேலையற்ற பட்டதாரிகளுக்கு உதவியளித்தாகவும் கூறி தமது பிரதிபிம்பத்துக்கு மதிப்புத் தேடிக் கொண்டனர். பல பாரிய முகவர்கள் தமது சொந்த தயாரிப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில், முதலீடு செய்து மீன்பிடித்தல், பதனிடுதல், ஏற்றுமதி செய்தல் என்பன மூலம், பற்றிரி, பிஸ்கட்ஸ், சிகரெட், தேயிலை ஆகியவற்றில் தமக்கிருந்த தனியுரிமையை பன்முகப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அதிகளவிலான நவீன தொழில் நுட்பம், பெருமளவில் வர்த்தகத்தில் தங்கியிருத்தல் என்பன இந் நவீன துறையின் அடிப்படைப் பண்புகளாகும். உயர்ந்த முதலீடு, அதிக செலவு, கூடிய உற்பத்தி, பெறுமளவில் சூழல் அழுக்கடைதல் என்பன இப்பொருளாதார நடவடிக்கைச் சுழற்சியின் அம்சங்களாகும். இதன் காரணமாக அதிகரித்த உற்பத்திச் செலவு தவிர்க்க முடியாததாக இருந்தது.

## ஆழ்-கடல் மீன்பிடி அவசியமானதா?

இவ் வினாவிற்குரிய விடை 'ஆம்' என்பதாகும். கரைக்கு அப்பாற்பட்ட பிரதேசத்தில் 22 லட்சம் தொன் கடல்சார் மூல வளங்கள் பயன்படுத்தப்படாதுள்ளன என்பதனை ஆய்வுகள் காட்டுகின்றன. கரைக்கு அண்மிய பகுதிகள் பாரம்பரிய மீனவர்களின் எதிர்காலத் தேவைகளுக்காக ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய அவசியத்தை இத்துறையின் தொழிற் செறிவு மிக்க சாதனை எடுத்துக் காட்டுகின்றது. மரபுரீதியான வள்ளங்களினதும், சிறிய இயந்திரப் படகுகளினதும் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டதாகும். எனவே, மீன்கள் வாழுமிடங்களைக் கண்டறிதல், பிடித்தல், இழுத்து வருதல் போன்ற கருமங்களுக்கு பாரிய மீன்பிடிக் கப்பல்கள் தேவைப்படும். இந்த அடிப்படையில், ஆழ்-கடல் மீன்பிடி அவசியமில்லை எனக் கூற முடியாது.

(மிகுதி அடுத்த இதழில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளைசாலிகள் வெளியேற்றம்—மலேசிய அனுபவம்

— சுசான் லிம்

''மூளைசாலிகளின் வெளியேற்றம்'' என்ற பிரச்சினை இலங்கைகு மட்டும் சிறப்பானதொன்றல்ல. ஒரே காலப்பிரிவில் குடியேற்ற வாதிக்கத்துக்குட்பட்டிருந்த பல ஆகிய நாடுகள், அண்மைய வருடங்களில் குடியகல்வு காரணமாக திறன்மிக்க தொழில்சார் நிபுணர்கள் பலரை இழந்து வந்துள்ளன. மலேசியாவும் அத்தகைய நாடுகளில் ஒன்ருகும். தொழில் திறன்மிக்க இளந்தலைமுறையினர் ஆயிரக்கணக்கில் வெளிநாடுகளை நோக்கிப் பெயர்ந்து செல்வது மலேசியாவை எவ்வளவு தூரத்துக்குப் பாதித்திருக்கின்றது என்பதனை 'இன்சைட்' இதழில் வெளியாகியிருக்கும் இக்கட்டுரை தெளிவு படுத்துகின்றது.

கோலாலம்பூர் எப்போதும் மிங்கின் வாழிடமாக இருந்து வந்துள்ளது. அவனது பெற்ருேரைப் போன்று அவனும் அந்த மண்ணில்தான் குழந்தையாகத் தவழ்ந்து பெரியவனுக வளர்ந்தான். தனது சட்டத் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு, வர்த்தகத் தொழிலில் அவன் அடியெடுத்து வைக்கத் தொடங்கியதும் அங்குதான். ஆனல், இந்த வருட ஆரம்பத்தில், மிங்கும், டாக்டரான அவனது மனைவியும், பாடசாலை செல்லும் வயதுடைய இரு பிள்ளைகளும் கோலாலம்பூருடனுன தங்கள் தொடர்புகளை எல்லாம் அறுத்துக் கொண்டு சிங்கப்பூர் சென்று சேர்ந்து விட்டனர். தொழில் புரியும் மலேசியாவின் மத்தியதர வர்க்கத்தவருள் — குறிப்பாக சீனர், இந்தியர் ஆகியோருள் — மிங்கின் கதை அப்படியொன்றும் வித்தியாசமானதோ விசேஷமானதோ ஒன்றல்ல. இது ஒரு சகஜமான விஷயமாக மாறிவிட்டது.

''மூளை சாலிகளின் வெளியேற்றம்'' பிரச்சினை மலேசியாவுக்கு மட்டும் சொந்தமான ஒரு பிரச்சினையல்ல என்பது உண்மையே. கைத்தொழில் விருத்திபெற்ற பிரிட்டன் போன்ற நாடுகளையும் அது பாதித்துள்ளது. ஆனல் கோலாலம்பூரில் அது — சில அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஒப்புக்கொள்வது போன்று — ஒரு நெருக்கடியான கட்டத்தை எய்திவிட்டது. 1976, 77 ம் ஆண்டுகளில் நிலைமை வெகு மோசமாகக் காணப்பட்டது. பல டாக்டர்கள் — குறிப்பாக பல்கலைக் கழகப் போதனு வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்கள் — தங்கள் பெட்டி படுக்கைகளைக் கட்டிக் கொண்டு வெளியேறத் தொடங்கியது இக் காலப்பகுதியில் தான். இவ்வெற்றிடங்களுக்கு மாற்று மருத்துவ விரிவுரையாளர்களின்றி பல்கலைக் கழகம் பெரும் நெருக்கடிக்குள்ளாயிற்று. இதனையிட்டுப் பெரிதும் அதிர்ச்சியடைந்த மலேசிய மருத்துவக் கழகம், இவ் வெளியேற்றத்தை உடனடியாகக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்குமாறு அரசாங்கத்தைக் கோரியது. ஆனல், இதனல் எவ்வித பிரதிபலனும் ஏற்படவில்லை. இது ஒரு பொது விவாதமாக மாறி, இறுதியில் சகலரது கவனத்தையும் ஈர்க்கத் தொடங்கிற்று. நாட்டின் தலைசிறந்த வைத்திய நிபுணர்கள் ஏன் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் என்பதனை ஆராய முழு விசாரணை நடத்தப்பட வேண்டுமெனப் பலர் கோரினர். மறுபுறத்தில், வெளியேறுவோரினல் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புதல் அப்படியொன்றும் கஷ்டமல்ல என பல்கலைக் கழகத்தினதும், சுகாதார அமைச்சினதும் அதிகாரிகள் கோபத்துடன் பதிலளித்தனர்.

இவ்வாதப் பிரதிவாதங்களின் சூடு இப்போது நன்கு தணிந்து விட்டாலும், தொழில்சார் நிபுணர்களது வெளியேற்றம் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. உண்மையில் இது பயங்கரமான ஓர் அதிகரிப்பைக் காட்டுகிறது. அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளே வெளியேறுவோரால் பெரிதும் விரும்பப்படும் நாடுகளாகவுள. மலேசியாவிலுள்ள இந்நாடுகளின் ஸ்தானிகராலயங்களின் அறிக்கைகளின் படி, அண்மைய மாதங்களில், இங்ஙனம் வெளியேறுவோருக்கென இந்நாடுகளில் வழங்கப்படும் வதிவிட விஸாக்களின் எண்ணிக்கையும், அவை தொடர்பான ஆரம்ப விசாரணைகளைச் செய்வோரின் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளன. வைத்தியர்கள் வைத்திய சேவையைச் சேர்ந்த உதவி அதிகாரிகளான ரேடியோக் கதிர் அதிகாரிகள், தாதிமார் ஆகியோர், கணக்காளர், பொறியியலாளர், சுருக்கெழுத்தாளர்கள், செயலாளர்கள், வினைத்திறன் மிகு சில வகை வர்த்தகர்கள் என்போரே பெருமளவில் வெளியேறி வருகின்றனர் எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. வர்த்தக முயற்சியாளர்கள் என்ற ஒரு புதிய குழுவினரும் இப்போது வெளியேறத் தொடங்கியுள்ளனர் என்பதை அறியும்போது நீங்கள் ஆச்சரியப்படலாம்.

முயற்சியாளர் (Entreprenurs) யார் என்பதை அவுஸ்திரேலிய குடிவரவு அதிகாரிகள் பின்வருமாறு வரையறை செய்துள்ளனர். நாட்டின் பொருளாதாரத்துக்கெனப் புதிய உற்பத்திப் பொருள்களை, புதிய சேவைகளை, அல்லது புதிய கைத்தொழில்களை உருவாக்கத் தேவையான அனுபவமும், ஆற்றலும், தொழில்நுட்பத் திறமையும் கொண்டோரே அவர்களாவர். இத்தகையோர் நாட்டுக்குள் வருகையில் அவர்களுக்கு அவுஸ்திரேலியா விசேட மதிப்பளிக்கின்றது. இது தொடர்பான கொள்கை விளக்க அறிக்கை யொன்றில் கருத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்ட குடிவரவு, பூர்வீகக் குடிகள் விவகார அமைச்சர் மைக்கல் மெக்கலர், முயற்சியாளர்களது எண்ணிக்கை சிறிதாக இருப்பினும். பொருளாதாரத்தில் அவர்களது பங்களிப்பு மிகப் பெரியது என்றும், அவுஸ்திரேலியாவின் பொருளாதாரத்துக்கு அவர்கள் உதவ முன்வரும் பட்சத்தில், அந்நாட்டு அரசாங்கம் அவர்களைத் தொடர்ந்து வர மேற்குமெனவும் கூறினார்.

மிங் போன்றோரை மலேசியாவிலிருந்து வெளியே இழுத்துச் செல்லும் உந்து சக்திகள் யாவை? உண்மையில் அவர்களது வாழ்க்கை சார்பு ரீதியில் ஓர் ஆடம்பர வாழ்க்கையே! சாரதியுடன் கூடிய மோட்டார் கார், மாட மாளிகை, சேவகர்கள் போன்ற அத்தனை வசதிகளிருந்தும் அவர்கள் தாய் நாட்டை விட்டுச் செல்வதேன்? அவர்களிடம் இக் கேள்வியைக் கேட்கையில், தங்களது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டே தாங்கள் செல்வதாகக் கூறுகின்றனர். மலேசியாவில் கல்வித் தரம் வெகுவாகக் குறைந்து செல்கின்றதெனக் குறிப்பிடும் இவர்கள், உயர் கல்விக்கான வாய்ப்புக்களும் மிகச் சிலவே எனவும் சுட்டிக் காட்டுகின்றனர். அங்கு தொடர்ந்தும் வாழும் பட்சத்தில் தங்கள் பிள்ளைகளது எதிர்காலத் தொழில் வாய்ப்புக்களுக்கு அவசியமான உயர் கல்வித் தகைமைகளை அவர்கள் பெற்றுக்கொள்ள முடியாது போய்விடும் என்று அவர்கள் நம்புகின்றனர். ஆனால், பெருமளவிலான இவ்வெளியேற்றத்துக்கு வேறு காரணிகளும் உள. தொழில் திருப்தியின்மை, எதிர்கால வாய்ப்புக்கள் குறைவு, செய்யும் தொழிலுக்கு உரிய மதிப்பும் அங்கீகாரமும் கிட்டாமை, போதுமான நிதிக் கொடுப்பனவுகள் இன்மை என்பன இவற்றுட் சில. மேல்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் சென்று தங்கிப் படித்து அங்குள்ள சூழ்நிலைகளில் வளர்ந்து, மலேசியாவுக்குத் திரும்பிய போது, கட்டுப்பாடு மிக்க மலேசியா வாழ்க்கைச் சூழ்நிலைக்குத் தங்களை மாற்றிக்கொள்ள முடியாது தடுமாறுவோரும் இங்ஙனம் பிற நாடுகளுக்குச் செல்கின்றனர்.

மலேசியப் பெற்றோர் பலர் பாடசாலைப் போதனா மொழியாக இன்று பஹாஸாவை (இதுதான் அங்கு தேசிய மொழி) ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் இம் மொழியிற் கல்வி கற்று 5 ம், 6 ம் வகுப்புக்களின் இறுதியில் பெறப்படும் சான்றிதழ்களைக் கொண்டு வெளிநாட்டுப் பாடசாலைகள், கல்விக் கூடங்களில் அனுமதி பெற முடியாதென்பதையும் இவர்களுட் பலர் இன்று உணர்ந்துள்ளனர். மலேசியப் பாடசாலைகளின் சான்றிதழ்களை, பெரும்பாலான வெளிநாட்டுப் பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் என்பன இப்போது ஏற்க மறுத்து வருகின்றன. ''எனது பிள்ளைகள் சுவாஹிலி மொழியிற் கல்வி பயில நேர்ந்தாலும் பரவாயில்லை. ஆனால் அது அவர்களது உயர் கல்விக்கும், தொழில் வாய்ப்புக்கும் பயன்பட்டு சர்வதேச அடிப்படையில் அவர்கள் போட்டியிட்டு முன்னுக்கு வர உதவுமாயின் அது போதுமானது'' என்று மிங் கூறுகின்றார்.

வெளிநாடுகளில் உயர் கல்வி பயில விழையும் மாணவர்கள் தற்போது ஓர் ஆங்கிலத் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்த வேண்டியுள்ளது. முன்னர், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து போன்ற நாடுகளின் பல்கலைக் கழகங்களில் மலேசியாவின் சாதாரண, உயர்தரப் பரீட்சைச் சித்திகள் உயர் கல்வித் தகைமைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து வருகிறதென அதிகாரிகளிடம் செய்யப்பட்ட புகார்கள் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயின. கடந்த டிசம்பர் மாதம், மலேசியாவின் பிரதிப் பிரதமர் டாதுக் செரி மஹாதிர் முஹம்மதிடம் (அப்போது அவர் கல்வியமைச்சராகவும் இருந்தார்) பாராளுமன்றத்தில் இதுபற்றிக் கேட்கப்பட்டபோது, மேலும் சிறந்த ஒரு வாழ்க்கைத் தர நிலைமைகளை நாடியே மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் எனவும், கல்வி அமைப்புக்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையெனவும் கூறிவிட்டார். சிங்கப்பூரிலுள்ள தொழில் சார் நிபுணர்களும் இங்ஙனம் பெருமளவில் வெளியேறுகின்றதை அவர் சுட்டிக்காட்டினார். இதற்கு, அந்நாட்டின் கல்வித் தரமும் வீழ்ந்து செல்வது காரணமாக இருக்க முடியாதா எனக் கேட்டதற்கு, அவர் சொன்ன பதில் இது: ''டாக்டர்கள், பொறியியலாளர்கள் போன்றோருக்கென மலேசியா தனது வாசல்களைத் திறந்து விடும் பட்சத்தில், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து ஏராளமானோர் இங்கு வந்து குவிந்து விடுவர் என நான் நிச்சயமாக நம்புகிறேன். அவர்கள் இங்கு வந்து நிச்சயம் தொழில் புரிவர்; இந் நாட்டின் கல்வி நிலைமை பற்றி அவர்கள் கவலை கொள்ளப் போவதில்லை; ஏனெனில், அது ஏனைய பல நாடுகளை விடச் சிறந்ததாகவே உள்ளது.''

விமர்சனங்களும், எதிர்வாதங்களும் இருந்தபோதும் இந்நம்பிக்கையும் தொடர்ந்து நிலவத்தான் செய்கிறது. இவ் விமர்சனங்கள் சில எதிர்பாராத இடங்களிலிருந்து கிளம்புவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அரசாங்கத்தை மிக அபூர்வமாகவே தாக்கி வரும் முக்கிய முன்னணித் தினசரிப் பத்திரிகையான 'நியூ ஸ்ட்ரைட் டைம்ஸ்' கூறுவது இது:—' ''பஹாஸா, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எமது தரம் வீழ்ந்து செல்வதை அவதானியுங்கள்; நாம் இதைப்பற்றி அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. குறுகிய காலத்திட்டங்கள் போன்றன எமக்கு உதவுமென நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். உண்மையில் ஏற்கனவே நம்மிடம் உள்ளவற்றை ஒன்று சேர்த்துக் காப்பாற்றிக் கொள்ள எம்மிடம் சிறியளவு சக்தியே உள்ளது.''

கல்வித்தரம் பற்றிய வாதப் பிரதிவாதங்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்தாலும், உள்ளூர்க் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் அனுமதி பெறுவது வரவரப் பல மாணவர்களுக்குப் பெரும் கஷ்டமாக மாறி வருகிறது. சில கல்வி நிலையங்கள் 90 சதவீதமான இடங்களை (கோட்டா அடிப்படையில்) 'பூமிப் புத்திரர்களுக்கு' (சுதேச இனத்தவர்) ஒதுக்கியுள்ளன. பெரும்பாலான நிறுவனங்களில் 80 சதவீதத்துக்கும் குறைவில்லாத இடங்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. பாரம்பரிய பல்லினப் பல்கலைக் கழகமான மலேசியப் பல்கலைக் கழகம் கூட இவ் வருடத்தில் 80 சதவீதத்துக்கும் கூடிய தொகையினராக பூமிப் புத்திரர்களை அனுமதித்தது. மீதி இடங்களுக்கான போட்டி மிகக் கடுமையாக இருப்பதுடன், வரவர இது மேலும் கடுமையாகிக் கொண்டு வருவதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலைமைகளை யெல்லாம் கவனத்திற் கொண்டு பார்க்கையில் பூமிப் புத்திரர்களல்லாதோர், பிற நாடுகளுக்குச் சென்று குடியேறுவதே ஒரே வழியெனக் கருதுகின்றனர்.

தொழில்சார் நிபுணர்களைப் பொறுத்தளவில், அவர்களது திருப்தியின்மையை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் டைரக்டர் டாக்டர் பிரான் ஸ்டிவிற் அண்மைய கருத்தரங்கொன்றிற் சிறப்பாகக் குறிப்பிட்டார்: ''பதவியுயர்வுகள், புலமைப் பரிசில்கள், கல்வி லீவு முதலிய வகையில் சன்மானங்களைப் பெறும் வாய்ப்புக்கள் மிக மிகக் குறைவு; அல்லது அறவே இல்லையென்றே கூறவேண்டும். விரக்தியும், எதிர்காலம் பற்றிய ஐயப்பாடும் அவர்களை நாட்டை விட்டும் வெளியேறத் தூண்டுகின்றன.'' இம் மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரியும் இன்னோர் அதிகாரி, அரசாங்க மருத்துவ சேவையில் சேருவதற்கு பஹாசா மொழி தெரிந்திருக்க வேண்டுமென்ற தேவைப்பாடும், தமது அலுவலக நண்பர்களிடையே பெரும் விரக்தியை தோற்றுவித்திருப்பதாகக் கூறுகிறார். மொழிப் பரீட்சைகட்குத் தோற்றுவதற்கென, மேலதிக நேரத்தைச் செலவிட்டுப் படிக்க வேண்டியுள்ளது. விஞ்ஞானிகளைப் போன்றே நிபுணர்கள், அறிஞர்களுக்குப் பெரும் பிரச்சினையாகவும் கஷ்டமாகவும் உள்ளதெனக் கூறும் அவர், இங்ஙனம் பரீட்சைக்குத் தோற்றும் பலர் அடிக்கடி அசித்தியடைவதானது அவர்களை மேலும் ஊக்கமிழக்கச் செய்து நம்பிக்கை இழக்கச் செய்து விடுகிறது எனவும் சுட்டிக் காட்டுகிறார். மேற்படி நிலையத்தில் மாத்திரம் மருத்துவ அதிகாரிகளுக்கும், ஆராய்ச்சி விஞ்ஞானிகளுக்குமென குறைந்தது 18 வெற்றிடங்கள் நிரப்பப்படாது உள்ளன வெனவும், கிராமப் புறங்களிலுள்ள வைத்திய சாலைகளிலும், மருந்தகங்களிலும் நிலைமை மிக மோசமாகவும், கவலையளிக்கக் கூடியதொன்றாகவும் உள்ளதெனவும் கூறுகிறார். போதிய டாக்டர்கள் இன்மையின் காரணமாக, வைத்திய சாலை உதவியாளர்கள், நோயாளிகளுக்கு சில மருந்துச் சீட்டுக்களை எழுதிக் கொடுக்க வேண்டியுள்ளமை இப் பிரச்சினையின் பாரதூரத்தைக் காட்டுகிறதெனலாம். இதுபற்றி நியூ ஸ்ட்ரைட்ஸ் டைம்ஸ் பத்திரிகை பின்வருமாறு குறிப்பிட்டது: ''வைத்தியசாலை உதவியாளர்களது அதி முக்கிய பங்களிப்புக்கு நாம் பாராட்டுத் தெரிவிக்கும் அதே வேளை, அவர்களது தகைமைகளுக்கும் தகுதிகளுக்கும் மேலாக அவர்கள் எதனையும் செய்யக் கூடாதென்பதை நினைவூட்டவும் விரும்புகிறோம். இது மனித உயிர்களோடு விளையாடுவதாகும்.''

பல நாடுகள் இன்று மலேசியர்களை மிக மகிழ்ச்சியுடன் ஏற்று தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றன. தொழில் திறமை மிக்கோர் நாட்டுக்குள் வரவும், நிரந்தரப் பிரஜாஉவுரிமை பெறவும் அவை சார்பு ரீதியாக மேலதிக வசதிகளைச் செய்து கொடுக்கின்றன. எனவே, இந்நாடுகள் வேற்று நாட்டுத் திறமைசாலிகளைக் கவரும் விஷயத்தில் ஊக்கமளிக்கவே செய்கின்றன. முன்னரெல்லாம் (1971 வரை) கட்டுப்பாடு மிக்கதாகவும், தாராளமும் கவர்ச்சியுமற்றதாகக் கருதப்பட்ட அவுஸ்திரேலியாவின் குடிவரவுக் கொள்கை, இன்று மாற்றம் பெற்று விட்டது. உண்மையில் மலேசியாவிலிருந்து வெளியேறும் மூளைசாலிகளுள் பெரும்பான்மையோர் அவுஸ்திரேலியாவுக்கே சென்று குடியேறுகின்றனர் என்பது இங்கே நினைவுகூரத்தக்கது. அவுஸ்திரேலிய தூதரகத்தின் இரண்டாம் செயலாளர் ரொஜர் ஷெல்லி தரும் தகவல்களின் பிரகாரம், பிரதிவருடமும் 3500 முதல் 4,000 மலேசியர்கள் (அதாவது மாதாந்தம் சராசரி 300 பேர்) அவுஸ்திரேலியா சென்று குடியேறுகின்றனர். எனினும், அண்மைக் காலத்தில் அவுஸ்திரேலியா செல்லும் டாக்டர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. அவர்களுக்கு நிரந்தர பிரஜாவுரிமை வழங்க முன்னர், தங்களது தொழில் தொடர்பான ஏற்பாடுகள் முன்னரே செய்திருக்க வேண்டுமெனக் கோரப்படுவதால் பிரஜாவுரிமை பெறுவதில் இப்போது சிறிது சிக்கல் ஏற்பட்டுள்ளது. அவுஸ்திரேலியர்கள் பலர் டாக்டர்களாகப் பயிற்றுவிக்கப் பட்டதையடுத்து அவர்களுக்குத் தொழில் வழங்குவதற்காக, பிற நாட்டவர்களுக்குத் தடை விதிக்க வேண்டியிருப்பதுமே இதற்குக் காரணம். மலேசிய டாக்டர்ளுக்கு வரவேற்புக் குறைவாகக் காணப்பட்டாலும், தொழில் முயற்சியாளர்களை இரு கரம் நீட்டி வரவேற்கிறது அவுஸ்திரேலியா. தாய் நாட்டுடனை தங்கள் பந்தங்களை அறுத்துக் கொண்டு ஏராளமான மலேசிய தொழில் முயற்சியாளர்களும், வர்த்தகத் திறமை மிக்கோரும் தங்களது அருந்திறன்களுடன் நாளும் பொழுதும் அவுஸ்திரேலியாவை நாடிச் சென்று கொண்டேயிருகின்றனர்.

கடந்த வருடத்தின் இக் காலப் பகுதியளவில் சுமார் 150 பேர் அங்கு குடியேறி யிருந்தனர். இவ் வர்த்தகர்கள் தங்களது புதிய நாட்டுக்கு எடுத்துச் செல்லக் கூடிய பணத்தின் உச்ச அளவு பற்றி எத்தகைய கட்டுப்பாடும் இல்லை. ஆனல், குறைந்தபட்சம் 100,000 முதல் 150,000 அவுஸ்திரேலிய டொலர்களை இவர்கள் கொண்டு வரவேண்டுமென்ற நிபந்தனை உண்டு. இப் பணத்தைக் கொண்டுவரும் பட்சத்தில் சுகாதாரம், நன்னடத்தை ஆகிய இரண்டு விஷயங்களும் தவிர்த்து வேறெவ்வித தகைமைகளும் தேவைப்படுவதில்லை.

படிக்கச் சென்று திரும்பி வராதுள்ள மாணவர்கள் எண்ணிக்கையைத் தவிர்த்து, கடந்த 12 மாத காலப்பகுதியுள் 5,000 மலேசியர்கள் இங்ஙனம் அங்கு சென்று குடியேறியுள்ளனர். தற்போது அவுஸ்திரேலியாவில் சுமார் 5000 மலேசிய மாணவர்கள் உளர். இவர்களுள் ஏறத்தாழ 70 சதவீதமானேர் தாயகம் திரும்பப் போவதில்லையென ஷெல்லி கூறுகிறார். இவர்கள் தொடர்பான முரண்பாடான நிலை என்னவெனில், இவர்களுள் அநேகர் பயிற்சி பெறச் செல்லும் தொழில்களைச் செய்வதில்லை என்பதே. இதற்கு நல்ல உதாரணமொன்றையும் அவர் சுட்டிக் காட்டினர். பட்டப் பின்னிலைப் படிப்புக்கென அவுஸ்திரேலியா சென்ற ஒரு பொறியியற் துறை மாணவர் அங்கு தங்கிவிட விண்ணப்பித்தார். ''தகைமைக்கேற்ற ஏதாவது தொழில் செய்கிறீரா?'' என வினவப்பட்டபோது 'ஆம்' எனப் பதிலிறுத்த அவர் சீன உணவுச் சாலை யொன்றில் தாம் சமையற்காரராகப் பணி புரிவதாக சொன்னர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்தபாற் கந்தோரில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒருசமூகப்பணித்திட்டமாக பொருளியல் நோக்கை வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்திப்படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்ருகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்ருெழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

விலை ரூ. 2/25

பொருளியல் நோக்கில் பிரசுரிக்கப்படுபவற்றை பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு

தெஹிவளை, துட்டுகமுனு தெரு, 135 இல் உள்ள, திஸர அச்சகத்தில் அச்சிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org